ஜோதி

ஆசிரியர் — வெ. சாமிநாத சர்மா

சுடர் 3 — பிரமாதி௵ புரட்டாசி௴ அக்டோபர்-1939 — கதிர் 3

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை ... 1

மானிட சமூகத்தின் தீர்க்கதரிசி மஹாத்மா காந்தி
—வ. அ. தியாகராஜன் M. A. ... 7

போலந்தைப்பற்றி ... 13

இலங்கையில் இந்தியர்கள்
—நாராயண சிவன் ... 17

உலகத்தில் டெலிபோன்கள் எத்தனை இருக்கின்றன ? ... 21

சிந்தையை அடைக்குந் திறன்
—எஸ். கே. நாராயண ஐயர் B. A. B. L., ... 22

எண்ணினால் மட்டும் போதாது—செய்யவும் வேண்டும்
—வ. பார்த்தசாரதி ... 24

யுத்தமும் இந்தியாவும் ... 26

அக்கா (தொடர் கதை)
—எம். வி. வேங்கடராமன் ... 33

திலகரும் சரித்திர ஆராய்ச்சியும்
—சங்கர நாராயணன் ... 38

கம்பர்—இராமன் அழியாப் பேரழகன்
—நா. லக்ஷ்மீ நரசிம்மம் ... 42

சுதந்திரத்தின் தேவைகள் யாவை ?
ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள்—2 —வெ. சா. ... 46

நெப்போலியன் எங்கே ?
—எஸ். இராமச்சந்திரன். ... 53

ஐரோப்பிய நாடுகளின் விஸ்தீரணமும் ஜனத் தொகையும் 56
அம்பிகா சரண் மஜூம்தார்
—"அரசியல் மாணுக்கன்" 57
குழந்தைகள் காண்பது என்ன ?
ஒரு ஆங்கிலப் பாடல்
—பொ. திரிகூடசுந்தரம் மொழிபெயர்ப்பு 60
அன்றாட உலகம் 61
துலாக்கோல்
—புத்தக விமர்சனம் 68
மணி அடிப்போன்—ருஷ்யக் கதை—
—மொழி பெயர்த்தவர் எஸ். கிருஷ்ணன் 74

அனுபவ ஜோதிஷர்

இவர் பல பிரபுக்களால் உண்மைப் பலன்களுக்காகப் பரிசுகள் பெற்றவர். எதிர் காலத்தைப் பற்றி 3 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் கணிக்க ரூபா 2. மாதவாரி, ஒரு வருடப் பலன் யெழுத ரூ. 5. ஆயுள் பூராவாகப் பலன் யெழுத ரூ. 25. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

Lt col. கிரஹாம் சேடன் ஹட்சிசன் D. S. O. M. C. 'W. பிளான்' 'சாபு' இவைகளின் ஆசிரியர் லண்டன், 19-12-38-ல் தெரிவிப்பதாவது:

"இவர் தெரிவிக்கும் ஜோதிட பலன்கள்" மிக அதிசயிக்கத் தக்க, உண்மையான அனுபவத்திலிருந்து வருகின்றன. எனக்கு மிகவும் முக்கியமான சில விஷயங்களில் இவர் மிகத் தெளிவான அடையாளங்களைத் தெரிவித்தார். அதன் மூலமாக நான் சௌகரியம் அடைந்து வருகிறேன்.

விலாசம்:—பிரபசர் காழியூர்-

கோவிந்தாச்சாரி,

3-2, பிராமின்ஸ் ரோட், மயிலாப்பூர், சென்னை.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்டால்

பிரதி இங்கிலீஷ் மாதம் முதல் வாரம் வெளியிடப் பெறும்.

"ஜோதி"

வருஷ சந்தா

பர்மாவுக்கு	4—0—0
இந்தியாவுக்கு	4—8—0
மலேயா முதலிய எல்லா வெளி நாடுகளுக்கு	6—0—0

தனிப் பிரதி

பர்மா, இந்தியா	0—6—0
வெளி நாடுகளில்	0—8—0

— ஏஜெண்டுகள் எங்கும் தேவை —

விளம்பரங்கள் முதலிய விபரங்கட்கு நேரே எழுதுக

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்

நெ. 47, 31-வது வீதி,

இரங்கூன்.

* * *

யுத்தம்,

ஐரோப்பாவில் யுத்தம் ஏற்பட்டிருக்கிறது. எதிர்பாராத சிநேகிதங்களும், திடீரென்ற பகைமைகளும் முற்றி, இந்தச் சண்டையைக் கொண்டு வந்து விட்டிருக்கின்றன. யுத்தமென்றால் இன்னதென்று தெரியாத எண்ணற்ற உயிர்கள், துடிதுடித்துப் புழுப்போல் சாகின்றன. விஞ்ஞானத் துறையில் நாகரிகமானது, வளர்ச்சி பெற்றுக் கொண்டு வருகிறதென்று பெருமை பேசிக்கொண்டு வந்தவர்கள், இப்பொழுது அதன் விளைவைக் கண்ணால் பார்த்தும் காதால் கேட்டும் வருகிறார்கள். இந்த விளைவுகளைத் தந்து விட்ட நாகரிகம், இனி இதனோடு தனது முற்றுப் புள்ளியைப் போட்டுக்கொண்டு விடுமா? மானிட ஜாதியை எவ்வளவு சாஸ்திரீயமாக, எவ்வளவு வேகமாக அழிக்க முடியுமோ அந்த நிலைமைக்குத் தற்போதைய நாகரிகம் வந்து விட்டது. இனி இதற்குப் போக்கிடமேது?

இந்த யுத்தத்திற்குக் காரணர் யார் என்ற ஆராய்ச்சியில் நாம் இறங்கச் சித்தமாயில்லை. ஆனால், இந்த யுத்தத்திற்கு எந்த ஒரு தனி நபரும் காரணரல்லவென்பது நமக்கு ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. இந்த யுத்தத்திற்கு மூலகாரணத்தை நாம் ஆராயப் போனால், சுமார் இருபது வருஷங்களுக்கு முன் நிறைவேற்றப் பட்ட வார்சேல் சமாதான ஒப்பந்தமென்பது தெளிவாகும். மேற்படி வார்சேல் ஒப்பந்தத்தினால் உலகத்தில் சமாதானம் ஏற்படவில்லை; யுத்தம் தள்ளி வைக்கப்பட்டது. அவ்வளவுதான். சென்ற இருபது வருஷங்களாக, எல்லா ஐரோப்பிய நாடுகளும், இந்த யுத்தத்திற்குத் தயார் செய்து கொண்டிருந்தன. அந்தத் தயாரிப்பின் பரிணாமந்தான் இந்த யுத்தம். இந்த யுத்தம் ஏற்படுவதற்கு, அநேக விதமான சக்திகள் துணை செய்திருக்கின்றன. அழுகிப் போன சமுதாய அமைப்பு, ஒரு சிலருக்கு மட்டும் நன்மை தரக் கூடிய பொருளாதார நிலைமை, அழிவுத் துறையில்மட்டும் கவனத்தைச் செலுத்திக்கொண்டு வந்த விஞ்ஞான அபிவிருத்தி முதலிய பல சக்திகளும் ஒன்று சேர்ந்ததின் விளைவே இந்த யுத்தம். இந்த அடிப்படையான காரணங்களுக்குப் பரிகாரந் தேட ராஜதந்திரிகள் முயன்றிருந்தால், இந்த யுத்தமே வந்திராது. ஆனால் இனி அதைப்பற்றிச் சிந்திப்பதில் பயனில்லை. இந்த யுத்தத்தின் பரிணாமமாக, மேற்படி ஒழுங்கீனங்கள் இல்லாமல், புதியதோர் உலகம் சிருஷ்

டிக்கப்படும் என்று நாம் நம்
வோம்.

இன்னொரு விஷயம். சென்ற யு
த்திலிருந்து பிறந்த சர்வ தேச ச
கக் குழந்தை, இந்த யுத்தத்தி
இறந்து போய் விட்டது போலிரு
கிறது. அஃது இருக்கிற இடம் கூட
தெரியவில்லை. அபிசீனியாவுக்கும்
ஸ்பெயினுக்கும், சீனாவுக்கும் இந்த
சர்வ தேச சங்கத்தைக் காட்டிக்காட
டித் தங்கள் முகத்தைத் திருப்பி
கொண்டு, வாயால் மட்டும் பேசி
கொண்டு வந்தன மேனாட்டு வல்லரசு
கள். ஆனால், அதே வல்லரசுகள்
இப்பொழுது தங்களுடைய சிருஷ்டி
யாகிய இந்தச் சர்வ தேச சங்கத்தை
மறந்து விட்டன. தாங்கள் பெற்ற குழந்தைதானே என்பதற்காக, அந்தக் குழந்தையைப் பெற்றோர்கள் என்ன வேண்டுமானாலும் செய்துவிடலாம் போலிருக்கிறது!

தற்போது, ஐரோப்பாவில் நடைபெற்றுவரும் யுத்தமானது; எந்த முகமாக எவ்வளவு காலம் நடைபெறும் என்று சொல்ல முடியாது. திடீரென்று, ருஷ்யா புகுந்து, போலந்தின் பாதி பாகத்தைத் தன் கைக்குள் போட்டுக் கொண்டு விட்டதானது, அநேகவித சிக்கல்களை உண்டுபண்ணியிருக்கிறது. இந்த ஆக்கிரமிப்பின் விளைவு என்னவாகுமென்பது இன்னும் பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுக்கே தெரியவில்லை. இதனாலேயே யுத்தத்தின் நீடிப்பை நிர்ணயித்துக் கூற முடியாமலிருக்கிறது. ஆனால் இந்த யுத்தம் எவ்வளவு விரைவில் முடிய வேண்டுமோ அவ்வளவு விரைவில் முடிய வேண்டுமென்பதே எல்லாருடைய பிரார்த்தனையுமா யிருக்கும்.

பிரதிபலித்துக் காட்டுவதாயிருக்கிறதென்பதே நமது அபிப்பிராயம். இந்தியா, தற்போது வைக்கப்பட்டிருக்கிற நிலைமையில் இதைவிட வேறுவிதமான அபிப்பிராயத்தையும் காரியக் கமிட்டி கொண்டிருக்க முடியாது.

•

ஜன நாயக தத்துவம் என்பது குறிப்பிட்ட ஒரு நாட்டாருக்கோ அல்லது ஒரு சமூகத்தாருக்கோ மட்டும் உரிமையான பொருளல்ல. அகில உலகமும் இந்தப் பொருளை நுகர உரிமை பெற்றிருக்கிறது. போலந்தின் சுதந்திரத்திற்காகக் கண்ணீர் விடும் பிரிட்டன், அந்தக் கண்ணீர் விடாமலே இந்தியாவுக்குச் சுதந்திரத்தைக் கொடுத்துவிடலாம். இந்தக் கருத்தையே, காரியக் கமிட்டி அறிக்கை வெகு தெளிவாகத் தெரிவித்திருக்கிறது.

ஆனால் இந்தக் காரியக் கமிட்டி அறிக்கையானது, பிரிட்டிஷ் ராஜதந்திரிகளிடத்தில் ஒருவித கசப்பை உண்டுபண்ணி யிருக்கிற தென்பதை

குறித்துப் பெரிதும் வருந்துகிறோம். பிரிட்டிஷ் லார்ட்ஸ் சபையில் நடைபெற்றிருக்கிற ' வாதத்தின் போது, பிரிட்டனுடைய இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில், இந்தியா, தனது அரசியல் உரிமையைப்பற்றிப் பிரஸ்தாபித் திருக்கக்கூடாதென்றும் இப்பொழுது, அந்நியர்களுடைய ஆக்ரமிப்பை அடக்கு வதிலேயே பிரிட்டன் தனது கவனமனைத்தையும் செலுத்திக் கொண்டிருக்கிறதென்றும், இந்த வேலைகள் முடிந்த பிறகு, பிரிட்டன், இந்தியாவை மறந்துவிடாதென்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில் கூறப்பட்டிருக்கிறது. இந்த வாசகங்கள் சுதந்திர ஆவல் நிறைந்த இந்தியாவுக்கு எவ்விதத்தில் திருப்தியளிக்கும்? இந்தியா கோருவதெல்லாம், தனது எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறதென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பது தான். அப்படித் தெரிவிப்பதில் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு என்ன விதமான ஆட்சேபமிருக்க முடியுமென்பது நமக்கு விளங்கவில்லை. பொதுவாக, பிரிட்டிஷ் லார்ட்ஸ் சபையில் லார்ட் ஜெட்லண்ட் பேசியிருப்பது, இந்தியப் பொதுஜன அபிப்ராயத்தினிடையே ஒரு சாந்தியை உண்டுபண்ணாது.

* * *

போலந்து

போலந்து போய் விட்டது. சென்ற வருஷம் ஜெக்கோஸ்லோவேகியாவுக்குச் சரமகவி பாடியவர்கள், இந்த வருஷம் போலந்துக்குப்பாட வேண்டியதுதான். 1914ம் வருஷத்து மகா யுத்தத்தின் போது, ருஷ்யாவின் ஆதிக்கத்திலிருந்த இந்த நாட்டை, அத்ருஷ்யப்பிடிப்பினின்று விடுவித்து ஒரு சுதந்திர நாடாக ஆக்கி மற்ற வல்லரசுகளுடன் சமதையான அந்தஸ்தை வாங்கிக் கொடுத்த ஜோஸப் பில்ஸூத்ஸ்கி இறந்து இன்னும் ஐந்து வருஷங்கள்கூட முடியவில்லை. ஜெக்கோ-ஸ்லோவேகியாவைத் தனி நாடாகச் சிருஷ்டித்து, பூகோள படத்தில் ஏற்றிவைத்த தாமஸ் மஸாரிக் இறந்த இரண்டு வருஷங்களுக்குள்ளேயே அந்த நாடு அடிமைச் சங்கிலியை மாட்டிக் கொண்டு விட்டதுபோல, இந்த நாடும், பில்ஸூத்ஸ்கி இறந்த ஐந்தாவது வருஷத்திற்குள்ளேயே ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் பங்காகிவிட்டது. உரியவர்க்கு உரிய பொருள் போய்ச் சேர்ந்துவிட்டதென்று ஜெர்மானியர்கள் ருஷ்யர்களைப் பார்த்தும், ருஷ்யர்கள் ஜெர்மானியர்களைப் பார்த்தும் பரஸ்பரம் சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம். உண்மையில், போலந்தின் சரித்திரம் ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் இடையில் அகப்பட்டுக்கொண்ட ஒரு சொக்கட்டான் காயாகவே இருந்து வந்திருக்கிறது. அந்தச் சரித்திர பரம்பரையை அனுசரித்தோ என்னவோ, இப்பொழுது போலந்தை இரண்டு நாடுகளும் பங்கிட்டுக்கொண்டு விட்டன.

இனி என்ன செய்வது? பிரிட்டனோடு சேர்ந்து கொண்டு நாமும் துக்கக் கண்ணீர் வடிக்க வேண்டியது தான். போலந்துக்குச் செய்யவேண்டிய கடமையைபிரிட்டன்மறக்கவில்லை என்று சொல்கிறார் சேம்பர்லேன். இஃது, இறந்துபோன பில்ஸூத்ஸ்கி

யின் ஆத்மாவுக்குச் சாந்தியளிக்கும் என்பதில் என்ன சந்தேகம்!

போலந்து இப்படிச் செய்திருந்தால் நன்றாயிருந்திருக்கும், அப்படிச் செய்திருந்தால் நன்றாயிருந்திருக்கும் என்று எட்டி நின்றுகொண்டு எத்தனையோ புத்திமதிகள் சொல்லலாம் இப்பொழுது. ஆனால், விஸ்டுலா நதியோடு தங்கள் தேகத்தின் ரத்தத்தைக் கலக்கவிட்ட போலிஷ்காரர்களுக்கு இவை எவ்விதத்தில் ஆறுதல் கொடுக்கும்?

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு சிறிய விஷயம் ஞாபகத்திற்கு வருகிறது. ஜெக்கோ-ஸ்லோவேகியாவை ஜெர்மனி விழுங்கத் தீர்மானித்து விட்ட போது, போலந்தும் ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டு கொள்ளையில் பங்கு கேட்கவில்லையா? டேஷன் என்ற நிலக்கரிச் சுரங்கப் பிரதேசத்தை அமுக்கி எடுத்துக் கொள்ளவில்லையா? அப்பொழுது ஜெக்கோ-ஸ்லோவேகியாவின் மீது போலந்து கொஞ்சம் அநுதாபம் காட்டியிருந்திருக்குமானால் இப்பொழுது, அதற்குக் காட்டப்படும் அநுதாபம் இன்னும் புனிதமுடையதாகவும் மதிப்புடையதாகவும் செயல் பூர்வகமாகவும் இருக்கும். ஆயினும் இனி என்ன செய்வது?

பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய மேற்கு ஐரோப்பிய வல்லரசுகளின் உதவியை போலந்து எதிர்பார்த்தது. ஆனால் அவற்றின் பூரண அநுதாபமும் கிடைத்தது. போலந்தின் வீரத்தைப் பிரிட்டிஷ் பிரதம மந்திரி அடிக்கடி பாராட்டிப் பேசுகிறார். 'உதவியளிப்பதற்குப் பதிலாக, நமது பாராட்டுதலைக் கொடுப்பது, நமது கௌரவத்திற்கும், மனச் சாட்சிக்கும் பெரிய ஊறு விளைவிப்பதாகும்' என்று 'மாஞ்செஸ்டர் கார்டியன்' பத்திரிகை கூறியிருப்பது மிகவும் பொருத்தமாயிருக்கிறது.

நண்பர்களுக்கு

ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கிற யுத்தம் காரணமாக, காகிதவிலை பெரிதும் கூடியிருப்பதால் "ஜோதி"யின் பக்கங்களைக்குறைத்து வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. தவிர, நாம் உத்தேசிக்கிறபடி அதிகமான கார்ட்டூன், படங்கள் முதலியவற்றையும் வெளியிட முடியவில்லை. தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இந்தக் குறைச்சல்களை நண்பர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறோம்.

மானேஜர்

மானிட சமூகத்தின் தீர்க்கதரிசி மஹாத்மா காந்தி

—வ. அ. தியாகராஜன்
M. A.

"மஹாத்மா காந்தியிடத்தில் நாம் பக்தி செலுத்துகிறோம். ஆனால் அது மூட பக்தியல்ல" என்று "ஜோதி" பத்திராதிபர் தமது தலையங்கத்தில் எழுதியிருக்கிறார். நாம் ஏன் காந்தியிடத்தில் பக்தி செலுத்துகிறோம் என்பதையும், ஏன் அது மூட பக்தியல்ல வென்பதையும் இப்பொழுது ஆராய்ச்சி செய்வோம்.

மஹாத்மா காந்தி, கிருஸ்து, புத்தர், ப்ளேட்டோ முதலிய உன்னத புருஷர்களில் ஒருவர். புத்தர் காலத்துக்குப் பின்னால் நமது தேசத்தில் இத்தகைய உன்னத புருஷர் ஒருவரும் இதுவரை தோன்றியது இல்லை. இரண்டாயிரம் வருஷங்களுக்கு ஒரு முறை சூரியன் உதிப்பதானால், எவ்வளவு ஆவலுடன் அதை நாம் எதிர்பார்ப்போமோ, அதே ஆவலுடன் நாம் மஹாத்மா காந்தியை வரவேற்க வேண்டும். ப்ளேட்டோ, கிருஸ்து, சாக்ரடீஸ் இவர்களெல்லாரும் பழைய காலத்தவர்களாய் விட்டார்கள். இவர்கள் ஆகாசத்தில் நக்ஷத்திரங்கள் போல் தோன்றுகிறார்கள். தூரத்திவிருப்பவை யெல்லாம் வெளிச்சமாகவே தோன்றுகிறது. ஆனால் அந்த நக்ஷத்திரத்தில் இருப்பவர்களுக்கு பூமியும் ஒரு நக்ஷத்திரமாகவே தோன்றும். வருங்காலநோக்குடன் பார்ப்பவர்களுக்கு, காந்தியும் இதுபோலவே ஒரு நக்ஷத்திரமாகத் தோன்றுவார். காந்தி காலத்தில் நாமும் இருக்கிறோம் என்பதைவிட நமக்கு வேறு எந்த விதத்திலும் கடவுளின் அருள் புலப்படவில்லை. இந்த அக்டோபர் மாதம் முதல் தேதிக்கு இவருக்கு 70 வயது முடிகிறது. இவர் சென்ற 50 வருஷங்களாக நமக்கு என்ன தத்துவங்களைக் கற்றுக்கொடுத்திருக்கிறார் என்பதைக் கவனிப்போம். காந்தி சொல்லுவது இந்தியாவுக்கு மாத்திரமே யல்லாது உலகத்திற்கு மாகும். இவருடைய கொள்கைகள், இங்கிலாந்தில், நூறு வருஷங்களுக்கு முன், பல விஷயங்களில் ஷெல்லி என்ற கவியால் எதிர் பார்க்கப்பட்டு இருக்கிறது. உலகம் முழுதும் மனிதனுடைய தேசம் என்று நினைத்து இவர்களுடைய கொள்கைகளைக் கவனிக்க வேண்டும்.

உலகத்தில் இப்பொழுது எங்கும் யுத்த முழக்கமாய் இருக்கிறது. பிரளய காலம் போல் யுத்தம் திரண்டு கொண்டு வந்து கொண்டிருக்கிறது. ஆனால் யுத்த முழக்கத்தின் பின்னால், கண்ணனுடைய குழலைப்போல் காந்தியின் வார்த்தைகள் கேட்கின்றன. காந்தியின் கொள்கைகள் புதியவை அல்ல. இப்பொழுது நாம் ஒரு யுக சந்தியில் இருக்கிறோம். ஒரு கண்ணுடன் பழைய காலத்தைப் பார்க்கிறோம். மற்றொரு கண்ணுடன் எதிர்காலத்தைப் பார்க்கிறோம். அதனால்தான் இப்பொழுது இந்தியாவில் மறு மலர்ச்சி இயக்கம் தோன்றிவிட்டது. இந்த இயக்கம் பூரணத்துவம் பெறவேண்டுமானால், நாம் எந்தெந்த விதங்களி லிருந்து காந்தியின் கொள்கைகளை அறிய வேண்டும் என்பதைக் கவனிப்போம். இயற்கையைப்பற்றியும், அன்பைப்பற்றியும், கடவுளைப்பற்றியும், அரசாங்கம், பொருளாதார ஒழுக்கம் இவைகளைப் பற்றியும், இவர் என்ன சொல்கிறார் என்பதைக் கவனிப்போம். வாழ்க்கை ஒன்றே யானால், ஒரே கருத்துடன்தான் நாம், வாழ்க்கையைக் கவனிக்க வேண்டும். அரசாங்கத்தில் ஒரு விதி, வியாபாரத்தில் மற்றொன்று, கடவுளிடத்தில் வேறொரு ஒழுக்கம் என்று பலவிதிகளைக் கொண்டு நாம் வாழ்வோமானால், இந்த விதிகளுக்கு இடையிலுள்ள பள்ளங்களில் நாமே விழுவோம். நம்முடைய முன்னேற்றமும் நமது தேசத்து முன்னேற்றமும் அதனால் வாராது. நமது எண்ணங்களெல்லாம் ஒரு சரியாய் செதுக்கின வயிரக்கல்லில், எப்படி பல பக்கங்களும் ஒன்றுபட்டு இருக்கின்றனவோ, எப்படி ஒரு பக்கத்தின் வெளிச்சத்தை அதிகப்படுத்துகின்றதோ அதுபோலவே, காந்தியின் கொள்கைகளில் ஒரு பக்கம் மற்றொரு பக்கத்தின் அருமையைக் காட்டுகின்றது.

இயற்கை உயிரற்றது அல்ல என்றும், இயற்கையின் அழகைவிட இயற்கையின் சத்தியம் முக்கியமானது என்றும் மஹாத்மா சொல்லுகிறார். இயற்கை வேறு, கடவுள் வேறு என்று இவர் கவனிப்பது இல்லை. அதனோடுகூட, 'அங்கு இங்கு என்னாதபடி எங்கும் பிரகாசமாய் நிற்கின்ற' எந்தப் பரம்பொருள் உண்டோ, அந்தப் பரம்பொருளின் கிரியா சக்தியாகவே-அதன் பிரத்தியட்ச வடிவமாகவே—இயற்கை தென்படுவதாகக் கூறுகிறார். எல்லா ஜீவராசிகளிடத்திலும் எந்தத் தெய்விக சக்தியானது ஊடுருவிப் பரந்து நின்று அனைத்தையும் ஒன்றுபடுத்தி வைக்கிறதோ அந்தச் சக்தியே அன்பு. இந்த அன்பின் வடிவந்தான் கடவுள். அதுதான் சத்தியம்.

நமது உபநிஷதங்களும் இந்தக் கருத்தையே தெரிவிக்கின்றன. ஜீவன் நிறைந்த ஒரு சக்தியின் வெளித்தோற்றந்தான் இயற்கை. 'அந்த ஒருவனே—பரம்பொருளே—எல்லாப் பொருள்களிலும் பரந்து நிற்கிறான். ஏன்? தன் அந்தரங்க நோக்கத்தை வெளிப்படுத்துவதற்காக' என்று ஸ்வேதாச்வதர உபநிஷதம் கூறுகிறது. 'எல்லாம் ப்ரஹ்ம மயம்' என்பது ஈசாவாஸ்ய உபநிஷதம். 'எவனொருவன் ஏகமாயுள்ள அந்தப் பரம்பொருளைப் பல உருவங்களாகக் காண்கிறானோ அவன்தான் மரணத்தின்மேல்

மரணத்தை அநுபவிக்கிறான்' என்று ப்ரஹதாரண்யக உபநிஷதம் கூறுகிறது. இந்தக் கருத்துக்களையே வேறு விதமாக பாபு பகவான் தாஸ் என்ற பிரபல அறிஞர் கூறுகிறபோது 'இயற்கை—கடவுளின் இயற்கை — இயற்கையின் கடவுள்-இவை இடைவிடாத ஒரு தொடர்பு' என்கிறார். நமது ஆதுநிக மஹாநாகிய மஹாத்மா காந்தியும், இயற்கையானது பல்வேறு உருவங்களாகக் காட்சி யளித்தபோதிலும், அதன் அடிப்படையில் ஒரே விதமான நோக்கமே காணப்படுகிற தென்று சொல்கிறார்.

இந்த உலகனைத்தையும் தெய்விக சக்தியொன்று பிணைத்திருக்கிறதென்பதை நாம் அநுபவ பூர்வமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அன்பு மார்க்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். 'நமது வாழ்க்கையைக் கட்டுப்படுத்தி யிருப்பது அன்பு என்னும் சட்டம்' என்கிறான் ஆங்கிலக் கவிஞனாகிய ஷெல்லி. இந்தச் சட்டத்தை மீறி நடப்பதினாலேயே, உலகத்தில் துன்பம், துயரம், மாற்சரியம் முதலியன உண்டாகின்றனவென்று அவன் கூறுகிறான். அப்படியே காந்தியடிகளும், நாமெல்லோரும் அன்புச் சட்டத்தினால் கட்டப் பட்டிருக்கிறோம் என்று சொல்கிறார். பூமியின் அணுக்களையெல்லாம் எப்படி ஆகர்ஷண சக்தியானது பந்தப்படுத்தி யிருக்கிறதோ, அப்படியே அன்புதான் மனித சமுதாயத்தைத் தளைப்படுத்தி யிருக்கிறது என்பது மஹாத்மாவின் திருவாக்கு. சமுதாயத்தில், அன்பை, ஜீவசக்தி நிறைந்த ஒரு அம்சமாகக் கொண்டு வருகிற அளவுக்குத்தான், நம்முடைய கடவுள் ஞானமும் இருக்கும் என்றும் அவர் கூறுகிறார்.

பரம்பொருள், எப்பொழுதுமே பிறரால் அணுக முடியாத ஒரே நிலைமைத்தாய் இருக்கிறதென்று ஷெல்லி எடுத்துச் சொல்கிறான். பாஹ்ய திருஷ்டிக்குப் படுகிற பொருள்களைக் கொண்டு, பரம்பொருளின் அந்தரங்கத்தை நாம் தெரிந்துகொண்டு விட்டதாகச் சொல்ல முடியாது. அந்தப் பரம்பொருள், அறிவுக்கும் கற்பனைக்கும் எட்டாதது. கடவுளைப்பற்றி இந்தியர்கள் கொண்டுள்ள கருத்தும் இதுதான். 'ஆயிரம் முகம் படைத்த கடவுள்' என்று புருஷஸூக்தம் சொல்வதும், 'உலகம் பூராவும் கடவுள் வடிவமா யிருக்கிறதென்று' பகவத்கீதை கூறுவதும் இதே கருத்தைத் தழுவித்தான். 'தியானப் பொருளாகவும், தியானஞ் செய்கிறவனாகவும் இருப்பது ஒருவனே' என்று கடவுளைப்பற்றி அடிக்கடி கூறப்படுவது இதனாலேயே. பசுக்கள், எப்படி அவைகளின் அடிச் சுவடுகளைக் கொண்டு கண்டு பிடிக்கப்படுகின்றனவோ, அப்படியே மனிதனுடைய ஆத்மாவில் பதிந்திருக்கும் கடவுளின் அடிச்சுவட்டைக்கொண்டு கடவுளைத் தெரிந்து கொள்கிறோம் என்று நமது பூர்வகாலத்து முனிவர்கள் சொல்லிப் போனார்கள். எப்படி பூமியினின் றெழுந்த மேகங்களினால், சூரியனுக்கு எவ்வித களங்கமும் ஏற்படாதோ, அதுபோல மனிதனிடத்தில் காணப்படுகிற குறைகள் காரணமாகக் கடவுளுக்குக் களங்கம் ஏற்பட்டுவிடாது. கடவுளின் முக்கால் பாகம் மோட்சத்திலும், கால் பாகம்

பூமியிலும் இருக்கிறது என்று சொன்னால், அது, கடவுள் நம் சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு பொருள் என்பதை நிரூபிப்பதற்குத்தான்.

அந்தர் முகமாக நம்மை நாமே பார்த்துக் கொள்வதன் மூலமாகத்தான் நாம் கடவுளைக் காணவேண்டும் என்று ஷெல்லி கூறுகிறான். அப்படியே பாரத தேசத்து முனிவர்களும், தியானத்தின் மூலமாகவும், ஆத்ம பரிசுத்தத்தினாலேயுமே, அடைய முடியாத அப் பரம்பொருளின் அருகாமையில் செல்ல முடியும் என்று கூறிப் போந்தார்கள். சத்தியமே கடவுள்; அன்பே கடவுள் என்பது காந்தியடிகளின் நம்பிக்கை. இதனால் பிரார்த்தனை செய்வதெல்லாம் ஏதோ ஒரு பலனைக் கோரியல்ல; மனதை ஒரு நிலைப்படுத்தி, பரம்பொருளோடு நம்மை ஒன்று படுத்துவதற்குக் கருவியாயுள்ளதுவே பிரார்த்தனை என்பது தெளிவாகிறது. மனிதனிடத்திலேயாகட்டும், இந்தப் பிரபஞ்சத்திலேயாகட்டும் எங்கும் ஏகமாய்ப் பரவியிருக்கிற சக்தி ஒன்றுதான் என்றும், மனிதனுக்கும் இயற்கைக்கும் மத்தியில் எவ்விதமான பிரிவினையும் கிடையாதென்றும் காந்தியடிகள் அடிக்கடி வற்புறுத்துகிறார்.

சாந்திக்கு மார்க்கம் சத்தியந்தான் என்று ஷெல்லி கூறுகிறான். அரசியலிலும் பொருளாதாரத்திலும், இந்தச் சத்திய மார்க்கம் நம்மை வெற்றிக்கு அழைத்துச் செல்லுமாவென்று ஷெல்லியும் காந்தியடிகளும் கருதுகிறார்கள். ஷெல்லி, உள் நோக்குடையவன்; மகாத்மா காந்தியோ, உள் நோக்கையும் வெளி நோக்கையும் ஒன்று படுத்தியிருக்கிறவர். இதனால்தான் அவரிடத்தில் கர்ம யோகமும் தியான யோகமும் கலந்திருக்கின்றன. ஷெல்லி, வெறும் தியான யோகி மட்டும்தான். ஆனால் காந்தியடிகளோ கர்மயோகியாகவும் தியான யோகியாவும் இருக்கிறார். எல்லாம் கடவுள் மயமாயிருக்கிற போது, அந்தக் கடவுள் அன்பு மயமாயிருக்கிறபோது, சத்துருவுக்கும் வைஷம்யத்திற்கும் எங்கே இடம் இருக்கிறது? நம்மிடத்திலேயுள்ள குறைகள்தான் நமது சத்துருக்கள். 'நம்மாலேயே நாம் துன்பத்தை அநுபவிக்கிறோம். வேறு யாரும், துன்பம் அநுபவிக்குமாறு நம்மைக் கட்டாயப்படுத்தவில்லை' என்று உபநிஷதங்கள் கோஷம் செய்கின்றன.

மனிதன், அரசியல் சுதந்திரம் பெற வேண்டுமானால், சத்துருவினிடத்திலேயுள்ள தெய்வீக சக்தியைத் தூண்டிவிட்டு நம் வசப்படுத்த வேண்டுமென்று ஷெல்லியும் காந்தியும் கூறுகிறார்கள். அப்படிச் செய்தோமானால், சத்துருவும் நமது நண்பனாகி விடுவான். நாம் எந்த நன்மையை நாடுகிறோமோ, அந்த நன்மை, சத்துருவின் நன்மையாகவும் முடிகிறது.

அரசியலிலே எண்ணப் பரிசுத்தம் வேண்டுமென்று காந்தியடிகள் வற்புறுத்துவது, பொதுவாக வாழ்க்கையை ஆத்மார்த்தப் பார்வையோடு பார்ப்பதுதான். சத்தியத்தையும் அஹிம்சையையுமே அவர் வற்புறுத்துகிறார். ஏனென்றால், கோபம் நிறைந்த ஒரு மனிதன், தன்னுடைய சுதந்திரத்தையே காப்பாற்றிக் கொள்ளத் தகுதி யில்லாதவனாயிருக்

கிறபோழ்து, பிறருடைய சுதந்திரத்தைக் காப்பாற்ற எப்படித் தகுதியுடையவனாகிறான்? அன்பு, ஆத்ம பரிசுத்தம், அறிவைக் கொண்டு தீமையை எதிர்த்தல் முதலியவைகள் மூலமாகத்தான் சமுதாயத்தை மேல் நிலைக்கு அழைத்துச் செல்ல முடியும். ஒரு சத்தியாக்கிரகியின் லட்சணம், தனது லட்சியத்திற்காகத் துன்பத்தை அநுபவிப்பதுதான். 'அன்பு, எப்பொழுதும் தானே துன்பத்தை ஏற்றுக் கொள்கிறது; வெறுப்புக் காட்டுவதில்லை; வன்மம் தீர்த்துக் கொள்வதில்லை' என்று காந்தியடிகள் கூறுகிறார். ஆத்ம நம்பிக்கை யுடையவர்கள், ஆத்மாவுக்கு அழிவில்லை யென்பதை அறிவார்கள். இருப்பவர், இறந்தவர் எல்லாருடைய ஆத்மாக்களும் ஒன்றுதான். இதனால்தான் சத்தியாக்கிரகம், ஆத்ம சக்தியாகிறது. சத்தியாக்கிரகி, தான் செய்கிற காரியத்தின் பலாபலன்களைப் பற்றிக் கவலைப்படுவதேயில்லை. உழைப்பது தான் அவன் காண்கிற வெற்றி.

அரசியலை ஆத்மார்த்த வழியில் கொண்டு செல்ல முடியுமானால், பொருளாதாரத்தையும் ஆத்மார்த்த வழியில் கொண்டு செலுத்தலாமல்லவா? பொருளாதாரத்தில் சம அந்தஸ்தை ஏற்படுத்துவதுதான் நாகரிகத்தின் முக்கிய நோக்கமாயிருக்க வேண்டுமென்று ஷெல்லி கூறுகிறான். ஆனால் இந்தச் சம அந்தஸ்தை அன்பினால் ஏற்படுத்த வேண்டுமே தவிர, பலாத்காரத்தினால் முடியாதென்றும் சொல்கிறான். காந்தியடிகளும், நமது பெரியோர்கள் பொதுவுடைமைக் கொள்கையை ஆதரித்து வந்ததற்கு அத்தாட்சியாக ஈசோபநிஷதத்தை ஆதாரமாக எடுத்துக் காட்டுகிறார். சொத்து வைத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொருவனும், தான் பொதுஜனங்களின் டிரஸ்டி என்ற கருத்திலேயே சொத்துக்களை நிருவகிக்க வேண்டும். பலாத்காரத்தின் காரணமாக இந்தச் சம அந்தஸ்து ஏற்படுமாயின், அஃது கடவுளுண்மையையே மறுப்பதாகும். உபநிஷதத்தில் கூறப்பட்டுள்ள தன்னடக்கம், தாராள மனப்பான்மை, மனிதர்கள், மிருகங்கள் இவைகளின் மீது தயை முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டே, காந்தியடிகள் பொருளாதாரத் துறையை நோக்குகிறார். எவ்வொருவன், தன் சகோதர மனிதர்களுக்குத் தொண்டு செய்கிறானோ அவனிடத்திலேயே கடவுள் வசிப்பதாக நமது பெரியோர்கள் கூறிப்போந்த திருவாக்கையே காந்தியடிகள் ஆதாரமாகக் கொள்கிறார்.

இப்பொழுது நடைபெறுகிற யுகத்தை இரும்புயுகம் என்று சொல்லலாம். இந்த இரும்பு யுகத்தின் வைத்தியராகத் தோன்றியிருக்கிறார் காந்தியடிகள். பலாத்கார நோயினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிற ஓர் உலகத்திற்கு, அநுபவஞானம் என்கிற அசல் தங்கத்தை அளித்திருக்கிறார். காந்தியடிகள் கூறுவதாவது :—

'நான் நினைக்கிற மோட்ச மார்க்கம் எது? என் நாட்டாருக்கு ஓயாமல் உழைப்பதுதான். அப்படி உழைப்பதன் மூலமாக மனித சமூகத்தின் நன்மையையும் நாடுகிறவனாயிருக்கிறேன். உலகத்திலே வாழும் எல்லா ஜீவராசிகளிடத்திலும் நான் என்னை ஈடுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். 'கீதாவாசகத்தின்படி, என் விரோதியுட

னும் நண்பனுடனும் நான் சமாதான மாகவே வாழவிரும்புகிறேன்.'

காந்தியடிகளைப் போன்ற மகான் கள்தான், மனித சமூகத்தின் ரட்ச கர்கள். கிரேக்க ஞானியாகிய பிளாட் டோ போன்ற பெரியோர்களுடைய வகுப்பிலேயே காந்தி யடிகளையும் சேர்க்கவேண்டும். இவர்தான், இந்தி யாவின் உண்மையான அபிப்பிராயத் தைப் பிரதி பலிக்கிறவரா யிருக்கிறார். மனிதசமூகம் முழுவதும் அடிப்படை யில் ஒன்று பட்டதுதான் என்பதை இவர் வலியுறுத்திப் பேசுகிறார். ஷெல்லி கூறிய கருத்துக்களை நாம் ஏன் வரவேற்கிறோ மென்று கேட்டால் மேனுட்டாரிட மிருந்து ஏதோகற்றுக்கொள்ள வேண்டுமென் பதற்காக அல்ல. பரஸ்பரம் ஒருவரி டமிருந்து மற்றொருவர்கற்றுக் கொள்ள வேண்டியதுதான். மனிதசமூகத்தின் தீர்க்கதரிசிகள் அனைவருக்கும் நாம் வந்தனை செய்வோம். அந்தத் தீர்க்க தரிசிகளின் வரிசையில் ஷெல்லியை யும் காந்தியடிகளையும் வைப்போம். ஷெல்லி, இங்கிலாந்தின் குரலானல், மகாத்மா காந்தி இந்தியாவின் குரல்.

மஹாத்மா காந்தி சிறுபிள்ளையா யிருந்த போழ்து

போலந்தைப்பற்றி

போலிஷ்காரர்கள், ஸ்லாவ் ஜாதியைச் சேர்ந்த ஒரு பிரிவினர். ஓடர் என்ற நதிக்கும் விஸ்டுலா என்ற நதிக்கும் இடையில் போலானி என்ற ஒரு வகை ஜாதியினர் வசித்து வந்தனர். இவர்களுடைய பெயரே இப்பொழுது போலிஷ்காரர்களுக்கு இடப்பட்டிருக்கிறது. கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டுக்கு முன்னர், போலந்தின் சரித்திரம் எவ்வாறு இருந்த தென்பதற்குப் போதிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஜீமோவிக்ஸ் என்பவன், இந்த நாட்டின் முதல் மன்னன் என்று சொல்லப்படுகிறது. 10-வது நூற்றாண்டில் மிக்ஸ்லாஸ் என்ற ஒரு மன்னன், சிம்மாதனம் ஏறி, கிறிஸ்தவ மதத்தைத் தழுவினான். அப்பொழுதுதான் இந்த நாட்டில் கிறிஸ்தவ மதம் பரவத் தொடங்கியது. மற்ற வல்லரசுகளுக்குச் சமதையான அந்தஸ்தையும் போலந்து அப்பொழுது பெற்றது. 12-வது நூற்றாண்டில் போலிஷ்காரர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் சண்டை உண்டாயிற்று. அப்பொழுது சிலீஷியா மாகாணம், போலந்தின் வசமிருந்தது. அதை ஜெர்மானியர் கைப்பற்றிக் கொள்ளப்பார்த்தனர். போலிஷ்காரர் இதற்கு இடங்கொடுக்கவில்லை.

பின்னர் 1241ம் வருஷம், மங்கோலியர்கள் இந்த நாட்டின் மீது படையெடுத்து அடியோடு அழித்து விட்டார்கள். இதன் பிறகு, போலந்து, இருந்த இடம் தெரியாமலே இருந்தது. பின்னர், வ்ளாடிஸ்லாஸ் (1305-1333) என்ற மன்னன், போலந்துக்குப் புத்துயிர் கொடுத்து அதனைத் தனி நாடாகச் செய்தான். முதன் முதலாக, 'டையட்' என்ற ஜனப் பிரதிநிதி சபை 1331ம் வருஷம் கூடியது. இதிலிருந்து சுமார் 500 வருஷ காலம், பியாஸ்த் வமிசத்தினர் இந்த நாட்டை ஆண்டு கொண்டு வந்தனர். இவர்களுடைய ஆட்சி காலத்தில்தான் போலந்து ஜெர்மனியினுடைய ஆதிக்கத்திற்கும், ருஷ்யாவினுடைய ஆதிக்கத்திற்கும் மாறி மாறி வந்து கொண்டிருந்தது. போலந்தை இப்படி மாறி மாறிப் பங்கு போட்டுக் கொள்ளும் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் போலிஷ்காரர் சும்மா யிருக்கவில்லை. தங்களுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள பகீரதப் பிரயத்தனஞ் செய்தார்கள். ஆயினும், ருஷ்யாவினுடையவும் ப்ரஷ்யாவினுடையவும் பலத்த சக்திகளுக்கெதிரே, இவர்களுடைய சுதந்திர முயற்சிகள் பலிதமடையாமற் போயின. நெப்போலியனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு, சுமார் 35 வருஷ காலம் வரை அதாவது 1864ம் வருஷம் வரை, போலந்து தனியொரு நாடாக வாழ்ந்து வந்தது. ஆனால் 1868ம் வருஷத்தில், போலந்து, மீண்டும் ருஷ்யாவின் ஆதிக்கத்தின் கீழ் வந்து

விட்டது. 1914ம் வருஷத்து ஐரோப்பிய யுத்தத்தின் போதுதான் போலந்துக்குச் சுதந்திரம் கிடைத்தது. ருஷ்யாவின் ஆதிக்கத்திலிருந்த போலந்தை ஜெர்மானியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். இந்த நாட்டுக்குச் சுதந்திரம் கொடுப்பதாகச் சொல்லி ஒரு ரீஜென்ஸி கவுன்சில் ஸ்தாபித்தார்கள். 1918ம் வருஷம் ஒரு பொதுஜன சபை கூட்டப்பட்டது. அதே வருஷம் நவம்பர் மாதம் 9ந் தேதி, போலந்து, குடியரசு நாடென்று விளம்பரப்படுத்தப்பட்டது. பில்ஸுட்ஸ்கி என்பவன் குடியரசின் முதல் தலைவனாகவும், பாதரெவ்ஸ்கி என்ற பிரபல பாடகன் முதல் பிரதம மந்திரியாகவும் தெரிந்தெடுக்கப் பட்டார்கள். குடியரசு ஏற்பட்ட பிறகு, போலந்துக்கு அமைதி உண்டாகவில்லை. ருஷ்யாவுக்கும் போலந்துக்கும் போராட்டம் ஏற்பட்டது. 8-5-1920ல், ருஷ்யாவைச் சேர்ந்த கீவ் என்ற நகரத்தை போலிஷ்காரர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள். ஆனால் ருஷ்யர்கள், சீறியெழுந்து வார்ஸா நகரம் வரை வந்தார்கள். ஆனால் போலிஷ்காரர்களுடைய வீரத்தின் விளைவாக, வார்ஸா நகரம் காப்பாற்றப்பட்டது. சுமார் ஒரு வருஷ காலமாக நடைபெற்ற இந்த யுத்தமானது, கடைசியில் 18-3-1921ல் சமாதான உடன்படிக்கையாக முடிந்தது. இந்த உடன்படிக்கைக்கு ரீகா சமாதான உடன்படிக்கை என்று பெயர். இந்த உடன்படிக்கையின்படி கிழக்கு கலீஷியா மாகாணம் போலந்துக்கு வந்து சேர்ந்தது. ஆனால் இதனோடு போலந்தின் தொல்லை நின்றபாடில்லை. வில்னா என்ற நகரம் யாரைச் சேர்ந்ததென் பதைப்பற்றி லிதுவேனியாவுக்கும் போலந்துக்கும் தகராறு இருந்தது. கடைசியில் 8-1-1922ல் மேற்படி வில்னா நகரம், போலந்தையே சார்ந்ததென்று அனைவராலும் அங்கீகரிக்கப் பட்டது.

போலந்தை ஒரு சுதந்தர நாடாக ஆக்கிய பெருமை யெல்லாம் பில்ஸுட்ஸ்கி என்ற ராணுவத் தலைவனுடையது. இவனுடைய சரித்திரம் அபூர்வமானது. இவன் ருஷ்ய ஜார் ஆட்சியின் கீழ் அநேக வருஷம் சிறை வாசமும் தேசப் பிரஷ்டமும் அநுபவித்திருக்கிறான். இவன் 1926ம் வருஷம் வரை, போலிஷ் குடியரசின் தலைவனாயிருந்தான். இவன் அரசாங்கக் காரியங்களிலிருந்து விலகி ஓய் வெடுத்துக் கொண்டிருந்த சமயத்தில், போலந்தின் தேசீய வாழ்வில் ஒரு தளர்ச்சி ஏற்படலாயிற்று. அரசாங்க நிருவாகத்தில் ஒரு கட்டுப் பாடும் ஒழுங்கும் இல்லாமலிருந்தது. அதனால் ஆங்காங்குச் சில்லறை கலகங்கள் தோன்றின. எனவே 1930ம் வருஷம், பில்ஸுட்ஸ்கி மீண்டும் அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொண்டு, ஒழுங்கையும் கண்டிப்பையும் நிலை நாட்டினான். 1935ம் வருஷம் இவன் இறந்துபோனான்.

டான்ஜிக் பிரதேச சம்பந்தமாக, போலந்துக்கும் ஜெர்மனிக்கும் சிறிது காலமாகத் தகராறு இருந்து வந்தது. கடைசியில் 1933ம் வருஷம் இது ஒரு விதமாகச் சமரஸத்திற்கு வந்து, டான்ஜிக் சுங்க வரி வசூல் சம்பந்தமாகவும், அரசாங்க நிருவாகத்திலும் போலந்திற்குச் சில உரிமைகள் அளிக்கப்பட்டன.

தனக்கென்று ஒரு துறைமுகம் வேண்டுமென்பதற்காக, 'காரிடர்' பிரதேசத்தில் உள்ள 'கிட்னியா' என்ற ஒரு நகரத்தை, 1921ம் வருஷம் போலந்து ஒரு துறைமுகமாகத் தெரிந்தெடுத்தது. இந்தக் காலத்திலிருந்து, இந்தத் துறைமுகம் மிகவும் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. இது, டான்ஜிக்கின் வியாபாரச் செல்வாக்கையும் பாதித்திருக்கிற தென்று சொல்ல வேண்டும்.

25-7-1932ல், ருஷ்யாவுக்கும் போலந்துக்கும் அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. இரண்டு நாடுகளும், யுத்தந் தொடுப்பது தங்களுடைய தேசியக் கொள்கையாக இருக்கக் கூடாதென்று இந்த ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தம் மீண்டும் 5-5-1934ல் செய்து கொள்ளப் பெற்று, 1945ம் வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதி வரை அமுலில் இருக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இங்ஙனமே, போலந்துக்கும் ருமேனியாவுக்கும் ஓர் ஒப்பந்தம் 3-3-1921ல் புகாரெஸ்ட் நகரத்தில் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் படி, இந்த இரண்டு நாடுகளும் பிற நாடுகளினால் தாக்கப்பட்டால், பரஸ்பரம் ஒருவர்க் கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டும். ராணுவ முறையில், ஒரு நாடு, மற்றொரு நாட்டுக்கு எப்படி உதவி செய்வது என்ற விவரங்களும் இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தன. ஆனால்—? ஆனால்—?

1934ம் வருஷ ஆரம்பத்தில் போலந்துக்கும் ஜெர்மனிக்கும் ஓர் அனுக்ரமிப்பு ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் பத்து வருஷத்திற்கு அமுலில் இருக்குமென்று சொல்லப்பட்டது. ஆனால்—? ஆனால்—?

இனி, போலந்து, சுதந்திர நாடாக உருப்பெற்ற காலத்திலிருந்து, அது கடைசியில் ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் இரையாகிப் போன வரையில் இருந்த சில முக்கியமான தலைவர்களைப்பற்றிச் சுருக்கமாகக் கூறுவோம்.

இக்னேஷியஸ் மோசிஸ்கி (Ignatius Moscicki)—இவர்தான், போலந்தின் கடைசி காலத்தில் குடியரசுத் தலைவராயிருந்தவர். இவர் 1-12-1867ல் மீர்ஸா நோவோ என்று ஊரில் பிறந்தார். இவருடைய தகப்பனார், முந்திய போலிஷ் சுதந்திரப் போராட்டங்களில் கலந்து கொண்டவர். எனவே, இவருக்குச் சிறு வயதிலிருந்தே தேசப்பற்று நிரம்பியிருந்தது. இவர், மருந்து செய்யும் தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆவல் கொண்டு ரீகா சர்வகலாசாலையிலும் வார்ஸா சர்வ கலாசாலையிலும் படித்தார். பின்னர் லண்டனுக்குச் சென்று, மேற்படி துறையில் உயர்தரப் படிப்பை முடித்துக் கொள்ளச் சென்றார். அப்பொழுதுதான் இவர் முதன் முதலாக பில்ஸுட்ஸ்கியைச் சந்தித்தது. அங்கு ஏற்பட்ட போலிஷ் தேசிய அபேதவாதக் கட்சியில் ஓர் அங்கத்தினரானார். லண்டனில் சுமார் ஐந்து வருஷ காலம் இருந்து விட்டு, பின்னர் போலந்துக்கு வந்து, ப்ரீபோர்க் சர்வ கலாசாலையில் விஞ்ஞான சாஸ்திர போதகாசிரியராகவும், பின்னர், மேற்படி சர்வ கலாசாலையின் விஞ்ஞானப் பகுதித் தலைவராகவும் வேலை பார்த்

தார். இவர் 'எலக்ட்ரோ—கெமிகல்' ஆராய்ச்சியில் நிபுணர். இது சம்பந்தமாக அநேக புதிய ஆராய்ச்சிகளைக் கண்டு பிடித்திருக்கிறார். அநேக நூல்களும் எழுதி யிருக்கிறார். ஐரோப்பிய யுத்தம் ஏற்பட்டதும், இவர் போலிஷ் ராணுவத்தில் சேர்ந்து வேலை செய்தார். யுத்தத்தின்போது, ஜெர்மானியர்கள் பில்ஸூஸ்கியை, மாக்டேபர்க் என்ற ஊரில் கைதுசெய்தார்கள். அதன் பிறகு இவர், போலிஷ் தேசிய அரசாங்கத்தில் ஓர் அங்கத்தினரானார்.

1926ம் வருஷம், பில்ஸூஸ்கி, குடியரசின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். ஆனால் அவர் அந்தப் பதவி வேண்டாமென்று மறுத்து, தமது ஸ்தானத்தில் மோசிஸ்கியை நியமித்தார். ஏழு வருஷத்திற்கொரு முறை குடியரசுத் தலைவர் தெரிந்தெடுக்கப் படுவது வழக்கம். 1933ம் வருஷம் இந்த ஸ்தானம் காலியானவுடனே, மோசிஸ்கி இரண்டாம் முறையாகக் குடியரசுத் தலைவர் பதவிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

தளபதி ஜோஸப் பெக் (Colonel Josef Beck)—இவர் போலந்தின் அந்நிய நாட்டு மந்திரி. 1894ம் வருஷம் பிறந்தார். ஐரோப்பிய யுத்த காலத்தில், பில்ஸூஸ்கி, போலிஷ் படையொன்றைத் திரட்டியபோது அதில் ஒரு போர் வீரராகச் சேர்ந்தார் இவர். 1925ம் வருஷத்திலிருந்து 1930ம் வருஷம் வரை பில்ஸூஸ்கியின் அந்தரங்கக் காரியதரிசியா யிருந்தார். 1930ம் வருஷம், அந்நியநாட்டு உதவி மந்திரியாக நியமிக்கப்பட்டார். 1932ம் வருஷம் அந்நியநாட்டு மந்திரியானார். அது முதற்கொண்டு, இவரே போலந்தின் அந்நிய நாட்டு விவகாரங்களுக்குப் பொறுப்பாளியா யிருந்து காரியங்களை நடத்தி வருகிறார்.

தளபதி ரிட்ஸ் ஸ்மிக்ளி (Marshal-Rydz Smigly)—இவர் 1886ம் வருஷம் பிறந்தவர். இவரும், பில்ஸூஸ்கியின் போலிஷ் படையில் சேர்ந்து உழைத்தவர். 1917ம் வருஷம், ஜெர்மானியர்கள் பில்ஸூஸ்கியைக் கைதி செய்துவிட்ட பிறகு, இவரே போலிஷ் ராணுவ ஸ்தாபனத்தின் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். போலந்துக்கும் ருஷ்யாவுக்கும் சண்டை ஏற்பட்ட காலத்தில் இவர் போலிஷ் ராணுவத்தின் ஒரு பகுதித் தலைவரா யிருந்தார். 1922ம் வருஷம், போலிஷ் ராணுவத்தின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். போலந்தில், மோசிஸ்கிக்கு அடுத்தபடியாக இவருக்குத்தான் அதிகமான செல்வாக்கு உண்டு.

வின்சென்ட் விடோஸ் (Vincent Witos)இவர் போலிஷ் குடியானவர் கட்சித்தலைவர். கிழக்குகலீஷியாமாகாணத்தில் 1874ம்வருஷம் பிறந்தார். பல வருஷகாலம் போலிஷ் பார்லிமெண்டில் ஓர் அங்கத்தினராயிருந்து வந்தார். 1930ம் வருஷம், போலிஷ் அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட வேண்டுமென்று சதியாலோசனை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு பதினெட்டு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். கடைசியில் இவர் ஜெக்கோஸ்லோவேகியாவில் அடைக்கலம் புகுந்து கொண்டார். இப்பொழுது எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லை.

இலங்கையில்—இந்தியர்கள்

—நாராயணசிவன்

I

இந்தியர்கள் விஷயத்தில் நடந்து கொள்ளும் விதத்தில் இலங்கை, தென்னாப்பிரிக்காவைத் தோல்வியடையச் செய்யக் கூடுமென்று சொல்லலாம். சென்ற சில வருடங்களாக அங்கு நிறைவேற்றி வரும் சட்டங்கள் பாகுபடுத்தக் கூடியதாகவும், இந்தியத் தொழில், மூலதனம், உழைப்பு இவைகளைப் பாதிக்கக் கூடியனவாகவுமிருக்கின்றன. 'நாளுக்கு நாள் இந்தியர்களின்' நிலைமை மோசமாய்க் கொண்டே வருகிறது. இந்தியாவோ நிலைமையை நன்கு உணர்ந்திருந்தாலும் அச்சிறு தீவின்பேரில் கடினமாக நடந்து கொள்ளுவது தங்களுடைய பெருந்தன்மைக்குப் பொருந்தாதென எண்ணியிருப்பது போல் நடந்து வருகிறது. ஆனால் இலங்கையோ இந்தச் சந்தர்ப்பத்தைக் கைவிடக் கூடாதென்று நினைப்பதாய்க் கருதக்கூடிய விதத்தில் நடந் கொண்டு வருகிறது.

சர்க்கார் தொழிலாளிகளை அகாரணமாய் வெளியேற்றுவது ஒரு முக்கியமான கொதிப்பை யுண்டாக்கும் பிரச்னை. இலங்கை சர்க்கார் நித்தியக் கூலிக்கு வேலை செய்யும் எல்லா இந்தியத் தொழிலாளிகளையும் வெளியேற்றுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து வருகிறது. அங்கிருந்து வரும் 20,000 நித்தியக் கூலிகளை வெளியேற்ற 2,50,00,000ரூபாய் செலவு செய்யக் கூடத் தயாராயிருக்கிறது. 1934ஆம் வருடத்திற்குப் பின் வேலைக்கு வந்துள்ளவர்களுக்குக் கையில் பணம் கொடுத்து அனுப்பி வைக்கும் வேலையில் முதன் முதலாக முயற்சிக்கிறது. ஆயிரம் பேர்வரை இந்தியாவுக்கு அனுப்பி விட்டிருப்பதுடன் இன்னும் 8,000பேர்களை வருட முடிவிற்குள் அனுப்பிவைக்க முனைந்திருக்கிறது. இதற்கு இலங்கை சர்க்கார் எடுத்துக் கொண்டுள்ள முறை கவனிக்கத்தக்கது. (இவர்கள்)இந்தியர்கள் சீக்கிரத்தில் தாங்களாகவே தங்கள் தாய் நாட்டுக்குப் போய் விட்டால் பணம் கொடுக்கப் படுமென்றும், பின்னால் சர்க்காரால் நீக்கப் பெற்றால் சொந்தச் செலவிலேயே போக நேரிடுமென்றும் பயமுறுத்தப் பெறுகிறார்களாம். சிங்களப் பெண்களைக் கலியாணம் செய்திருப்பவர்கள் வெளியேற்றப்பட மாட்டார்களென்று சொல்லப் படுகிறது. இதனால் குறிப்பிடக் கூடிய நன்மையொன்றும் ஏற்பட இடமில்லை. நாட்டு ஜனங்கள் வேலையில்லாமல் திண்டாடுவதே இதற்குக் காரணமென்று சொல்லப் பெறுகிறது. நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு வெளிநாட்டார் வருவதைத் தடை செய்வதைப் பற்றி ஆட்சேபிக்கவே இடமில்லை. ஆனால் ஏற்கனவே இருந்து வரும் வேலைக்காரர்களை விலக்குவது தான் அநீதமென்று சொல்ல வேண்டி

யிருக்கிறது. தகுதியான சிங்களவர் கிடையாததினால்தான் இலங்கை சர்க்கார் இவ் இந்தியர்களை நியமித்தார்களென்றால் இந்த அநீதத்தின் பிரமாணத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? வெளி நாட்டாரை வர அனுமதிப்பதால் வேலையில்லாத் திண்டாட்டம் குறையுமென்று கூட சில பெரியார்கள் அபிப்பிராயப் பட்டுள்ளார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் என்று சொல்லும்போது குறிப்பிட்ட வேலைக்கு இருவர் போட்டியிட்டு ஒருவன் வேலையில்லாமல் திண்டாடுகிறானென்று சொல்லி விட முடியாது. வேலை கிடைத்தவன் அவனுடைய பணத்தைப் பல வழிகளில் செலவு செய்து தானாக வேண்டும். அதாவது அவனுடைய ஜீவியத்தை நடத்துவதற்குப் பல சௌகரியங்கள் தேவையா யிருக்கின்றன. இச் சௌகரியங்களைப் பெறும் போது அங்கு வேலையும் உற்பத்தியாகிற தல்லவா.? ஆகவே மற்றவனுக்கு வேலை உற்பத்தி செய்யப் படுகிறதென்று காண்கிறோம். இந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டுதான் பார்லிமெண்டு சபையில் உள்நாட்டுக் காரியதரிசி 11,000 ஜெர்மானிய அகதிகள் இங்கிலாந்தில்குடியேறியதால் 15,000 பிரிட்டிஷாருக்கு வேலை கிடைத்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வளவு ஏன் சொல்ல வேண்டியிருக்கிறதென்றால் குடியேறுவதால் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியக் கூடுமென்று கூட நினைக்கும் இக்காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக பரம்பரையாக உண்மையுடன் உழைத்து வருபவர்களைக் கூட வெளியேற்ற முயற்சிப்பது பொருந்தாதென்பதை எடுத்துக் காட்டுவதற்கேயாகும்.

இந்தியர்களுக்கு இழைத்து வரும் இன்னல்களில் அடுத்தபடியானது பிரதிநிதித்துவம் சம்பந்தமானது. இவ்விஷயத்தில் இந்தியர்கள் விரும்புவதெல்லாம் இதர சமூகங்களுக்குள்ளது போலுள்ள உரிமையே. இத்தீவின் ஐந்திலொருபாகம் இந்தியர்களேயாயினும் 50 பேருள்ள சட்டசபையில் 3 ஸ்தானங்களிலதிகம் கொடுக்கப் பெற்றார்களில்லை. ஆரம்ப காலத்தில் மந்திரி சபையில் ஒரு இந்தியரும் இடம் பெற்றிருந்தார். சென்ற ஐந்து வருஷ காலங்களாக இந்தியர்களின் மீது துவேஷம் வளர்ந்து கொண்டே வருவதுடன் மந்திரி சபையில் இந்தியருக்கு இடமில்லாததாய் விட்டது.

ஐந்து வருடங்கள் இலங்கையில் வசித்து வந்த எல்லா பிரிட்டிஷ் பிரஜைகளுக்கும் சம உரிமை இருந்துவர வேண்டுமென்று டனோமியர் கமிஷன் சிபார்சு செய்தது. சிங்கள அரசியல்வாதிகள் செய்த இந்தியர்களுக்கு விரோதமான கிளர்ச்சியினால் இந்தச் சிபார்சு நிராகரிக்கப்பட்டு பல வழிகளாலும் இந்தியர்களின் வோட்டுரிமைகளைக் குறைக்க ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. 'டோமிசைல்' என்னும் பதத்திற்குச்சரியான வியாக்கியானம் கொடுக்கப்படாத போதிலும் அதற்கும் வோட்டுரிமைக்கும் சம்பந்தம் ஏற்படுத்தி இந்தியர்களுக்கு விரோதமானவர்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்ப மளிக்கப்பட்டது. இவைகளெல்லாம் கூடி இலங்கையிலுள்ள இந்தியர்களில் பெரும்பான்மையோரும் ஓட்டுரிமையை இழக்கலா

யினர். ஒவ்வொரு தேசமும் பிரஜைகளின் ஓட்டுரிமையை அதிகப்படுத்த நினைக்கும் இக்காலத்தில் சட்டங்கள் ஏற்படுத்தி இந்தியர்களை அவர்களது ஓட்டுரிமையை இழக்கச் செய்வது இலங்கை அரசாங்கத்திற்குச் சரியாகாது.

சட்ட சபைகளில் இங்ஙனமிருக்க, கிராம நிர்வாகங்களில் இந்தியர்கள் நிலையைக் கவனிப்போம். 1934ல் ஏற்பட்ட ஒரு சட்டத்தின்படி ஒவ்வொரு சமூகத்தினருக்கும் கிராம நிர்வாகத்தில் பூர்ண உரிமை இருந்து வந்தது. சில வருடங்களாக இந்தியத் தொழிலாளிகளைப் பாதிக்கும்படியான பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இது சம்பந்தமாக 1936–37ல் இந்தியா கவர்ன்மெண்டும் பொது மக்களும் போதிய கவனம் செலுத்தி இந்திய சர்க்கார் இலங்கை சர்க்காருடன் நடவடிக்கையும் எடுத்துக்கொண்டனர். இதன் பேரில் இலங்கை அரசாங்கமும் இந்தியத் தொழிலாளிகளைப் போன்று சிங்கள எஸ்டேட் தொழிலாளர்களுக்கும் இவ்வுரிமையில்லாதவாறு செய்யும்படியான திருத்தத்தை ஏற்படுத்தியது. இவ்விதம் செய்து விட்டதனால் பாகுபாடில்லாமல் செய்து விட்டார்களென்று இந்தியர்கள் கருதவில்லை. எல்லாத் தொழிலாளர்களுக்கும் உரிமைகளிருந்து வர வேண்டியதுதான் அவசியமென்று அவர்கள் கருதினார்கள். இதில் இன்னொரு விஷயமுமிருக்கிறது. இந்தியத் தொழிலாளிகளின் தொகை லட்சம்; சிங்களத் தொழிலாளிகளோவெனின் 91,000 பேர்தான். இதிலும் பல பிரிவுகளிலிருந்து வந்தன. 28,000 பேர்தான் ஸ்தலத்திலிருந்து வந்தவர்கள். 43,000 பேர் வந்து போகிறவர்கள். 9,000 பேரே நிரந்தரமாக வேலையிலமர்த்தப்பெற்றவர்கள். 11,000 பேர் அவ்வப்பொழுது வேலைக்குச் சேர்க்கப்பெற்றவர்கள். மேலே சொல்லியவைகளிலிருந்து சிங்களத் தொழிலாளிகளில் பெரும்பாலோரும் ஸ்தலத்திலிருப்பவர்களல்லவென்றும் அவர்கள் வோட்டுரிமை இழப்பதால் சிங்களவர்களை அதிகமாகப் பாதிக்காதென்றும் விளங்குகிறதல்லவா?.

அரிசிக்கட்டுப்பாடு

இந்தியர்களுக்கெதிரிடையான மற்றொரு சட்டம் 1939ம் வருடத்து ஐந்தாம் சட்டம். இச்சட்டம் 'முக்கிய பொருள் சேமிப்புச் சட்டம்' என்று அழைக்கப்பட்டது. யுத்தமோ அல்லது அதுபோன்ற இதர கஷ்டங்களோ ஏற்படுங் காலத்தில் உபயோகிப்பதன்பொருட்டு முக்கிய பொருள்களைச் சேமித்து வைப்பதற்காகவே இது ஏற்படுத்தப்பெற்றது. இச்சட்டத்தின்படி அரிசியே முக்கிய பொருளாகக் கருதப்பட்டு அரிசி இறக்குமதி செய்வோர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்வதோடு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கும் உட்படவேண்டுமென்று சொல்லப்பட்டது:—

(1) இறக்குமதி செய்பவர்கள் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட அளவுக்கதிகமாய் இறக்குமதி செய்யக்கூடாது.

(2) இறக்குமதி செய்பவர் குறிப்பிட்ட அளவு எப்பொழுதும் ரிஸர்வில் வைத்திருக்க வேண்டும்.

(3) இச்சட்டத்தின்படி இறக்குமதி செய்வோர் குறிப்பிட்ட மாதிரியில் கணக்குகளும் தஸ்தாவேஜுகளும் வைத்திருக்க வேண்டும்.

(4) குறிப்பிட்ட அளவுக்கு மேல் இறக்குமதி செய்பவர்கள் குறிப்பிட்ட விகிதப்படி ரிஸர்வை அதிகப்படுத்த வேண்டும். இந்த நிபந்தனைகளை மீறுபவர்கள் தண்டனைக்காளாவதோடு லைசென்ஸையும் இழக்கநேரிடும்.

இலங்கை அரசாங்கம் செய்துள்ள இந்த ஏற்பாடு மிக அவசியமானதே. ஆனால் இந்தப் பொறுப்பை தனிப்பட்ட இறக்குமதியாளர்களுக்கு மட்டும் ஏற்படுத்தியதுதான் நியாயமற்றதென்று சொல்ல வேண்டியிருக்கிறது. தேச அபிவிருத்திக்கு இவ்வித ஏற்பாடு மிக அவசியமானதால் தேச மக்களெல்லோருக்குமே இதில் பொறுப்பிருக்க வேண்டும். சர்க்காரே ரிசர்வ் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்; அல்லது தனிப்பட்ட இறக்குமதிக்காரர்களுக்கு சேமிப்புச் சாமானின் தரம் குறைந்து போவதை யுத்தேசித்தும், விலை வித்தியாசத்தை யுத்தேசித்தும் ஈடாகத் தகுந்த தொகை கொடுக்க வேண்டும். யுத்த கால ரிசர்விற்காக, இந்திய இறக்குமதிக்காரர்களை மட்டிலும் நஷ்டத்திற்காளாக்குவது சற்றும் நியாயமானதாகாது.

இந்தியர்களைப் பாதிக்கக் கூடிய இன்னும் பல மசோதாக்கள் சட்டசபையின் ஆலோசனையிலிருந்து வருவதுடன் பல மசோதாக்கள் தயாராய்க் கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது. சுகாதாரத்திற்காகவும், பொதுஜன அமைதிக்காகவும், குடியேறுபவர்களின் வேலைக்காகவும் என்று சொல்லி இந்தியர்களின் குடியேற்றத்தில் தடைகள் ஏற்படுத்தப் பெறுகின்றன. இலங்கைக்குள் வரும் சிங்களவரல்லாத ஒருவர் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு ஆளாக வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இலங்கையில் பிரவேசிக்கும் போது அங்கு போகும் நோக்கம் முதலியவைகளைக் காட்டி குறிப்பிட்ட ஒரு பாரம் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அவர்களுக்கு பாஸ் போர்ட்டுடன் அவர்கள் கைரேகை யடங்கிய ஒரு கார்டு கொடுக்கப்பெறும். இதன் நகலொன்று இமிகிரேஷன் அதிகாரி வைத்திருப்பார். இவ்விதக் கார்டு பெற்றவர்கள் இலங்கை சென்ற முதல் மூன்று மாதங்களுக்கு மாதந்தோறும் ரிப்போர்ட்டு செய்து கொள்ள வேண்டும். சிங்களவரல்லாத எவரும் மூன்று மாதங்களுக்கு மேல் இலங்கையிலிருக்க அனுமதிக்கப் பெறார். அங்கு தொழில் நிமித்தமாகவோ, இதர வேலை காரணமாகவோ மூன்று மாதங்களுக்கதிகம் தங்க விரும்புகிறவர்கள் தொழிலாயிருந்தால் சிங்களவர் தொழிலுக்குப் போட்டியானதில்லையென்றோ, அல்லது வேலையாயிருந்தால் அந்த வேலைக்கு சிங்களவர் அகப்படமாட்டாரென்றோ இமிகிரேஷன் ஆபீசர் சொன்னாலொழிய அனுமதிக்கப்பட மாட்டார்கள். எஸ்டேட் தொழிலாளர்களுக்கும் 'எஸ்டேட் தொழிலாளர்' என்று குறிப்பிட்டு ஒரு கார்டு கொடுக்க வேண்டுமென்று சொல்லப் பெறுகிறது. இவர்கள் வேலைகளை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்

உலகத்தில் டெலிபோன்கள் எத்தனை இருக்கின்றன?

எந்த நாட்டில்	எவ்வளவு	மொத்த ஜனத் தொகையில் 100பேருக்கு எத்தனை டெலிபோன்கள்?
அமெரிக்கா	18,500,000	14
கானடா	1,266,000	11½
நியூஜீலந்து	179,000	11¼
ஸ்வீடன்	688,000	11
டென்மார்க்	409,000	11
ஸ்விட்ஜர்லாந்து	412,000	10
ஆஸ்திரேலியா	563,000	8¼
கிரேட்பிரிட்டன்	3,116,6 2	6½
ஜெர்மனி	2,791,000	5
பிரான்ஸ்	1,482,000	3½
அர்ஜண்டைன்	381,000	2¾
தென்னாப்பிக்காயூனியன்	170,000	1¾
ஜப்பான்	1,197,000	1¾
ஐர்லாந்து	38,000	1½
இத்தாலி	561,000	1¼
போலந்து	215,000	¾
ருஷ்யா	950,000	½
க்ரீஸ்	38,000	½
ப்ரேஜில்	222,000	½
இந்தியா	74,000	1/50

டார்கள். இவர்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பெறு மென்றும், சிங்கள வரல்லாதவர்களை நியமிக்கும் தொழிற் சாலைகளுக்குப் பிரத்தியேக வரி ஏற் படுத்தப் பெறுமென்றும் சொல்லப் பெறுகிறது. இலங்கை சர்க்கார் வியாபாரத்திற்காகவோ அல்லது சுற்றிப்பார்ப்பதற்காகவோ இலங்கை செல்லும் இந்தியர்களை இழிவு படுத்த என்னென்ன செய்யலா மென்று கண்டு பிடிப்பதில் உற்சாகம் கொண்டுள்ளதாய் நினைக்க வேண்டியிருக்கிறது.

சிந்தையை யடக்குந் திறன்

—எஸ். கே. நாராயண ஐயர்
B. A., B. L.,

மாயை யென்னும் மாதொருத்தி மன மென்னும் மகனை ஈன்றாள். அம் மகன் தேர்ச்சியும் திறமையு மடைந்தால் அறிவுடையோ னாகிறான். அவ் வறிவு நல்ல முறையில் தூய விஷயங்களுக்காக உபயோகிக்கப் பெறின் கிடைக்கும் பலனும் சாலச் சிறந்த தாகவே யிருக்கும். இவ்வொரு தன்மை யிலேயே மனிதன் ஏனைய ஜீவராசி களினின்றும் வேறுபடுகின்றான். மனிதன் மனத்தகத்தே எதையும் நினையா திருப்பது கடினம். மெய்மறந்து உறங்கும் போதன்றி ஜாக்கிரதா வஸ்தையில் இருக்கும்போது எண்ண மிட்ட படியே இருப்பன். அவ்விதம் சலியாது எண்ணம் தோன்றும் மனத்தை ஒரு நிலைப் படுத்தவும் அதிலும் சிறந்த முறையில் நிறுத்தவுமே மூதறிஞர் யாவரும் முயல்வர்.

இம்மன மாகிய பொருளை யடக்கு வதோ ஒரு நிலைப்படுத்துவதோ அத்துணை எளிய தொன்றன்று. சொல்லா னதிற் சற்றும் வாராத பிள்ளையைத் தொட்டிலில் வைத்து நிம்மதியாய்த் தூங்க வென்று ஆட்டி யாட்டித் தொடையினில் கிள்ளினாற்போல நிமிஷத்திற்கு நிமிஷம் எண்ணங்களைத் தோன்ற வைத்து உடனுக்குடனே அழிக்கும். கொழுநனுக் கடங்காத துஷ்ட ஸ்திரீகளைப் போல் அடக்க ஒடுக்கமின்றி எங்கும் சென்று சஞ்சரிக்கும்; அதிலும் வெளியிற் செல்வதிலும் தனித்தே திரியும் என்றாலும் மென்மையும் இளமையுமின்றி கல்லுக்கும் இரும்புக்கும் வன்மைமிக்கது போலிருக்கும். சிற்சில சந்தர்ப்பங்களில் தானறியாததை அறிந்ததாகவும் தனக்குத் தெரிந்ததைக்காணாதது போலவும் கபடமாக ஜாலம் செய்யும் சக்தி வய்ந்தது. ஆகையால் சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற திறமரிது என்றார்.

கந்துக மதக்கரியையும் வசமாய் நடத்தலாம். கொடிய குணமுள்ளதும் இரக்கமற்றதுமான கரடி வெம்புலி முதலிய ஜந்துக்களையும் அடக்கலாம். மிருகேந்திரனை சிங்கத்தையே வசப்படுத்தி முதுகின்மேல் எடுத்துச் செல்லலாம். வெம்மை மிக்க நெருப்பில் பாதரசத்தையிட்டு பஞ்சலோகங்களைத் தம் நிலைமாற்றி உயர்ந்த பொருள்களாகவும் மாற்றலாம். சதா காலமும் இளமையோடேயே யிருக்கலாம். முதுமைப் பருவத்தையும் ஒழிக்கலாம். ஜலத்தின் மேலும் நெருப்பின் மேலும் ஒரு சிரமமின்றி நடக்கலாம். அசாத்திய மென்று நினைக்கும் அநேகம் விஷயங்

களைச் சாதித்துவிடலாம். ஆனால் நமக்குள்ளேயேயிருந்து நம்மைத் தன்வசம் செய்திருக்கும் மனத்தை மட்டும் கட்டி ஒரு நிலைப்படுத்துவது மிகவும் அரியவொரு செயலாகும்.

அத்தகைய அரிய செயலும் சாத்தியமாகக்கூடிய மார்க்கமில்லாமலில்லை. பெரியார் உதவியும் பொறுமையுமுண்டெனின் சாதிக்கவியலும். மனத்தகத்திருள் அகற்றி மட்டிலாத ஈசனைத் தனதகத்து வைத்துளோரே தன்யராவர். அவ்விதமின்றி தெட்டிலே வலியமட மாதர் வாய் வெட்டிலே சிற்றிடைமேலே அவர் நடையிலே சேலொத்த விழியிலே இனிய பாலொத்த மொழியிலே சிறு பிறை நுதற்கீற்றிலே, பொட்டியிலே அவரடியிலே புந்திதனை நுழையவிட்டு நெட்டிலே யலையாமல் அறிவிலே பொறையிலே பெரியார்கள் நேயத்திலே இருந்து ஈசன் இணைத்தாள் தொழின் அல்லது மனமொரு நிலைப்படுவதரிது.

•

இறைவன் மாட்டு அன்புமிக்க பெரியார் காராருமாணவக் காட்டைக் களைந்து, அறக்கண்டு, அகங்காரமென்னும் கல்லைப்பிளந்து, நெஞ்சகமான பூமி வெளி காணத்திருத்தி, மேன்மேல் பாராதியறியாத மோனமாம் வித்தைப் பதித்து, அன்பு நீராகவே பாய்ச்சி, அது பயிராகு மட்டும் மாமாயை வன்பறவை வந்து அணுகாத வண்ணம் நேராக நின்று, மாவுரியுடுத்து மலைவன நெற் கொதித்து, முதிர்வன சருகு தம் வாயில் வந்தால் வன்பசி தவிர்த்து, மணல், வெயிலாதி மழையால் வருந்தியும் மூல வனலைச் சிரமள வெழுப்பியும் நீரினிடை மூழ்கியும் தேகம் தமதல்ல வென்று சிற்சுகவபேக்ஷையாய் யோகம் செலுத்தி விளையோகம் புசித்துய்ந்த அன்பர்க்கே ஈசன் எளியன். அவர்க்கே இம்மனக் குரங்கை ஒரு நிலைப்படுத்துவதும் எளிது. அவர்களே கற்பக நீழலைப் பாரிடை வருத்தவும், பத்மநிதி சங்கநிதி இரு பாரிசத்திலும் பணிசெயுந் தொழிலாளர்போல் கேட்டது கொடுத்து வரவும், பிச்சை கேட்டுப் பிழைப்போரை கிரீடபதியாக்கவும், கற்பாந்த வெள்ளத்தை ஒரு சிறு கேணியிடை யடைக்கவும், கேவலம் ஓட்டினையும் ஒளிவிடும் பொன்னாக்கவும் ஆற்றலுடையவர். என்றாலும் அவர்கள் எப்போதும் 'எல்லா முனடிமையே எல்லா முன்னுடைமையே எல்லாமும் உன்னுடைய செயலே என்றும் எங்கணும் வியாபி நீ கல்லாதவறிஞனுக்குள்ளே இருந்து உணர்த்தும் கருணாகரக் கடவுளே என்றும் வணங்கா நிற்பர்.

எண்ணினால் மட்டும் போதாது— செய்யவும் வேண்டும்

—வ. பார்த்தசாரதி

அப்பா! குழந்தாய் நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும், செய்ய வேண்டும் என்று நீ நினைத்துக் கொண்டிருந்தால் போதுமா? நல்ல எண்ணம் மட்டும் இருந்தால் போதாது. அந்த எண்ணத்தைச் செயலில் கொண்டுவர வேண்டும். நாம் எண்ணியதைச் செய்கையில் கூட்டினால்தான், நம்மிடத்திலே அடங்கிக் கிடக்கும் சக்தியானது வெளிப்படும். அப்பொழுதே பிறர் நம்மிடத்தில் மதிப்பு வைப்பர். மதிப்பு வைப்பர் என்றால் என்ன அர்த்தம்? நம்மிடத்திலும் சக்தி இருக்கிற தென்பதை அங்கீகரிக் கின்றனர் என்று அர்த்தம். ஓர் ஆங்கிலப் பாதிரி, தேவாலய மொன்றில் பிரசங்கம் செய்து கொண்டிருந்த போது பின்வருமாறு கூறினான்:—

"மனிதனுடைய வாழ்க்கை, எதனால் ஆக்கப்பட்டிருக்கிறது? செயலினாலும் பொறுமை யினாலுந்தான். அவனுடைய வாழ்க்கையின் பலனை அளந்து பார்க்க வேண்டுமானால் அவன் செய்துள்ள பெரிய காரியங்களையும், பொறுமையாகச் சகித்துக் கொண்டிருந்ததையுமே வைத்துப் பார்க்க வேண்டும். ஆனால் தேக உழைப்பு ஒன்றுதான் சிறந்த உழைப்பு என்று எண்ணி விடாதீர்கள். மூளை உழைப்பு, சிந்தனை செய்கிற வேலை இவையெல்லாம், வெளிப்பார்வைக்குத் தெரியாத வேலைகள் என்பது உங்கள் ஞாபகத்தில் இருக்கட்டும். ஒரு வேலையும் செய்யாமல் சும்மா யிருக்கிற சுபாவம் இருக்கிறதே, அது, அறிவிலே மயக்கம் ஏற்பட்ட மாதிரி."

தவிர, அப்படி சோம்பேறித்தனமாகக் காலங்கழிப்பது வாழ்க்கையா என்ன? உயிரைப் பிடித்துக் கொண்டிருப்பது என்று சொல்லலாமே தவிர, வாழ்கிறது என்று சொல்ல முடியாது. சோம்பல் இருக்கிறதே, அது, உடலை மட்டுமல்ல, ஆத்மாவையும், மனச்சாட்சி என்று ஒன்றிருக்குமானால் அதனையும் மெது மெதுவாக அரித்துவிடுகிறது. உலகத்தில் பரவியிருக்கும் தீமைகளில் முக்காலே மூன்று வீசம் பங்கு சோம்பேறித்தனத்தினால் ஏற்பட்டதே யாகும். தனிப்பட்ட மனிதர்கள், தனித்தனியாக வேலை செய்யாவிட்டால், அவர்களை அங்கமாகக் கொண்ட ஜன சமுதாயந்தான் எப்படி ஒழுங்காக இயங்கும்?

நீ வேலை செய்து கொண்டு போகிறாய் என்று வைத்துக் கொள். அப்பொழுது, இடையிலே ஏதேனும் இடையூறுகள் ஏற்படுகின்றனவா? அப்படியானால், அதற்காகச் சோர்ந்து

போகாதே. தலை கொட்டாதே. சலிப்புக் கொள்ளாதே. தொட்ட வேலையைத் தொடர்ந்து செய். பிறரை வசியப்படுத்தக் கூடிய மருந்து உழைப்பைத் தவிர வேறொன்றில்லை. உழைக்காதவன் உடல், உள்ளம் முதலியன, துருப்பிடித்த இரும்பு மாதிரி. உழைப்பது சாணை பிடிப்பது போலாகும்.

நீ செய்து கொண்டு போகிற காரியத்தில் ஏதேனும் சங்கடங்கள் ஏற்பட்டால், அவற்றை நீ எவ்வாறு கொள்ள வேண்டும். தெரியுமா? உன்னைப் பரிசோதிப்பதற்காகத் தோன்றியுள்ள பரிசோதனைக்கருவி; உன் திறமையை வெளிப்படுத்தப் போகிற தூர தரிசினி. இந்தப் பரிசோதனை சமயத்தில், உழைப்பு என்ற பாறையின் மீது நாம் உறுதியாக நின்று விட்டோமானால், நம்மை அசைக்க யாராலும் முடியாது. நாம் இந்தப் பரிசோதனையில் நிச்சயம் வெற்றி பெற்று விடுவோம்.

இடையூறுகளைச் சமாளித்துக் கொண்டு போகின்றவன் தான் வீர புருஷன்; துன்பத்திலே உழன்று அதனின்று மீட்சியடைகிறவன் தான் வெற்றி நாயகன். கஷ்டம் வந்தால், அதனைத் தைரியமாக எதிர்த்து நில். அப்பொழுது உன் முகத்தில் சதா சிரிப்பு இருந்து கொண்டு இருக்கட்டும். 'நாம் அடையப் போகிற லட்சியத்திலேயே சந்தோஷமில்லை; அதற்காக நாம் செலவிடுகிற முயற்சிகளிலேதான் சந்தோஷம் இருக்கிறது' என்று அரிஸ்டாடல் என்ற கிரேக்க ஞானி சொன்னதை உனக்கு இந்தச் சமயத்தில் ஞாபகப் படுத்தட்டுமா? நாம் எப்படியாவது நாம் கொண்ட லட்சியத்தை யடைய வேண்டுமென்று உறுதி கொண்டுவிட்டோமானால், அந்த உறுதி ஒன்றே நம்மை உழைப்பதற்கு ஊக்குவிக்கும். அதுவே, நமக்கு ஒரு தைரியத்தையும் ஊட்டும். தேவையை முன்னிட்டுத்தான், நமது அறிவு, உழைப்பு முதலியன யாவுமே உரம் பெறுகின்றன. எவனொருவன், ஆரம்பத் தோல்விகளில் சோர்வு கொள்ளாமலிருக்கிறானோ அவன் இறுதியில் நிச்சயம் வெற்றியடைகிறான். உலகத்திலே தோன்றிய மஹான்கள் பலருடைய சரித்திரத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால், அவர்கள், கஷ்ட சிகரத்தின்மீதுதான் புகழ்க் கொடியை நாட்டியிருக்கிறார்கள் என்பது நன்கு தெரிய வரும்.

ஒரு பொருளை நாம் பெற வேண்டுமானால் அதற்காக நாம் உழைக்க வேண்டும். உழைக்காமல் ஒரு பொருளை அடையப்பார்ப்பது நமது பலஹீனத்தையே காட்டும். ஒரு பொருளை அடைந்துவிடுவது பெரிதல்ல, அடைந்த பொருளை அநுபவிக்க வேண்டும். அதிலே இன்பமும் காணவேண்டும். இவைகளெல்லாம் எப்பொழுது உண்டாகும்? உழைத்து அந்தப் பொருளைப் பெற்றால்தான்.

யுத்தமும் இந்தியாவும்

ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள யுத்த நெருக்கடியைப்பற்றி ஆலோசிக்க காங்கிரஸ் காரியக் கமிட்டியின் கூட்டம் 11-9-39ல் கூடி சுமார் ஐந்து நாட்களுக்கதிகமாக ஆலோசித்தது. கடைசியில் 15-9-39ல் யுத்த சம்பந்தமாக இந்தியாவின் நிலைமை யென்ன வென்பதைப் பற்றி நீண்டதோர் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. இந்த அறிக்கை, இந்திய அரசியல் சரித்திரத்தில் ஒரு முக்கிய ஸ்தானத்தைப் பெறுமாதலால் அதனை மொழிபெயர்த்துக் கீழே தருகிறோம்.

காரியக் கமிட்டி அறிக்கை

ஐரோப்பாவில் யுத்தந் தொடுக்கப்பட்டுவிட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடியைப்பற்றி, காங்கிரஸ் காரியக் கமிட்டி தீவிரமாக ஆலோசித்தது. யுத்தம் ஏற்படுமானால், (இந்தியா) தேசம் என்னென்ன கொள்கைகளைப் பின்பற்றி நடக்க வேண்டுமென்பதைப் பற்றிக் காங்கிரஸ் அடிக்கடி கூறியிருக்கிறது. சென்ற ஒரு மாதத்திற்கு முன்னர் கூட கமிட்டி, தனது அபிப்பிராயத்தை வலியுறுத்தி யிருக்கிறது. தவிர இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தார், இந்தியப் பொது ஜன அபிப்பிராயத்தைப் புறக்கணித்திருக்கின்றதைப்பற்றி, கமிட்டியானது தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கைகளைத்தான் அங்கீகரிக்கவில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்ளும்பொருட்டு, கமிட்டியானது, இந்தியா சட்டசபையின் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள், அடுத்த கூட்டத்திற்குச் செல்லக் கூடாதென்று தாக்கீது பிறப்பித்தது. இதற்குப் பிறகு, இந்தியா அரசாங்கத்தார், இந்தியா, யுத்தத்திலே சம்பந்தப்பட்டுள்ள ஒரு நாடாகக் கருதி, பல அவசரச் சட்டங்களைப் பிறப்பித்திருக்கின்றனர். இந்தியா அரசாங்கச் சட்டத்திருத்த மசோதாவை அமுலுக்குக்கொண்டு வந்திருக்கின்றனர். இன்னும், இந்திய ஜனங்களைப் பாதிக்கக்கூடியதாகவும், மாகாண அரசாங்கங்களின் அதிகாரங்களை வரம்பு கட்டக் கூடியதாகவுமுள்ள பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

பாசிஸம், நாஜீயம் ஆகிய தத்துவங்களையும், அவைகள் செயலில் கொணரப் படுவதையும், அந்தக் கொள்கை காரணமாக யுத்தம் ஒரு சிறந்த தருமமென்று புகழப்படுவதையும், அவைகளால் மனித சக்தி ஒடுக்கப்படுவதையும் கண்டிப்பதாகக் காங்கிரஸ் பல முறை வற்புறுத்திக் கூறியிருக்கிறது. மேற்படி நாஜீயமும், பாசிஸமும், அடிக்கடி அந்நிய நாடுகளை ஆக்ரமித்துக் கொள்வதையும், நீண்ட காலமாக அநுஷ்டிக்கப்பட்டு வருகிற கொள்கைகளையும் நாகரிக முறைகளையும் பாழாக்கி வருவதையும், காங்கிரஸ் பலமாகக் கண்டித்து வந்திருக்கிறது. ஏகாதிபத்தியத்தின் வலுப்பெற்ற சக்தியே, பாசிஸமும் நாஜீயமும் என்பதைக் காங்கிரஸ் கண்டு வந்திருக்கிறது. இந்த ஏகாதிபத்தியக் கொள்கைக்கு விரோதமாகவே, இந்

தியர்கள் பலவருஷங்களாகப் போராடி வந்திருக்கின்றனர். ஆகையால், ஜெர்மனியிலுள்ள நாஜி அரசாங்கமானது, சமீபத்தில் போலந்தின் மீது ஆக்ரமணம் செய்ததை காரியக் கமிட்டி பலமாகக் கண்டிக்கிறது. அந்த ஆக்ரமணத்தை எதிர்ப்பவர்களிடத்தில் அநுதாபஞ் செலுத்துகிறது.

இந்தியாவுக்காக யுத்தம் தொடுப்பதும் சமாதானம் கோருவதும் இந்திய மகா ஜனங்களாலேயே தீர்மானிக்கப்பட வேண்டுமென்று காங்கிரஸ் விதித்திருக்கிறது. இந்திய மகா ஜனங்கள் தங்களுடைய சுதந்திரத்தைப் பெறுவதற்காக அநேக ஆபத்துகளைச் சமாளித்திருக்கிறார்கள்; அநேக தியாகங்களைச் சந்தோஷமாகச் செய்திருக்கிறார்கள்.

தற்போது தொடங்கப்பட்டிருக்கும் யுத்தம், இப்போதைய ஏகாதிபத்திய நாடுகள், குடியேற்ற நாடுகள், ஏகபோக உரிமைகள் முதலியவற்றை அப்படியே ஸ்திரப்படுத்தும் நோக்கத்துடனேயே ஆரம்பிக்கப்பட்டிருக்குமானால், இந்தியா, அந்த யுத்தத்தில் எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்ளத் தயாராயில்லை. ஆனால், ஜனநாயகத்தையும் உலக ஒழுங்கையும் ஸ்தாபிப்பதே இந்த யுத்தத்தின் நோக்கமென்று தெரிந்தால், இந்தியா, இந்த யுத்தத்தில் சிரத்தை கொள்ளும். பிரிட்டிஷ் ஜனநாயகத்திற்கோ, உலக ஜனநாயகத்திற்கோ இந்திய ஜனநாயகம் முரண்பட்டதல்ல வென்பது காரியக் கமிட்டியின் உறுதியான அபிப்பிராயம்.

ஜனநாயகத்தை ஸ்திரப்படுத்தவும் அதனை உலகமெங்கணும் பரப்பவுமே, கிரேட் பிரிட்டன் இந்த யுத்தத்தில் இறங்கியிருக்கிறதென்றால், முதலாவது அது—அந்த கிரேட் பிரிட்டன்—தனது ஆக்ரமிப்புக்குட்பட்ட நாடுகளில் ஏகாதிபத்திய முறையை ஒழிக்க வேண்டும். இந்தியாவில் பூரண ஜன நாயகத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தியர்கள், தங்களுடைய அரசியல் திட்டத்தைத் தாங்களே ஒரு பொது ஜன சபை மூலம் வகுத்துக் கொள்ளும் உரிமை பெற வேண்டும். சுதந்திரம் பெற்ற ஜனநாயக இந்தியா, மற்ற சுயேச்சையான நாடுகளோடு, பரஸ்பர தற்காப்புக்காகவும், பொருளாதார ஒத்துழைப்புக்காகவும் சேர்ந்து வேலை செய்யும். அப்படிப்பட்ட சுதந்திர இந்தியா, சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் அடிப்படையாகக் கொண்ட உலக ஒழுங்குக்கு வேலை செய்யும்; உலக ஞானத்தையும் உலக சக்திகளையும் உபயோகப்படுத்திக் கொண்டு மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்கும்.

தற்போழ்து ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடி, ஐரோப்பாவிற்கு மட்டும் ஏற்பட்டிருக்கிற நெருக்கடியானதல்ல; மனித சமூகத்திற்கே ஏற்பட்டிருக்கிற நெருக்கடியாகும். உலக நிலைமை அப்படியே இருக்கிறபடி செய்து விட்டு, இது காறும் வந்தும் போயுமிருக்கிற யுத்தங்களைப் போலவும், நெருக்கடிகளைப் போலவும், தற்போதைய நெருக்கடி போய் விடாது. இந்த யுத்தத்தின் விளைவாக, உலகமே நல்ல முறையில் சீர் திருத்தியமைக்கப்படும். இப்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடியே, எதன் விளைவு என்றால், சென்ற மகா யுத்தத்திற்குப் பிறகு, அரசியல், பொருளாதார, சமுதாயத் துறைகளில், அஞ்சத்தக்க விதமாக

ஏற்பட்ட முரண்பட்டான மாற்றங்களின் விளைவுதான். இந்த முரண்பாடான சக்திகள் அடியோடு நிலைகுலைக்கப் பட்டு, ஒரு நிதானமான நிலைமை ஏற்பட்டாலன்றி உலகத்தில் இந்த நெருக்கடிகள் இருக்கவே செய்யும். ஒரு தேசத்தை மற்றொரு தேசம் ஆதிக்கம் கொள்வதும், சுரண்டுவதும் நின்று பட்டாலன்றி, எல்லாருடைய நலன்களுக்காகவுமாக இருக்குமாறு பொருளாதாரத்துறை சீர் திருத்தியமைக்கப் பட்டாலன்றி, உலகத்திலே சமமான, நிதானமான நிலைமை ஏற்படாது. இந்த நிலைமை ஏற்படுவதற்குத் திருகாணி போலிருப்பது இந்தியா. இந்தியாவைப் புறக்கணித்து விட்டு உலகத்தைச் சீர் திருத்த முடியாது. இந்தியாவில் மூலப் பொருள்கள் நிரம்பயிருக்கின்றன. ஆகையால், உலகச் சீர்திருத்தத்தில் அது முக்கியமான பங்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி அது முக்கிய பங்கெடுத்துக் கொள்வதற்கு, அது—இந்தியா—சுதந்திரம் பெற்றிருக்க வேண்டும்.

இந்தியாவிலுள்ள சமஸ்தான மன்னர்கள் பலர், தங்களுடைய சேவையையும், சக்திகளையும் ஐரோப்பாவில் ஜனநாயகம் நிலைப்பதற்காக உதவி செய்வதாக வாக்களித் திருப்பதை காரியக்கமிட்டி கவனித் திருக்கிறது. வெளியிடங்களில் ஜனநாயகம் நிலைத்துநிற்க வேண்டுமென்பது இவர்கள் எண்ணமானால், அவர்கள் முதலில் தங்கள் சமஸ்தானங்களில் ஜனநாயகம் நிலைபெறுமாறு செய்யவேண்டும். ஆனால் இப்பொழுதோ, மேற்படி சமஸ்தானங்களில் கலப்பற்ற சுயேச்சாதிகாரம் நிலவுகிறது. ஜனநாயகத்தின் உண்மையான அளவுகோல் என்னவென்றால் பாசிஸத்தையும் ஏகாதிபத்தியத்தையும் இவைகளைப் பின் தொடர்**வனவோல் வ** நம் தேச ஆக்ரமிப்பையும் ஒழிப்பதுதான். இதனைச் செய்துகொண்டுதான் புதிய சமுதாயத்தை அமைக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு புதிய சமுதாயத்தைக் காணும் விஷயத்தில், கமிட்டியார், தங்களாலான எல்லாவித உதவிகளையும செய்யத் தயாராயிருக்கின்றனர். ஆனால் ஏகாதிபத்தியக் கொள்கையைத் தழுவினாற் போல் நடைபெறும் யுத்தத்தை, அந்த ஏகாதிபத்தியத்தை இந்தியாவிலும் பிற இடங்களிலும் ஸ்திரப் படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் நடைபெறும் யுத்தத்தை கமிட்டி ஆதரிக்கவே முடியாது.

ஆகவே, நிலைமையின் நெருக்கடியை உத்தேசித்தும், சம்பவங்கள் வெகு துரிதமாக நடைபெறுவதாலும், இப்பொழுது கமிட்டியார் எவ்வித தீர்மானமான முடிவுக்கும் வாரமலிருக்கின்றனர். ஏனென்றால், எதற்காக இந்தப் போராட்டம் நடைபெறுகிறது, நோக்கம் என்ன, நிகழ் காலத்திலும் எதிர் காலத்திலும் இந்தியாவின் நிலைமை யென்ன என்பவைகளைப் பற்றிப் பூரணமாக விளக்கப் பட வேண்டுமென்று கமிட்டியார் விரும்புகின்றனர். ஆகையால், ஜனநாயகத்தைப்பற்றியும் தங்களுடைய நோக்கங்களென்ன வென்பதைப் பற்றியும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நிர்ணயமாகத் தெரிவிக்க வேண்டும். தவிர, புதிய சமுதாய அமைப்பு எப்படி இருக்க வேண்டுமென்பதையும், இந்தக் கொள்கைகள், தற்போதைய இந்தியாவில் எப்படி அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரப்படப் போகின்

றன வென்பதையும் தெரிவிக்க வேண்டும். பிரிட்டிஷார், இந்தியாவை ஒரு சுதந்திர நாடாகக் கருதி, அதனுடைய ஜனங்களின் விருப்பப்படியே அது சம்பந்தமான கொள்கைகளை அநுஷ்டிக்கப் போகின்றனரா என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

ஏகாதிபத்தியத்தையும் பாசிஸத்தையும் ஒழிப்பதே தங்களுடைய நோக்கமென்பதைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தெரிவிப்பார்களானால், அது எல்லா ஜனங்களாலேயும் வரவேற்கப்படும். அதைவிட முக்கியமானது, தங்களுடைய இந்த நல்லெண்ணத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார், கூடியவரையில் அதிகமாக அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். இப்படி உடனே பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அறிக்கை வெளியிட்டால்தான், அவர்கள், தங்கள் நோக்கங்களைச் செயலில் கொணரத் தீர்மானித்திருக்கின்றனர் என்று எல்லாரும் கருதுவார்கள். ஓர் அறிக்கை உண்மையான நோக்கத்துடன் வெளியிடப்பட்டிருக்கிறதென்பதற்கு அடையாளம், அதனை உடனே அமுலுக்குக் கொண்டு வருவதுதான். ஏனென்றால் நிகழ்கால நடவடிக்கைதான், எதிர்காலத்திற்கு வழி காட்டும்.

ஐரோப்பாவில் யுத்தம் தொடங்கி விட்டது. இதன் விளைவுகள் மகா கோரமானவை. சென்ற வருஷத்தில், யுத்தத்தினால் அபிசீனியா, ஸ்பெயின், சீனா முதலிய நாடுகளில் ஏராளமான ஜனங்கள் மடிந்து போனார்கள். நிரபராதிகளான புருஷர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் முதலியோர், ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகள் போட்டுச் சாக அடிக்கப்படுகிறார்கள். சென்ற சில வருஷங்களாகக் கோரமான காட்சிகள் பல நடைபெற்றிருக்கின்றன. உலகத்தைப் பலாத்கார நிழல் சூழ்ந்துகொண்டிருக்கிறது. இதனை உடனே நிற்கச் செய்யாவிட்டால், புராதனத்திலிருந்து வருகிற அநேக நன்மைகளை நாம் இழக்க நேரிடும். இந்த யுத்த பயங்கரத்தை ஐரோப்பாவிலும் சீனாவிலும் உடனே நிறுத்தவேண்டும். ஆனால் இதற்கு ஆணிவேர் போல் இருக்கும் பாசிஸத்தையும், ஏகாதிபத்தியத்தையும் ஒழித்தாலன்றி, இந்த யுத்த பயங்கரம் ஒழியாது. அதனை ஒழிக்கும் முயற்சியில், காரியக் கமிட்டியார், தங்களாலான எல்லா விதமான ஒத்துழைப்புகளையும் கொடுக்கத் தயாராயிருக்கின்றனர். தற்போதைய யுத்தமானது, ஏகாதிபத்திய நோக்கங்களுக்காக நடைபெற்றால், எந்தச் சமுதாய அமைப்பானது, இந்த யுத்த பயங்கரத்திற்குக் காரணமாயிருக்கிறதோ அந்தச் சமுதாய அமைப்பை அப்படியே ஸ்திரப்படுத்தச் செய்தால், உலகத்திற்கே அது விபரீதமாகும்.

இந்திய மகா ஜனங்களுக்கு, ஜெர்மானியர்களிடத்திலோ, ஜப்பானியர்களிடத்திலோ, அல்லது வேறு எந்த ஜனங்களிடத்திலோ எந்த விதமான துவேஷமும் இல்லையென்பதை காரியக்கமிட்டியார் தெரியப்படுத்த விரும்புகின்றனர். ஆனால் எந்த அரசாங்க அமைப்பானது, சுதந்திரத்தை மறுக்கிறதோ, பலாத்காரத்தையும் ஆக்ரமிப்பையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறதோ அப்படிப்பட்ட அரசாங்க அமைப்பின் மீது காரியக் கமிட்டியாருடைய போராட்டமெல்லாம் ஒரு ஜனங்களை மற்றொரு ஜனங்கள் வெற்றி கொள்கிறதையோ,

மஹாத்மா காந்தி

பாரிஸ்டர் பரீட்சையில் தேறினார்

தோல்வியுடைந்த ஜனங்களிடத்தில் சமாதான ஒப்பந்தத்தைத் திணிப்பதையோ கமிட்டியார் எதிர் பார்க்கவில்லை. ஆனால் எல்லா நாடுகளிலுமுள்ள எல்லா ஜனங்களும் வெற்றியடைய வேண்டுமென்றும், பலாத்கார த்தினின்று உலகம் விடுதலை பெறுவதையுமே கமிட்டியார் எதிர் பார்க்கின்றனர்.

இந்தியாவிலுள்ளவர்கள், தங்களுடைய உட்கலகங்களையும், மனஸ்தாபங்களையும் ஒழித்துவிட வேண்டுமென்றும், இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில், லட்சியத்திலே உறுதியும், எப்படியாவது சுதந்திரத்தையடைய வேண்டுமென்ற நிச்சயமும் கொள்ள வேண்டுமென்றும் கமிட்டியார் நம்பிக்கையோடு கேட்டுக் கொள்ளுகின்றனர்.

மஹாத்மா காந்தி

தென்னுப் பிரிக்காவில் பாரிஸ்டர்

தென்னுப் பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத்திரும்பிவந்ததும்



தென்னுப்பிரிக்காவின் சிறையொன்றில்

சத்தியாக்கிரக இயக்கம் தொடங்கப்பட்ட தருணம்

ஸ்ரீ சரத் சந்திர சட்டர்ஜி எழுதிய

: அக்கா :

—எம். வி. வேங்கடராமன்

(சென்ற மாதத்தொடர்ச்சி)

மூன்றுவது அத்தியாயம்

நாலு வருஷத்துக்கு முந்தி விரஜ பாபுவின் மனைவி காலமாகி விட்டாள். வயோதிகத்தின் இந்த துக்கத்தைக் கிழவர்கள்தான் உணர முடியும். ஆனால் அது போகட்டும். அதைவிட அவருக்குப் பெரிய கஷ்டம் என்னவென்றால் பதினைந்துவது வயதில் அவருடைய அருமை மகள் கைம் பெண் ஆனதுதான். அவர் ஏக கட்டுப்படலாகத் தம் பெண்ணுக்கு கலியாணம் பண்ணி வைத்தார். அவரே பணக்காரர். ஆதலால் அவர் பணத்தை லக்ஷியம் பண்ணவில்லை. பையன் பணக்காரனு இல்லையா என்பதையும் கவனிக்கவில்லை. பையனுக்கு எழுதப் படிக்கத் தெரியுமா, அழகனு, ஒழுங்கானவனு என்பதை மாத்திரம் கவனித்து அவர் மாதவிக்கு மணம் புரிந்து வைத்தார்.

பதினோராவது வயதில் மாதவிக்கு விவாகம் ஆயிற்று. மூன்று வருஷங்கள் வரை புக்ககத்தில் இருந்தாள். அங்கே ஆதரவுடன் பாதுகாக்கப் பட்டதும் வாஸ்தவம். ஆனால் யோகேந்திர நாதன் தொலைந்துவிட்டான். சாகும் சமயத்தில் மாதவி அடித்து அழுதுகொள்ள ஆரம்பித்தாள்.

அவன் பிரியமான குரலில் சொன்னான், 'மாதவி! உன்னை விட்டுப் போக வேண்டுமே என்றுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. நான் உன்னைச் சரியாகக் கவனிக்க முடிய வில்லை—போஷிக்க முடியவில்லை—'

பேசும்போதே யோகேந்திரனின் எலும்பு மார்பில் கண்ணீர் ஓடியது. அதைத் துடைத்துக் கொண்டே மாதவி, 'மறுபடி நான் உங்களுடைய சரணங்களை அடையும்போது என்னை ஆதரியுங்கள்' என்றாள்.

'மாதவி! என் சுகத்திற்காக சமர்ப்பிக்க இருந்த உன்னுடைய வாழ்க்கையை எல்லோருடைய சுகத்திற்காகவும் செலவழி. கவலை நிறைந்த முகமுள்ளவர்களைக் கண்டால் அவர்களைச் சந்தோஷப்படுத்த பிரயத்தனம் செய். நான் வேறு என்ன சொல்லுவது? மாதவி'.

மறுபடியும் கண்ணீர்த் துளிகளை மாதவி துடைத்தாள்.

'நீ நல்ல வழியை விட்டு விலகாதே. நீ செய்யும் புண்ணியத்தால் தான் நாம் மறுபடி சேர முடியும்'.

அன்றிருந்து மாதவி மாறிப்போய் விட்டாள். கோபம், ஹிம்சை, துவேஷம் எல்லாவற்றையும் கணவரின் சிதையோடு எரித்து கங்கை நீரில் கரைத்துவிட்டாள்.

விதவையாகி விட்டால் மனுஷருடைய ஆசாபாசங்கள் எல்லாம் அவிந்துவிடுவதில்லை. அவை தோன்றும் போதெல்லாம், மாதவி தன் புருஷனைப்பற்றி நினைத்துக் கொள்வாள். 'அவர்தான் போய் விட்டாரே; எனக்கு இதெல்லாம் எதற்கு? எதற்காகப் பிறர்மீது பொறாமைப்பட வேண்டும்? எதற்காகப் பிறரை அழச் செய்ய வேண்டும்?' என்றெல்லாம் யோசிப்பாள். முதலிலேயே அவளுக்கு இந்த சின்னத்தனங்கள் எல்லாம் கிடையாது; அவள்பெரிய வீட்டுப் பெண்; ஹிம்ஸிக்கவோ பொறாமைபடவோ அவளுக்குத் தெரியாது.

அவளுடைய தோட்டத்தில் பல மலர்கள் மலர்கின்றன. முன்பு அவள் அவைகளை மாலையாகக் கோர்த்து தன் கணவர் கழுத்தில் போடுவது வழக்கம், ஆனால் அவர் போய்விட்டாரே என்று அவள் அந்த பூச்செடிகளை வெட்டி எறிந்து விடவில்லை. இப்போது அவள் அந்த பூக்களை கோர்க்க உட்காருவதில்லை. ஆனால் அவைகளைக் கூடியவரை ஒன்று சேர்த்து ஏழை எளியவர்களுக்குப் பங்கிட்டுக்கொடுப்பது வழக்கம். அவ்வாறு செய்ய அவள் தயங்குவதோ—கருமித்தனம் செய்வதோ கிடையாது.

விரஜபாபுவின் மனைவி பரலோகப் பிராப்தி அடைந்த நாளிலிருந்து அவர் வீட்டில் ஒழுங்கு இல்லாது போய் விட்டது. வீட்டில் ஒவ்வொருத்தருக்கும் தனித் தனியான கவலைகள்; இன்னொருத்தரைப் பற்றி யாரும் கவலைப் படுவதில்லை. எல்லோருக்கும் தனித்தனியாக வேலையாட்கள் இருந்தார்கள்; அவர்கள் தங்கள் தங்கள் யஜமானர்களுடைய வேலைகளைத்தான் கவனிப்பார்கள். சமையலறையில் சமையற்காரன் சமைப்பான்; அன்ன சத்திரத்தில் கூடுவது போல் எல்லோரும் கூட்டமாகப் போய் உட்காருவார்கள்; சிலருக்கு சாப்பாடு கிடைக்கும்; சிலருக்குக் கிடைக்காது; கிடைக்காதவர்களை ஏன் என்று யாரும் கேட்கமாட்டார்கள்.

ஆனால் புரட்டாசி மாதத்தில் கரைபுரண்டோடும் கங்கா நதியைப் போன்ற தன் அழகுடனும் அன்புடனும் தன் தகப்பனார் வீட்டில் மாதவி காலடி எடுத்து வைத்ததும் வீட்டில் ஒரு புது வஸந்தகாலம் ஆரம்பித்தாற் போலிருந்தது. எல்லோருக்கும் மாதவி 'அக்கா' ஆகிவிட்டாள். வீட்டில் வளரும் நாய் முதல் கொண்டு 'அக்கா'வைச் சாயங்காலம் ஒரு தடவை பார்க்காவிட்டால் திருப்தி அடையாது. அதுக்குக் கூட அவள் அன்பு மூர்த்தி என்று தெரியும் போலிருக்கு! வீட்டுஎஜமானன் முதல் வேலைக்காரன் வரை எல்லோருக்குமே 'அக்கா'வைப் பற்றின நினைவு. எல்லோருக்கும் அவளிடம் அலாதியான அன்பு.

சுவர்க்கத்தில் கற்பக விருக்ஷம் என்பதாக ஒரு மரம் இருக்கிறதென்று கேள்விப் பட்டிருக்கிறோம்; அதன் அடியில் நின்றால் நாம் வேண்டுவதெல்

லாம் கொடுக்குமாம்; அதை நாம் பார்த்ததில்லை; பார்ப்போமா என்பதும் சந்தேகம்தான்! ஆனால் விரஜ பாபுவின் வீட்டில் எல்லோரும் ஒரு கல்பதருவைக் கண்டு விட்டார்கள். அதன் கீழ் 'இது இல்லை' என்று கை விரிக்கிறார்கள்; 'கிடைத்தது' என்ற சந்தோஷத்துடன் திரும்புகிறார்கள்.

இந்தமாதிரி குடும்பத்தில் சுரேந்திரன் ஒரு புது மாதிரி வாழ்வு வாழ வழி கண்டுபிடித்தான். எல்லோரும் ஒருத்தர்மீதே எல்லா பாரத்தையும் ஏற்றி யிருப்பதைக் கண்ட அவனும் தன்சுமையை அந்த ஆள்மீது சுமத்தத் தயங்கவில்லை. ஆனால் அவனுடைய போக்கின்மாதிரியே வேறு. 'அக்கா' என்று ஒரு ஜீவ பதார்த்தம் வீட்டில் இருந்துகொண்டு எல்லோரையும் கண்காணிக்கிறது, எல்லோருடைய குறையைத் தீர்க்கிறது, வேண்டியவர்க்கு வேண்டியபடி கொடுக்கிறது என்றுதான் அவன் நினைப்பு. கல்கத்தா வீதிகளில் அலைந்த அவனுக்கு சுயமாக வாழக் கொஞ்சம் தெரிந்தது; ஆனால் அந்த வழக்கம் இங்கே வந்ததும் மறுபடி விட்டுப் போய்விட்டது; அப்படி அலைந்ததாகவோ அலைய நேரும் என்றோ அவன் எண்ணிப் பார்க்கவில்லை.

சட்டை, மேல் வேஷ்டி, செருப்பு' குடை, தடி முதலிய எல்லாச் சாமான்களும் வேளா வேளையில் தயாராக இருக்கும். முதலில் அவன் குதூகலமாய், 'இதை எல்லாம் யார் அனுப்பினது?' என்று கேட்பான். 'அக்கா தான்' என்று பதில் வரும். இப்போது அதுவும் சகஜமாகிவிட்டது. தனக்கு சிற்றுண்டிக்காக வரும் பக்ஷணத்தைக்கூட அக்கா தொட்டு அனுப்பி யிருக்கிறாள் என்று அவனுக்குத் தோன்றிக்கொண்டிருந்தது.

ஒரு நாள், கணக்குப் போட உட்கார்ந்தபோது 'காம்பஸ் இல்லையே' என்று ஞாபகம் வந்தது. உடனே அவன் பிரமீளாவிடம், 'பிரமீளா, அக்கா கிட்டே போய் காம்பஸ் கொண்டு வா' என்று சொல்லி அனுப்பிவிட்டான்.

அக்கா வண்டை 'காம்பஸ்' ஏது, அதை வைத்துக் கொண்டு அவள் என்ன செய்யப்போகிறாள் என்று அவன் யோசிக்கவே யில்லை. ஆனால் 'அக்கா' 'இல்லை' என்று சொல்லவில்லை. உடனே ஒரு ஆளைக் கடை வீதிக்கு அனுப்பினாள்.

சாயந்திரம் சுற்றிவிட்டு வந்த சுரேந்திரன், மேஜை மீது 'காம்பஸ்' கிடப்பதைக் கண்டான். மறுநாள் காலை பிரமீளா, 'ஸார்! அக்கா நேத்தைக்கு இதைக் கொடுத்தாள்' என்று அது அங்கே வந்த விவரத்தைத் தெரிவித்தாள்.

நடு நடுவில் அவன் கேட்கும் சாமான் மாதவியை எக்கச் சக்கத்தில் மாட்டிவிடும். ரொம்ப சிரமப் பட்டு அதை வாங்கித் தர வேண்டியதாயிருக்கும். ஆனால் 'அது கிடையாது' என்று அவள் சொல்லணுமே—ஊஹூம்!

சில சமயம் அவன் வலுக்கட்டாயமாக பிரமீளாவிடம் சொல்லி அனுப்புவான். அக்காவண்டை போய் 'அஞ்சு பழைய 'தோதி' கொண்டு வா! பிச்சைக்காரன்களுக்குக் கொடுக்கணும்!' ஆனால் பழசா, புதுசா என்று பார்த்துக்கொண்டிருக்க 'அக்

கா'வுக்கு நேரம் எது? உடனே அவள் தான் அணியும் 'தோதி'க்களில் அஞ்சைக் கொடுத்தனுப்பி விட்டு மேல் ஜன்னலில் இருந்து எட்டி பார்ப்பாள். நாலைந்து ஏழைகள் தோதிக்களை எடுத்துக்கொண்டு ஆனந்தமாக கூத்தடித்துக் கொண்டு போவதைக் காண்பாள்.

இம்மாதிரி சுரேந்திரன் செய்யும் தொல்லைகளை எல்லாம் அவள் சகிக்க வேண்டி யிருந்தன. ஆனால் காலக் கிரமத்தில் அவளுக்கு அவையெல்லாம் பழக்கமாகிவிட்டன. வீட்டில் ஒரு புது மனுஷன் அடிக்கடி உபத்திரவம் தந்துகொண்டிருக்கிறான் என்பதைக்கூட அவள் மறந்து விட்டாள்.

அத்தோடு போகவில்லை. அந்த புது ஆசாமியை அவள் எப்போதும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டி யிருந்தது. அடிக்கடி அவனை விசாரித்துக் கொண்டிருக்க வேண்டி யிருந்தது. அவன் தனக்கு வேண்டிய சாமானைக் கேட்டு வாங்கிக் கொண்டாலே எவ்வளவோ தேவலை; அதனால் மாதவியின் பாதி கஷ்டம் தீர்ந்துவிடும். ஆனால் அந்த ஆள் தனக்காக ஒன்றையும் கேட்பதில்லை. முதலில் மாதவியால் அவனுடைய சுபாவத்தை அறிய முடியவில்லை; அவன் புத்தி எப்போதுமே சஞ்சலமாக இருக்கும் என்று அவள் நினைக்கவில்லை. காலையில் 'டீ' ஜில் விட்டுப்போயும் அவன் குடிக்காமல் உட்கார்ந்திருப்பான். காலையில் ஆகாரம் செய்யவேணும் என்கிற ஞாபகம் கூட அவனுக்கு இராது; ஒவ்வொரு சமயம் சாப்பாட்டை நாயிடம் போட்டுவிட்டுப் போய் விடுவான். சாப்பிட உட்கார்ந்தால் கவனம் இலையில் இருக்காது. நல்ல நல்ல தின்பண்டங்களை ஒதுக்கி வைத்துவிடுவான். இல்லாவிட்டால் ஒளித்து வைத்து விடுவான். அதையெல்லாம் பார்த்து வேலைக்காரர்கள், 'வாத்தியார் பித்துக்குளி போலிருக்கு; சரியாகக்கூட சாப்பிடாமல் எப்போ பார்த்தாலும் புஸ்தக ஞாபகம்!' என்று சொல்லிக்கொள்வார்கள்.

நடு நடுவில் விரஜபாபு 'வேலைக்கு ஏதாவது ஏற்பாடு ஆச்சா' என்று கேட்பார். சுரேந்திரன் சரியாகப் பதில் அளிக்காமல் மழுப்பிவிடுவான். எல்லாவற்றையும் கேட்டு மாதவி, வாத்தியார் வேலைக்காகப் பிரயாசப் படவில்லை, வேலை செய்ய அவருக்கு இஷ்டமும் இல்லை, கிடைத்ததே போதும் என்று இருக்கிறார் என எண்ணிக்கொள்வாள்.

காலையில் பத்து மணி அடித்ததும் அக்காவிடமிருந்து சாப்பாட்டுக்கும் ஸ்நானத்துக்கும் உத்திரவு வரும். சரியாகச் சாப்பிடாவிட்டால் அக்காவின் சார்பாகப் பிரமீளா புகார் செய்வாள். ராத்திரி ரொம்ப நேரம் படித்துக் கொண்டிருந்தால் வேலைக்காரன் 'சுவிச்சை' அமுக்கிவிட்டுப் போவான். என்ன சொன்னாலும் கேட்கமாட்டான். 'ஏன்?' என்றால் 'அக்கா ஆக்ஞை' என்பான்.

ஒரு நாள் மாதவி சிரித்துக் கொண்டே அப்பாவிடம் சொன்னாள், 'அப்பா, பிரமீளாவுக்கும் அவளுடைய வாத்தியாருக்கும் வித்தியாசமே இல்லை—'

'ஏன் அம்மா?'

'ரெண்டு பேருமே குழந்தைகள். இந்த சமயத்தில் இதுதான் செய்ய வேண்டும். இது செய்யக்கூடாது என்று பிரமீளாவுக்குத் தெரியாது. அவளுடைய ஸாருக்கும் அப்படித்தான் ஒன்றும் தெரியாது.'

விரஜபாபு முழித்துக் கொண்டு நின்றார்.

'உன் மகளுக்கு இன்ன சமயத்தில் இன்ன சாமான் வேணும் என்று தெரியுமா?'

'தெரியாது?'

'அகாலத்தில் உபத்திரவம் செய்கிறாளோ?'

'ஆம், செய்கிறாள்.'

'வாத்தியார் கூட அப்படித்தான் செய்கிறார்!'

விரஜபாபு சிரித்துக் கொண்டே சொன்னார். 'பையனுக்குக் கொஞ்சம் பைத்தியம் போலிருக்கு—'

'பைத்தியமில்லை, பெரிய வீட்டுக் குழந்தை போல் தெரிகிறது.'

'உனக்கு எப்படி தெரியும்?' என்று ஆச்சரியத்துடன் கேட்டார் விரஜபாபு.

மாதவிக்குத் தெரியாது; அப்படித்தான் இருக்கவேண்டும் என்று அவள் எண்ணம். சுரேந்திரனுக்கு தானாக ஒரு வேலையும் செய்யத் தெரிவதில்லை; தன் வேலையையும் பிறத்தியார் உதவி கொண்டே அவன் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. இன்னொருத்தன் ஒத்தாசை செய்யாவிட்டால் அவனும் ஒன்றும் செய்ய மாட்டான்; முக்கியமாக அவன் சாப்பாட்டில் அலக்ஷியமாக இருப்பதுதான் மாதவிக்கு ஆச்சரியமாக இருந்தது; வாயில்நீர் ஊறச் செய்யும். 'தித்திப்புகளை'யும் கண்ணெடுத்துப் பாராதவன் சாமான்ய மனுஷனாக இருக்க முடியாது என்றுதான் அவள் நினைப்பு! அவனுடைய 'மறதி வாழ்வும்' பூர்வாசிரம வாசனைதான் என்று அவள் எண்ணம். கிழவர்களை யொத்த அவனுடைய வைராக்கியமும், பாலகர்களையொத்த ஸரளமும், பைத்தியக் காரர்களை யொத்த அலக்ஷியமும் அவளுக்கு ஏதோ ரகஸ்யமாகப் பட்டுக் கொண்டிருந்தன. அவளுக்கு அந்த யாரென்று தெரியாத 'ஸாரிடம்' இன்னதெனப் புரியாத ஒரு இரக்கம் உண்டாகி விட்டது. வெட்கத்தால்தான் ஒன்றும் கேளாமல் இருக்கிறான் என்று சொல்லுவதற்கில்லை; அந்த ஆசாமிக்கு ஏதாவது வேண்டிய தாயிருந்து விட்டால் காலம்—அகாலம் ஒன்றையும் கவனிக்காமல் நேராக 'அக்கா'வுக்குச் சொல்லி அனுப்பி விடுவான். அப்போது மாதவி சிரித்து தனக்குள் சொல்லிக் கொள்வாள், 'இந்த மனுஷன் சின்னக் குழந்தைகளைப் போலத்தான்; அப்பு அழுக்கு இல்லாதவன்' என்று. (தொடரும்)

திலகரும்

சரித்திர ஆராய்ச்சியும்

—சங்கர குமாரன்

பெரும் தேசாபிமானியும் ராஜீய வாதியுமான லோகமான்ய திலகரது பெயர் இந்தியா வெங்கும் சர்வப் பிரசித்தமாக இருக்கின்றது. நாகரிகமும் சுய ஆட்சி வுரிமையும் வாய்ந்த தேசங்களுள் இந்தியா தனக்குரிய பதவியைப் பெறும்படி செய்வதற்காக அவர் தமது ஆயுட் காலமெல்லாம் போராடி யிருக்கின்றார். அவருடைய ஜீவிய சரித்திரமானது நம்மில் அநேகருக்கு நன்கு தெரிந்திருக்கின்றது. ஆனால் திலகரது பாண்டித்தியத்தை, படித்த வகுப்பார் எனப்படுவோரில் 10—ல் ஒரு பங்கினர் கூடப் போதிய அளவு அறிவாரோ என்பது எனக்கு மிகச் சந்தேகமாகத் தானிருக்கின்றது. ஆதலால் தாய் நாட்டிற்காகத் தமது உடல் பொருளாவி யனைத்தையும் தத்தம் செய்த தேசாபிமானி எத்துணைத் துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்திருந்தார் என்பதைப் பற்றி நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளுவது பொருத்தமற்ற விஷயமாக இராது.

பாலகங்காதர திலகர் ஆங்கில பாஷையிலும் மராத்தி பாஷையிலும் பத்திரிகைகளை நடத்துவதில் மிக்க திறமையுடையவரென்று பெயர் பெற்றிருந்தார். அவர் பம்பாய் சர்வகலாசாலையில் பி. ஏ. பட்டம் பெற்றிருந்ததுடன் எல். எல். பி. பட்டமும் பெற்றிருந்தார். இது மாத்திரமின்றி அவர் சமஸ்கிருத பாஷையில் மிகுந்த ஆராய்ச்சி யுடையவர். அவர் கணித சாஸ்திரத்திலும் வான சாஸ்திரத்திலும் ஞானமுடையவர். தீவிரமாக யோசனை செய்யும் திறமையை இயற்கையாகவே பெற்றிருந்தார். அவர் தமக்கு இலக்கியங்களிலும் பூத பௌதிக சாஸ்திரங்களிலும் ஆராய்ச்சி செய்வதில் மிக்க சிரத்தை உண்டென்பதை தமது வாழ்க்கை மூலம் காட்டி யிருக்கின்றார். அவர் எதை நினைத்தபோதிலும் சரி, எதை உணர்ந்தபோதிலும் சரி, எக்காரியத்தைச் செய்தபோதிலும் சரி, அது பாரத மாதாவின் முன்னேற்றத்தையோ புராதன சரித்திரத்தையோ அன்றி மதத்தையும், சமூகக் கொள்கைகளையும் ஒட்டியதாகவே இருக்கும்.

1893-ம் வருஷம் லோகமான்ய திலகர் இலக்கிய ஆராய்ச்சியில் ஒரு நிபுணர் என்ற முறையில் தமது ‘வேத புராதனத் தன்மையைப் பற்றிய ஆராய்ச்சிகள்’ என்ற புத்தகத்தை வெளியிட்டு பாரதமாதாவிற்கு சேவை செய்தார். இதன் காரண

மாக அவருக்கு உலகிலேயே கீர்த்தி ஏற்பட்டது. அவர் தமது 'கீதா ரகசியம்' என்ற நூலை வெளியிட்டு தேசத்திற்கு இலக்கியத் துறையில் கடைசியாகச்சேவை செய்தார். கீழ்த் திசை விஷயங்களில் லோகமான்ய திலகர் ஆராய்ச்சி செய்து பெற்றிருந்த கீர்த்தியை நாம் அறிய வேண்டுமானால் இந்தியாவின் புராதன வரலாற்றைப் பற்றிய ஆராய்ச்சியின் விவரங்களை நாம் சுருக்கமாக எடுத்துக் கூறவேண்டியதாக இருக்கின்றது. காளிதாஸனால் எழுதப்பட்ட சாகுந்தலம் என்ற நாடகமானது ஸர் வில்லியம் ஜோன்ஸ் என்பவரால் 1789-ம் வருடம் மொழி பெயர்க்கப்பட்டது. இதிலிருந்துதான் சமஸ்கிருத பாஷையின் சிறப்பு மேனாட்டாருக்குத் தெரிய வந்தது.

இதனால் சமஸ்கிருத பாஷை நிஜமான பாஷையே இல்லை என்று அடியோடு மறுத்துக் கொண்டிருந்தவர்கள், அந்தப் பாஷையிலுள்ள இலக்கியங்களைக் கொண்டே மானிட பூர்வ கால சரித்திரத்தைப் பற்றிய எல்லாப் பிரச்னைகளையும், 19-ம் நூற்றாண்டின் மத்தியில் ஐரோப்பிய நிபுணர்கள் கொண்டுள்ள பல விதமான அனுமானங்களையும் முடிவு செய்துகொள்ளக் கூடுமென்று தெரிவித்தனர். சமஸ்கிருத பாஷையின் சிறப்பை உணர்ந்த பின், லத்தீன் கிரேக்க பாஷைகளில் விசேஷ நிபுணத்துவம் வாய்ந்த ஐரோப்பியர்கள், ஆரிய பாஷைகளுக்குள் உள்ள ஒற்றுமைகளையும் வித்தியாசங்களையும் ஆராய்ந்தறியும் சாஸ்திரத்தை ஏற்படுத்தினர். இதிலிருந்து புராதனக் கதைகளையும் மனிதனுக்கும் மிருகங்களுக்கும் உள்ள சம்பந்தா சம்பந்தங்களையும் பற்றி ஆராய்ச்சி செய்த ஆரியர்கள், ஆதியில் வசித்து வந்த இடத்தையும் ஆசியாவின் தென் பாகத்திற்கும் தென் ஐரோப்பாவிற்கும்புறப்பட்டுச்சென்ற காலத்தையும் பற்றிப் பலவிதமான அனுமானங்கள் செய்யப்பட்டன. இந்தியாவிலுள்ளவர்களுடைய புராதன மதம், சரித்திரம், சமூக அமைப்பு இவை சம்பந்தமாகப் பல சமத்காரமான அனுமானங்கள் படிப்பில்லாமல் மிக்க யோசனா சக்தியும் தைர்யமும் படைத்த அறிவாளிகளால் கொள்ளப்பட்டன. மேனாட்டறிவாளிகள் எனப்படுவோர் நம்முடைய வேதங்கள், புராணங்கள், தர்ம சாஸ்திரங்கள், சிலா சாசனங்கள் முதலிய சம்பந்தமான விஷயங்களைப் பாழ்படுத்தி நமக்கு படிக்கத் தகுந்த முறையில் கதா ரூபமாக எழுதி அவற்றை நாம் சரித்திர பூர்வமானதாயும் சாஸ்திரீயமானதாயும் உள்ள ஆராய்ச்சி முறைகள் போன்று நாம் வந்தனத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று விரும்பினர். தற்பொழுது போல் கீழ்த் திசை விஷய ஆராய்ச்சி நிபுணர்கள் என்று கருதப்படுமிவர்களுடைய அனுமானங்கள் 50 வருஷங்களுக்கு முன்பு தக்க ஆதாரத்துடன் கூடிய உண்மைகள் என்று கருதப்படவில்லை. இம்மாதிரியான ஆதாரமற்ற கொள்கைகளைப் பலமாகக் கண்டித்தவர்களுள் திலகரும் ஒருவர். அவர் இந்தியாவின் புராதன இலக்கியங்களையும் தற்காலமுள்ள மேனாட்டு சாஸ்திரங்களையும் நன்று கற்றுணர்ந்திருந்தார்.

திலகர் முதல் முதலாக 'வேதங்களின் பூர்வீகத் தன்மையைப்பற்றிய

ஆராய்ச்சி' என்ற புத்தகத்தை எழுதினர். இப்புத்தகம் பிரசுரமாவதற்கு முன்பு மேனாட்டு அறிவாளிகள் தக்க ஆராய்ச்சியுடன் கூடிய எதையும் கூறுவதில்லை. அவர்கள் வேத காலமானது கிறிஸ்து பிறப்பதற்கு 2,000 அல்லது 1,700 வருஷங்களுக்கு முற்பட்டதென்று அனுமானித்துக் கூறிவந்தார்கள். இதுபற்றி திலகருடைய வாக்கியங்களையே நான் கீழே மேற்கோளாக எடுத்துக் காட்டியிருக்கின்றேன்:—

"வேத காலத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்தவர்கள் வேதங்கள் இயற்றப்பட்ட காலத்தைப் பற்றித் தங்களுடைய புத்திக்குத் தோன்றியவாறு அனுமானித்துக் கூறி வந்திருக்கின்றார்கள். அவர்கள் தங்களால் அனுமானிக்கப்பட்ட காலங்களைப் பலவாறு பகுத்துக் கூறியிருக்கின்றனர். அவர்கள் முதல் வேதமானது அதிகப்படி யிருந்தால் கி. மு. 2400 வருஷத்திற்கு முற்பட்டதாக இருக்க முடியாது என்று கருதுகின்றனர். நான் என்னுடைய புத்தகத்தில் அக்கால நிர்ணயங்கள் நிச்சயமற்றதாயிருப்பதை எடுத்து விளக்க முயன்றிருக்கின்றேன். வேதங்களில் காணப்படும் வான சாஸ்திர சம்பந்தமான வாக்கியங்கள், வேதங்கள் எவ்வெப்பொழுது ஏற்பட்டன என்பதை நிர்ணயிப்பதற்கு நம்பத்தக்க ஆதாரங்களாக இருக்கின்றன. இவ்வாக்கியங்களிலிருந்து விஷு, மிருகசீரிடத்திலிருந்ததென்றும் அதாவது கி.மு. 45,000 வருஷங்களுக்கு முன்பு இருந்ததென்றும் அப்பொழுதுதான் வேதங்கள் இயற்றப்பட்டனவென்றும் ஐயமறத்தெரியவருகின்றது. பிராமணங்கள் கி. மு. 2,500 வருஷங்களுக்கு முன்பு எழுதப்பட்டன. அப்பொழுது கிருத்திகை நட்சத்திரத்தில் விஷு இருந்ததென்றும் தெரியவருகிறது. முதலில் இம்முடிவுகளை அறிவாளிகள் சந்தேகத்துடனே ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் டாக்டர் ஜாகோபி என்பவர் தாமாக ஆராய்ச்சிசெய்து பார்த்து என்னுடைய முடிவிற்கே வந்தார். இதன் பிறகு புரொபசர்கள் ப்ளூம்பீல்டு, எம். பார்த், காலஞ்சென்ற டாக்டர் புஹ்ளர் முதலியவர்களும் மற்றவர்களும் என்னுடைய வாதங்களை ஏறக்குறைய பகிரங்கமாக ஏற்றுக் கொண்டனர்."

இதற்குப் பின்னர் 1903ம் வருஷம் திலகர் (The Arctic Home of the Vedas) என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டார். இப்புத்தகமானது அவருடைய அறிவையும், சாஸ்திரீயமான முறையில் ஆராய்ச்சி செய்வதற்குப் பெற்றிருந்த சக்தியையும் காட்டுவதற்குரிய ஞாபகச் சின்னம் போல விளங்குகின்றது. அந்தப் புத்தகத்தில் கண்ட முடிவுகள் யாதென்று லோகமான்ய திலகர் எடுத்துக் கூறிய வாக்கியங்களையே நான் கீழே மேற்கோள்களாக எடுத்துக் காட்டி யிருக்கின்றேன்:—

"ரிக் வேதத்தில் பல அரிய வாக்கியங்களிருக்கின்றன. அவை இதுகாறும் ஒன்றும் புரியாத வாக்கியங்களென்றும் முக்கியமானவையல்லவென்றும் கருதப்பட்டன. ஆனால் அவற்றை சாஸ்திரீயமான முறைகளைக் கொண்டு ஆராய்

பார்த்தால் வட துருவத்தில் இருப்பதாகக் கூறப்படும் அம்சங்கள் வேத காலத்திய கடவுளுக்கும் இருந்த தென்றும் ஆங்குள்ள பஞ்சாங்கம் முதலியன வற்றைப்போலிருந்தன வென்றும் ரிக்வேதத்திலுள்ள வாக்கியங்களிலிருந்து தெரிய வருகிறது.

ஆரியர்களுடைய சொர்க்க லோகமெனக் கருதப்பட்ட இடமானது, வருஷத்தில் ஒரு முறை சூரியன் பிரகாசிக்குமிடத்தில் இருந்த தென்றும், அவ்விடமானது பனியினால் அழிக்கப்பட, அதன் காரணமாக அவர்கள் தென்புறமாகக் குடியேறிச் செல்ல நேரிட்ட தென்றும் 'அவெஸ்தா' என்பதில் கூறப்பட்டிருக்கின்றது. இந்த வாக்கியங்களை தற்காலத்திய பூகோள சாஸ்திர ஆராய்ச்சியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், ஆரியர்கள் முதன் முதலாக வடதுருவ மகா சமுத்திரத்தை யடுத்த பிரதேசங்களில் வசித்திருந்தனர் என்றும், அங்குப்பனி உறைந்திருந்த தென்றும் முடிவு செய்து கொள்ளாமலிருக்க முடியாது. அதிலிருந்து ஆரியர்கள் அங்கு கி.பி. பிறக்க 8000 வருஷங்களுக்குமுன்பு இருந்தார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ள நேரிடும். இன்னும் இந்தியாவின் பூர்வீகத் தன்மையைப் பற்றி இன்னும் பல அரிய ஆராய்ச்சிகளைச் செய்ய வேண்டி யிருக்கின்றது."

திலகருடைய இப்புத்தக மானது வேதங்களைப்பற்றிய ஆராய்ச்சி உடையவர்களால் பெரிதும் மதிக்கப்பட உரிமை பெற்றிருக்கின்றது. மேலும், திலகர் 1897—98ம் வருஷம் சிறையிலிருந்த பொழுது இதைப் பற்றிய விஷயங்கள் சிலவற்றைச் சேகரித்தார். இப்புத்தகத்திற்கு அவர் எழுதியுள்ள முகவுரையைப் படிக்கும் உண்மையான இந்தியர் எவரும் கண்ணீர் சொரியாமலிருக்க முடியாது. லோகமான்ய திலகர் அதில் எழுதுவதாவது:—

"1897ம் வருஷம் பம்பாய் அரசாங்கத்தார் பஞ்ச சம்பந்தமாகவும் பிளேக் சம்பந்தமாகவும் கையாண்ட முறையால் ஏற்பட்ட ஆத்திரத்தை அடக்குவதற்காக அவர்கள் பம்பாய் மாகாணத்திலுள்ள சில சுதேச பாஷைப் பத்திரிகைகள் மீது வழக்குத் தொடருவது உசிதமென்று கருதினர். அவற்றுள், என்னை ஆசிரியனாகக்கொண்ட 'கேசரி' பத்திரிகை முக்கியமானது. அப்பத்திரிகை ராஜாங்கத் துவேஷமான விஷயங்களை எழுதியதாகக் கருதி அவர்கள் எனக்கு 18 மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தனர். ஆனால் இந்தியாவில் ராஜீயக் குற்றவாளிகள், சாதாரண கைதிகளைவிட சிறந்த முறையில் நடத்தப்படுவதில்லை. 'ஓரியன்' என்ற புத்தகத்தின் ஆசிரியர் என்று என்னை அறிந்துகொண்டிருந்த புரொபஸர் மாக்ஸ் முல்லரும் மற்றவர்களும் என்னிடம் அனுதாபமுள்ள சிரத்தை கொண்டிராவிட்டால் நான் படிப்பதில் அடைந்து வந்த ஒரே ஆனந்தத்தையும் இழக்க நேர்ந்திருக்கும். புரொபஸர் மாக்ஸ் முல்லர் தம்மால் இரண்டாவது முறையாகப் பிரசுரிக்கப்பட்ட ரிக் வேதத்தின் நகலொன்றை எனக்கனுப்பி யிருந்-

கம்பர்

—நா. லக்ஷ்மீநரசிம்மம்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

3 இராமன்—அழியாப் பேரழகன்

உலக நாயகனே கதா நாயகன். காரண காரியமாய்ப் பூரணமாய் நின்ற பரம்பொருளே இராமன் எனப் பக்தி செலுத்தும் கம்பர், இராமனது அழகையும் குண நலங்களையும் அருட் செயல்களையும் கூறுவதில் ஓர் தனியின்பம் காணுகின்றார்; நமக்கும் காட்டுகின்றார். கம்பர் நெஞ்சில் பரம்பொருளாக விளங்கும் இராமன் அவர் கண்களுக்கு அழியா அழகனைக் காட்சியளிக்கின்றான். புருஷோத்தமனாக வந்து புன் முறுவல் காட்டுகின்றான். அருள்வீரனாக வருகின்றான். அவன் சொல்லாத நல்லனவும் செய்யாத நன்மையும் இல்லை. இராமனைப்பற்றிப் பேசுவதால் கம்பரடைந்த களிபேருவகையை நாமும் அவர் கூறும் முறையே கொள்வோம். முதலில் இராமனது அழியா அழகை அருந்துவோம்.

அழகென்பது அறிந்தின் புறுதற்கேயுரிய நுண்பொருள். கூறவும் கேட்கவும் முடியாதது. ஆதலால் அழகுள்ள வேறோர் பருப்பொருளையே உவமை கூறிக்காட்ட வேண்டும். இராமன் அழகினை எவ்வாறு உவமை கூறிக்காட்டுறது? அவன் அழகு எத்தகைய கற்பனைக்கும் மேற் சென்று நிற்பது. ஆனால் கம்பர் இராமன் அருள் கொண்டே இயலாததனையும் இயற்றுகின்றார்.

தார். அரசாங்கத்தாரும் இந்தப் புத்தகத்தையும் மற்றப் புத்தகங்களையும் உபயோகிக்க அனுமதியளித்தனர். இதனுடன் இரவில் சில மணி நேரங்கள் படிக்க அவர்கள் எனக்கு விளக்கும் கொடுத்து உதவினர். இம்மாதிரியான சமயங்களில் எனக்குக் கிடைத்த அவகாசத்தில்தான், நான் ஆரியர்கள் வட துருவ மகா சமுத்திரக் கரையை அடுத்த பிரதேசங்களில் வசித்து வந்தனர் என்பதற்கு ரிக் வேதத்திலிருந்து எடுத்துக் காட்டியுள்ள ஆதாரங்களில் சிலவற்றைச் சேகரித்தேன்.”

திலகர் தற்கால இந்தியாவிற்கு இலக்கியத் துறையில் ஒரு பெரிய சேவை செய்திருக்கின்றார். அஃதென்ன வெனில் அவர் எழுதி வெளியிட்டுள்ள கீதா ரகசியமேயாகும். இதில் பெரும் அறிவாளியும் தேசாபிமானியும் தீரருமான அவர் தமது தேசத்தவருக்கு கீதையில் அடங்கியுள்ள உபதேசங்களில் உண்மையான சிறப்பை எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

தோள்கண்டார் தோளேகண்டார்
தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார்
தடக்கைகண்டாருமஃதே
வாள் கொண்ட கண்ணார்யாரே
வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னான்
உருவுகண்டாரை ஒத்தார்

கண்ட இடமொன்றே காண்பார் கண்ணையும் கருத்தையும் தன்வயமாக்கிக் கொள்ளும் இயற்கைக் கவினுடையான் இராமன். தோள் கண்டவர் தோளே கண்டார். வேறொன்றும் கண்டிலர். இந்நிலையில் அவன் முழுக் கவினையும் சொல்லவல்லார் யார்! தாள் கண்டவரும் தாளில் நிலைத்தனர். தடக்கையைக் கண்டவரும் அவ்விதமே. அழகென்று கூறப்படுவது மேனிப் பொலிவுமட்டு மன்று. ஒரு பொருளின் குணச் சிறப்பையும் குறிப்பதாகும். தோள், உலகமெல்லாம் தாங்கும் உரம்பெற்றது. வீரச் செயல் விளையும் இடம். ஆண்மைக் கணிகலம். இத்தகைய தோளைக் கண்டார் வேறு எது காண்பார்? தாமரையன்ன தாளின் சிறப்பு தனிச் சிறப்பாகும். எம்மையும் தரும் இயல்புடையது. தனக்குத் தானே இணையானது. வணங்கும் அடியார்க்கு இணங்கும் இடம். ஈசனருளுக்கு வாசல். இத்தகைய தாள் கண்டார் வேறு காண்பரோ? முத்திக்கு வித்து. ஈசனைப் பணிவோர் எதனைப்பணிகின்றனர்? துதிப்போர் எதனைத் துதிக்கின்றனர். 'பாதம் பணிவேன். பாதமே கதி' என்றன்றோ போற்றுகின்றனர். பெறலரும் பேறாகிய இதனைப்பெற்றபின் பிறிதொருபேறும் வேண்டுவரோ? இனி அபயமும் வரமும் அளிப்பன கைகளே யாதலின் தடக்கை கண்டாரும் அஃதேயாகின்றனர்.

இவ்வாறு ஒவ்வோரவயவத்தழகு கண்டார் அவ்வழகிலேயே மூழ்கிவிடுதலால் இராமனது முழுப்பேரழகைக் கண்டார் யாரும் இலர். ஒன்றற்கொன்று மாறுபட்ட சமயங்கள் யாவுமே ஈசன் வடிவைக் கூறுவனவாம். எனினும் ஒன்றாலும் முற்றக் கூறமுடிவதில்லை. முற்றக் கூறும் வன்மை பெறின் மாறுபாடு ஏன்? ஆகவே மதங்கள் எவ்வாறு ஈசன் வடிவில் ஒவ்வொரு கூற்றைக் கண்டுணர்ந்து நின்றனவோ அவ்வாறே மிதிலை மாதர் இராமனது அழகின் ஒவ்வோர் பகுதியில் தம்மை மறந்தனர்.

அந்த மிலழகனைச் சொந்தமாகப் பெற்ற சீதைக்குமே அவனழகைக் கண்டுணர்வது எளிதன்று என்பதை 'நம்பியைக் காண நங்கைக் காயிரம் நயனம் வேண்டும்' எனக் கூறுகிறார். ஆனால் சீதையின் நல்லெழில் சிறுமை பெற்றதோ என்று யாரும் எண்ணிவிடக்கூடாதென்று உடனே 'கொம்பினைக் காணுந்தோறும் குரிசிற்கும் அன்ன தேயாம்' எனக் கூறிவிடுகின்றார்.

மிதிலை வீதியில் இராமன் உலாவி வரும்பொழுது அவன் அழகால் மகளிர் பட்ட பாட்டைக் கம்பர் பலவாறு சித்திரிக்கின்றார். 'ஆஹா, இவனுக்கு கண்ணன் என்ற பெயர் தகும். அதன் பொருளை யாம் அறியுமாறு செய்து காட்டுகின்றான். நம் கண்களின் மீதே தேர் ஏறிச் செல்கின்றான்' எனப் பல பல கூறுவாராயி

னர். உயிர் தாங்க முடியாமல் துகில் மட்டும் தாங்கி நின்றனர்.

மாதர் செய்தி நிற்க ஆடவருள் மாந்தர் செய்தி என்ன? அவர்களும் அவன் அழகில் ஈடுபட்டனர். ஜனகன் சுயம்வர மண்டபத்தில் சீதையை மணப்பதற்கு நிபந்தனையாக சிவன் வில்லைக் கொண்டுவரச் செய்தான். மாந்தர் இராமனையும் பார்த்து சீதையையும் பார்த்து மகிழ்ந்தார்கள். வில்லைக் கண்டதும் திகில் கொண்டு வாட்ட மடைந்தனர். 'ஐயோ, இவ்விளங்குமரன் இதை வளைக்கவேண்டுமா? இவன் வளைக்கவில்லையானால் சீதை இவனை மணந்து கொள்ளக் கூடாதோ? என்ன கொடுமை! இப்போழகனைச் சீதை அடையும் பாக்கியம் பெறவில்லையோ? இவ்வில் சீதையின் நற்பேற்றிற்குத் தடையாக எங்கிருந்து முளைத்தது' என எண்ணி வருந்தினர். கோபமும் கொண்டனர்.

வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் [என்றால்
கொள்ளென முன்பு கொடுப்பதை [யல்லால்
வெள்ள மனைத்தவன் வில்லை [யெடுத்திப்
பிள்ளை முன் இட்டது பேதைமை [என்பார்

வள்ளல் இராமன் மணம் செய்து கொள்ள இசைந்தால் கொள் என்று கொடுப்பதல்லவா அறிவுடைமையாகும். பரமன் வில்லை எடுத்து வளைத்தால்தான் மணம் என்பது—அதுவும் இம்மெல்லிய இளங்குமரன் முன் அதனை யிடுவது—பேதைமையேயாகும். அதுமட்டுமா?

ஞான முனிக்கொரு நாணிலை [யென்பார்
கோனிவனிற் கொடியாரிலை [என்பார்
மானவன் இச்சிலை கால் [வளையானேல்
பீனதனத்தவள் பேறிலள் [என்பார்.

இந்த நிபந்தனைக்கு விஸ்வாமித்திர முனிவன் ஏன் இசைந்தான்? அவனுக்கு நாணமில்லையா? இதனை இட்ட ஜனகனைப் போற்கொடியவர் யாருமில்லை. இராமன் இவ்வில்லை வளைக்கவில்லையானால் சீதை பாக்கியம் பெற்றவளில்லை எனப் பலவாறு கூறலாயினர். இப்பேச்சுகளுக்கெல்லாம் இராமனிடம் கொண்ட மயக்கமல்லவா காரணம்.

மாந்தர் மயங்கியதில் வியப்பென்ன? முற்றத் துறந்த முனிவரே இராமனழகில் மயங்கி 'ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்' எனக் கூறுகின்றார். ஆடவரும் நாம் பெண்ணாய்ப் பிறந்தோமில்லையே என்று நினைக்கத்தக்க ஆணழகன் என்ற கருத்தை வெளியிடுவாரானால் அவர் நெஞ்சம் இராமன் அழகில் எவ்வளவு தூரம் ஈடுபட்டிருக்க வேண்டும்?

கம்பர் கவிஞர்க்குரிய இயற்கையையும் கைவிடவில்லை. உவமை கூற முடியாத ஒருவன் அழகை உவமை கூறிக் காட்டவும் முயற்சிக்கின்றார்.

வெய்யோ னொளிதன் மேனியின் [விரிசோதியினடைய
பொய்யோ வெனும் இடையாளொ [டும் இளையானொடும் போனான்

மையோ மரகதமோ மறிகடலோ
[மழைமுகிலோ
ஐயோ இவன் வடிவென்பதோர்
[அழியா அழகுடையான்

சூரியன் ஒளிதன்மேனி யொளியில் மறைய சீதையொடும் இலக்குவனொடும் கானகம்புக்கான் இராமன். அவன் மையும் மரகதமும் மறிகடலும் மழைமுகிலும்போன்ற அழியா அழகுடைய வடியுடையான். கோடி சூரியப் பிரகாசத்தின் முன் ஒரு சூரியன் ஒளியென்னவாகும்? மின் மினி சூரியன் முற்பட்டது போலாகும். கதிரவற்கே ஒளியைத் தந்தவன் வடிவத்தில் கதிரொளியடங்குதலில் வியப்பென்ன? அழியா அழகின் வடிவத்தைச்சொல்ல என்றால் முடியவில்லையே என்ற கருத்தை ஐயோ என்னும் சொல்லால்விளக்குகிறார். ஒன்றற்கொன்று மேம்பட்ட நான்கு உவமைகள் கூறியும் இராமன் அழகைக் கூறியதாக அவர் திருப்தி கொள்ளவில்லை. மை கேவலம் நிறத்தைமட்டும் காட்டுமே யொழியே குணச்சிறப்பை விளக்குமா? மரகதம், நிறமும் ஒளியும் திண்மையும் பெற்றிருப்பினும் எல்லோர்க்கும் அருள் செய்யும் எளிய தன்மை அதனிடமுண்டா? மறிகடல் முன்னைய இரண்டும் பெறாத சிறப்புக்களைப் பெற்றிருப்பினும் எம்பெருமான் போல் முத் தொழிலையாற்ற வல்லதாயினும் காணமுடியாத எல்லையுடையதாயிருப்பினும் காண்பார்க்கு அச்சம் விளைத்து மறித்துத் தள்ளும் கடல் ஆதலின் அஃது எம்பெருமான் அழகுக்கு இணையாகுமோ? காண்பார் விரும்பும் கட்டழகனுக்குக் காண்பார் வெறுக்கும் கடல் இணையாகுமோ! இவ்வாறு இம் மூன்றையும் ஒதுக்கி, நிறம் ஒளி எல்லோர்க்கும் ஒப்ப அருள் செய்யும் வண்மை, தண்மை முதலிய எல்லாக் குணங்களும் நிரம்பப் பெற்றிருக்கும் மழை முகில் ஒருபோது இணையாகலாம் என இறுதியில் வைத்துமுடிக்கின்றார்.

இராமன் அழகு அரக்கியின் நெஞ்சிற் பதிந்த வகையைக் காண்போம். சூர்ப்பநகை பஞ்சவடியில் இராமனைப் பார்க்கின்றாள். அவ்வளவுதான் அப்பார்வை யொன்றிலேயே இராமகதை விளைகின்றது. இராமன் அழகை எவ்வாறு வியக்கின்றாள்?

எவன் செய இனிய இவ்வழகை
[எய்தினான்

அவம் செயத் திருவுடம் பலச்
[சோர்கின்றான்

நவம் செயத் தகைய இந்நளின
[நாட்டத்தான்

தவம் செயத் தவம் செய்ததவம்
[என்னென்கின்றாள்

ஐயோ! என்ன செய்வதற்கு இவன் இந்த மனோகரமான அழகை அடைந்தான்? அழகு வினைக மெய்வருந்தத் தவம் செய்வதற்கா இந்த அழகு? புதுமை விளைக்கும் தாமரை போன்ற கண்களையுடைய இவன் தவம் செய்வதற்கு தவம் என்ன தவம் செய்தது என்று கேட்கின்றாள். தான் விரும்பியபொருள் தவக்கோலம் புனைதற்கும் அவள் சம்மதிக்கவில்லை. தவப் பெருமையை நன்குணர்ந்த அரக்கர் குலத்திற் பிறந்தும் தவத்திலும் இராமன் அழகை மேல் எனக் கொள்கின்றாள்.

சுதந்திரத்தின் தேவைகள் யாவை?

ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள்

—வெ. சா.

பிரசங்கம் 2

இயற்கைச் சக்திகளும் மனித சக்திகளும்

ஒரு தேசத்தின் ஜனத்தொகை பெருகுவதற்கும் சுருங்குவதற்கும் ஏற்றாற்போலவே அந்தத் தேசத்தின் வாழ்வும் தாழ்வும் இருந்துகொண்டு வந்திருப்பதை பூர்வீக காலந் தொட்டு நாம் கண்டு வருகிறோம். இதுவே இயற்கை நியதியாகவும் இருந்திருக்கிறது. நமது சீனாவும் பூர்வீகப் பெருமையுடையது. நாலாயிரம் வருஷ சரித்திரத்தையுடையது. எனவே ஐயாயிரம் அல்லது ஆறாயிரம் வருஷங்களுக்கு முந்தியிருந்தே நமது தேசம் இருந்திருக்க வேண்டும். இந்தக் காலத்தில் இயற்கைச் சக்திகள் நம்மைப் பாதித்திருந்தபோதிலும், அந்த இயற்கைச் சக்திகள் நமக்குத் துணை செய்யாமலுமில்லை. நமது ஜனத்தொகை நாற்பது கோடி; உலகத்திலே ஜனத்தொகை மிகுந்த நாடு நமது நாடுதான். ஆயினும் நாம் அழிவுறாதிருக்குமாறு இயற்கை, நமக்குத் துணை செய்திருக்கிறது. தலை முறை தலை முறையாக நமது வம்சம் மாறிக்கொண்டு வந்தபோதிலும், இன்னும் கலைஞானம் நிரம்பிய ஒரு சமூகத்தினராகவே இருந்து கொண்டிருக்கிறோம். இதனாலேயே, ஒரு சிலருக்கு, இனி என்ன வந்தாலும் சீனா அழியாது என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இஃது அசட்டு நம்பிக்கை என்பது என் கருத்து. இயற்கைச் சக்திகளினால் மட்டும் மனித சமுதாயம் மாறிக்கொண்டு வந்திருந்தால் இந்த நம்பிக்கை சரிதான். ஆனால் மனித சக்திகளும், சமுதாய மாற்றத்திற்குத் துணை செய்கின்றன. இந்த மனித சக்திகளிலே முக்கியமானவை, அரசியல் சக்திகளும் பொருளாதார சக்திகளுமாகும். ஒரு சமுதாயத்தின் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் இந்த இரண்டு சக்திகளும் பெரிதும் துணை செய்கின்றன. தற்கால உலகச் சுழற்சியிலே அகப்பட்டுக் கொண்டிருக்கும் நமது தேசமானது, இந்த இரண்டு சக்திகளாலும் தாக்கப்படுகிறது.

சென்ற ஆயிர வருஷ காலத்திற்குள் இரண்டு முறை—அதாவது மங்கோலிய அரச பரம்பரையும் மஞ்சு அரச பரம்பரையும் ஆண்டுகொண்டிருந்தபோழ்து—அரசியல் சக்திகளினால் நசுக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு தடவையும், நம்மினும் எண்

ணிக்கையில் குறைந்த ஒரு ஜாதியாரிடத்தில் விட்டுக் கொடுத்து விட்டிருக்கிறோம். இந்த இரண்டு தடவையிலும், இந்த ஜாதியார் நம்மிலேயே ஐக்கியமாகி விட்டிருக்கின்றனர். இரண்டு முறை, சீனவில் அரசியல் ஆக்ரமிப்பு ஏற்பட்டிருந்தபோதிலும், நமது ஜாதிக்கு அழிவு ஏற்படவில்லை. ஆனால் இப்பொழுது வல்லரசுகளின் ஜனத்தொகை எவ்வாறு பெருகியிருக்கிறதென்பதையும் அந்த வேகத்தோடு நாம் போட்டி போட முடியாத நிலையிலிருக்கிறோமென்றும் சென்ற பிரசங்கத்தில் கூறினேன். மனித சக்திகளின் துணையில்லாமலே, இயற்கைச் சக்திகளின் துணை கொண்டே நாம் அழிந்துவிடக்கூடும் என்பதைச் சுட்டிக் காட்டினேன். அதாவது ஜனத் தொகையைப் பெருக்க வேண்டுவது எவ்வளவு அவசியமாயிருக்கிறதென்பது இதனால் நன்கு தெரிகிறது.

இயற்கைச் சக்திகள் மெதுவாக வேலை செய்தாலும், அவை ஒரு ஜாதியை நிர்மூலப்படுத்தி விடும் சக்தி வாய்ந்தவை. அமெரிக்காவிலிருந்த சிவப்பு ஜாதியாருடைய நிலைமையே இதற்குத் தகுந்த சான்றாகும். இரு நூறு மூந்நூறு வருஷங்களுக்கு முன்னே, அமெரிக்காவில் பெரும்பாலும் சிவப்பு ஜாதியினரே இருந்தனர். பிறகு வெள்ளை ஜாதியினர் வந்து சேர்ந்தவுடன், இந்த சிவப்பு ஜாதியே இல்லாமல் போய்விட்டது. இயற்கைச் சக்திகள், ஒரு ஜாதியை அழித்து விடுகின்றனவென்பதற்கு இது சிறந்த உதாரணம்.

நான் மேலே சொன்னபடி, இயற்கைச் சக்திகளைவிட மனித சக்திகள் ஒரு ஜாதியை விரைவில் அழித்துவிடுகின்றன. ஆகையால், அடுத்த தலைமுறை, சீனவுக்கு ஒரு நெருக்கடியான காலமாகும். அதற்குள், அரசியல் பொருளாதார நிர்ப்பந்தங்களிலிருந்து சீனவை விடுதலை செய்வோமானால் சீன அழிந்து போகாமலிருக்கும். இல்லாவிட்டால் வல்லரசுகளால் நாம் அழிக்கப்பட்டு விடுவோம்.

சென்ற ஒரு நூற்றாண்டாக, சீன, மேனாட்டு அரசியல் ஆதிக்கத்தின் கீழ் இருக்கிறது. இதற்கு முன்னர் மஞ்சு அரச பரம்பரையினர், நம் மீது ஆதிக்கஞ் செலுத்திக் கொண்டிருந்தபோது, நமது நாடு மிகவும் பலமுள்ள நாடாயிருந்தது. அப்பொழுதுதான் இந்தியாவை இங்கிலாந்து ஜெயித்துக்கொண்டிருந்தது. இந்தியா மீது அது படையெடுக்கத் துணியவில்லை. ஏனென்றால், சீன, இந்தியாவில் ஏதேனும் குழப்பத்தை உண்டு பண்ணிவிடுமோ வென்ற அச்சம் இருந்தது. ஆனால் சென்ற ஒரு நூற்றாண்டில், சீன, தன் பிரதேசத்தின் பெரும் பாகத்தை இழந்துவிட்டது. சமீப கால சம்பவங்களைக் கவனிப்போம். வெய் ஹய் வெய், போர்ட் ஆர்தர், டேய்ரன், விங்டவ், கௌலூன், க்வாங்செள வான் முதலிய பிரதேசங்களை இழந்து விட்டோம். 1914ம் வருஷத்து ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு, இவற்றில் சில-உதாரணமாக விங்டௌ, வெய் ஹெய் வெய் முதலியவை-நமக்குத் திருப்பிக் கொடுத்து விடப்பட்டன. ஆனால் இவையெல்லாம் மிகச் சிறிய இடங்கள். சீனவைப்பற்றி வல்லரசுகள் என்ன நோக்கம் கொண்டிருந்தனவென்றால், சீன விழிப்படைந்து,

தன்னைத் தானே ஆளும் திறமை படைத்திராமலிருப்பதால், கடலோரமாயுள்ள சில நகரங்களைப் பிடித்துக் கொண்டு சீனாவைப் பங்கு போட்டுக் கொள்வோம் என்பதுதான். பின்னர் சீனாவில் புரட்சி ஏற்பட்டபோது, 'ஓ! சீனாவுக்கும் உயிர் இருக்கிற'தென்று நினைத்து, அதனைப் பங்கு போட்டுக் கொள்வதினின்றும் பின் வாங்கின. வல்லரசுகளுக்குச் சீனாவின் மீது இந்த ஆசைப் பார்வை இருந்த சமயத்தில், சீனாவில் புரட்சி ஏற்படக் கூடாதென்ற கட்சியைச் சேர்ந்தவர்கள், 'புரட்சி ஏற்பட்டால் சீனா இன்னும் பல துண்டுகளாகிவிடும்' என்று கூறினார்கள். ஆனால் அதற்கு மாறாக புரட்சியினால்தான், சீனாவின் மீது அந்நிய வல்லரசுகள் கொண்டிருந்த எண்ணம் சிதறுண்டு போய்விட்டது. இதற்கு முன்னர், சீனாவின் ஆதிக்கத்தின் கீழிருந்த கொரியா, போர்மோஸா, பெங்காடோரெஸ் முதலிய பிரதேசங்கள், சீன–ஜப்பானிய யுத்தத்தின் விளைவாக, ஜப்பானுக்கு அளிக்கப்பட்டன. இதிலிருந்துதான் சீனாவைப் பங்கு போட்டுக் கொள்வதென்ற வார்த்தை வல்லரசுகளிடை ஆரம்பித்தது.

இதற்கு முந்தின நூற்றாண்டில் பர்மா, அன்னாம் முதலிய நாடுகளை நாம் இழந்துவிட்டோம். அன்னாம் பிரதேசத்தை விட்டுக் கொடுப்பதற்கு முன்னர் கொஞ்சம் எதிர்ப்புக் காட்டத்தான் செய்தோம். பிரான்சினால் பயமுறுத்தப்பட்டு, நாம் பிரான்ஸுக்கு அன்னாமைக் கொடுத்துவிட்டோம். இப்படிக் கொடுப்பதற்குச் சில நாட்களுக்கு முன்னர்தான், சீனாவின் தெற்கெல்லையில் பிரெஞ்சு ராணுவத்தை முறியடித்தோம். ஆனால் இந்த வெற்றி யேற்பட்டவுடனேயே, நாம் பிரெஞ்சுக்காரரோடு சமாதானம் கோரினோம். வெற்றியடைந்தவர், தோல்வியடைந்தவர்களிடம் சமாதானம் கோருவதைக் கண்டு, பிரெஞ்சுக்காரர் ஆச்சரியப்பட்டார்கள். இப்படியும் ஒரு தேசத்தார் இருப்பாரோ என்று திகைத்துப் போனார்கள். சரித்திரத்திலேயே இல்லாத இந்தச் சம்பவத்திற்குக் காரணம், மஞ்சூ அரசாங்கத்தின் முட்டாள்தனந்தான். அன்னாமும் பர்மாவும் முன்னர் சீனாவைச் சேர்ந்தனவாக இருந்தன. அன்னாமை பிரான்ஸ் ஆக்ரமித்துக் கொண்டதும், பர்மாவை பிரிட்டன் ஸ்வீகரித்துக் கொண்டுவிட்டது. சீனா இதனை ஆட்சேபிக்கவில்லை. இப்படியே, சீனாவுக்குச் சொந்தமாயிருந்த பல நாடுகளை அது கூப்பிய கையோடு கொடுத்துவிட்டது. ஒரு காலத்தில் நேபாளம், பூட்டான், சிலோன் முதலிய நாடுகள் சீனாவுக்கு காணிக்கை செலுத்தின. ஆனால் அவையெல்லாம் இப்பொழுது அதன் கை நழுவிப் போய்விட்டன.

சீனா செல்வாக்காக இருந்த காலத்தில், வடக்கே ஆமூர் நதி வரையிலும் தெற்கே ஹிமாலயம் வரையிலும், கிழக்கே பசிபிக் சமுத்திரம் வரையிலும் மேற்கே ஸாங்-லிங் வரையிலும் பரவியிருந்தது. அந்தக் காலத்தில் சீனாவைக் கண்டு எல்லாருக்கும் நடுக்கம் ஏற்பட்டிருந்தது. அப்பொழுது ஐரோப்பிய ஏகாதிபத்தியம், ஆசியாவின் மீது ஆதிக்கங் கொள்ளவில்லை. சீனா ஒன்றுதான் ஏகாதிபத்திய நாடாக இருந்தது. ஆனால், மேற்கு

ஏகாதிபத்திய நாடுகள், சீனாவை பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் சிரழித்து வருகின்றன. இதனால் சீனாவின் எல்லைப்புறம் வரவரச் சுருங்கிக்கொண்டு வருகிறது.

1911ம் வருஷம் சீனாவில் புரட்சி ஏற்பட்ட பிறகு, சீனாவைத் துண்டு துண்டாக்கி விடுதல் அவ்வளவு சுலபமான காரியமல்ல வென்பதை வல்லரசுகள் தெரிந்துகொண்டு விட்டன. மஞ்சு அரச பரம்பரையை வீழ்த்தி விட்ட சீனாவுக்கு, வல்லரசுகளின் அரசியல் ஆதிக்கத்தையும் எதிர்த்து நிற்கத் தெரியும். இதைத் தெரிந்துகொண்டுதான், பொருளாதார சம்பந்தமான நெருக்கடியை சீனா விஷயத்தில் உண்டுபண்ணி வருகிறது. ஐரோப்பிய மகா யுத்தத்தைக் கிளப்பியது பால்கன் பிரச்னை. இந்த யுத்தத்தின் விளைவாக பலத்த சேதம் உண்டாயிற்று. ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் வீழ்த்தப்பட்டன. ஆயினும் ஏகாதிபத்தியக் கொள்கையில் எவ்வித மாற்றமும் உண்டாகவில்லை. இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தலி முதலிய நாடுகள் ஏகாதிபத்தியக் கொள்கையை அநுஷ்டித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றோடு, அமெரிக்காவும் சேர்ந்து கொண்டிருக்கிறது. இவைகள் ஐரோப்பாவைப்பொறுத்த மட்டில், தங்கள் ஏகாதிபத்தியக் கொள்கையைச் சிறிது காலம் தள்ளி வைத்தாலும் தள்ளி வைக்கக்கூடும். ஆனால் சீனா விஷயத்தில் இது இந்த ஏகாதிபத்தியக் கொள்கையை தொடர்ந்தே அநுஷ்டித்து வருகிறது. சமீபத்தில்கூட, காண்டன் துறைமுகத்தில், வல்லரசுகளின் நாசகாரிப் படகுகள் அணிவகுத்து நின்றதை யார் மறந்திருக்கக் கூடும்? அரசியல் ஆதிக்கத்தை விட பொருளாதார ஆதிக்கம் மிகக் கடுமையானது. சீனாவில் இப்பொழுது ஒரு தேசத்தாருடைய ஆதிக்கம் மட்டும் இல்லை; பல தேசத்தாருடைய ஆதிக்கமும் இருந்து கொண்டிருக்கிறது. ஒரு தேசத்தாருடைய ஆதிக்கத்திலிருப்பது நல்லதா? பல தேசத்தாருடைய ஆதிக்கத்தில் இருப்பது நல்லதா? ஒரு தேசத்தின் ஆதிக்கத்தில் இருந்தால், ஏதேனும் இயற்கை விபத்துக்கள் ஏற்படுமானால், ஆதிக்கம் பெற்றுள்ள தேசத்தார், தயை பாராட்டியாவது கஷ்ட நிவாரணத்திற்கு ஏற்பாடு செய்வர். ஆனால் சீனா விஷயத்தில் இதைக்கூட எதிர்பார்க்க முடியாது.

க்வாங்டங் என்ற துறைமுகப் பட்டினத்தில் சுங்கவரி சம்பந்தமாக அந்நிய அதிகாரிகளுக்கும் சீன அதிகாரிகளுக்கும் ஒரு சச்சரவு இருந்து கொண்டிருக்கிறது. நியாயமாக, இந்தச் சுங்க வரி வருமானம் நம்முடையதுதான். அப்படியிருக்க ஏன் தகராறு? ஏனென்றால், இந்தச் சுங்க வரி வருமானத்தை இது வரை மற்ற நாட்டார் அநுபவித்துக் கொண்டு வந்திருக்கின்றனர். இந்தச் சுங்க வரியைப் பற்றி நமக்குத் தெரியாதிருந்த ஒரு காலமும் உண்டு. நமது துறைமுகங்களை நாம் அந்நியர்களிடம் கொடாமல், நமது வியாபாரத்தை நாமே கவனித்து வந்தோம். பின்னர், இங்கிலாந்து, சீனாவுக்கு வியாபார நிமித்தம் வந்தது. சீனா இடங் கொடுக்கவில்லை. ஆனால் இங்கிலாந்து பலவந்தமாகவே நுழைந்தது. நுழைந்ததும்,

பிரிட்டிஷ் ராணுவமானது, காண்டன் நகரத்தை ஆக்ரமித்துக் கொண்டது. அங்கு சமாளிக்க முடியாமல் போய் பின்னர் ஹாங்காங் தீவுக்கு வந்து அதைக் கைப்பற்றிக் கொண்டது. இதற்காகத் தங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று பிரிட்டிஷார் கேட்டனர். அப்பொழுது சீனாவினிடத்தில் பணம் இல்லை. எனவே, சுங்க வரிகளை வசூலித்துக் கொள்ளும் உரிமையை பிரிட்டனிடம் கொடுத்தது. பிரிட்டிஷாருடைய நஷ்டத்தை, இந்தச் சுங்க வரி ஈடுபடுத்தாதென்று மஞ்சூ அரசாங்கத்தார் நினைத்தனர். ஆனால் பிரிட்டிஷார் சொற்ப காலத்திற்குள் இந்த வரிகளை வசூலித்து நஷ்ட ஈடு செய்து கொண்டதோடு கூட, அதிக லாபத்தையும் அடைந்தனர். அப்பொழுதுதான், தன்னுடைய அரசாங்க நிருவாகம் எவ்வளவு ஊழலாயிருக்கிறதென்பதை நன்கு உணர்ந்து கொண்டது. இதன் பிறகு, மற்ற மேனாட்டு வல்லரசுகள் இந்தச் சுங்க வரி வசூலில் தங்களுக்கும் பங்கு வேண்டுமென்று கேட்டன. பிரிட்டனும் இதற்குச் சம்மதித்தது. எனவே, இப்பொழுது சீனாவின் சுங்கவரி வருமானமெல்லாம் அந்நியர்கள் வசம் இருக்கிறது. அந்நிய வல்லரசுகளோடு நிறைவேற்றிக் கொள்கிற ஒவ்வோர் உடன்படிக்கையும் சீனாவின் ஒரு பிரதேசத்தையோ அல்லது அதன் உரிமையையோ இழந்து விடக்கூடியதாக இருக்கிறது.

மற்ற வல்லரசுகள், இந்தப் பொருளாதார நெருக்கடியை எப்படிச் சமாளிக்கின்றன? சுங்க வரிச் சுவர்கள் எழுப்பிக் கொள்கின்றன. துறைமுக வாயில்களில் கோட்டைகள் கட்டி, எப்படி அந்நிய சத்ருக்களின் வரவைத் தடுக்கிறோமோ, அப்படியே அந்நிய நாட்டுச் சரக்குகளின் இறக்குமதி மீது சுங்க வரிகள் போட்டு ஒரு தேசத்தின் வருமானம் அதிகப் படுத்திக்கொள்ளப்படுகிறது. இதனால் உள்நாட்டுக்கைத்தொழில்கள் அபிவிருத்தியடைகின்றன. உதாரணமாக, அமெரிக்கா அரசாங்கம், அந்த நாட்டுப் பூர்விகக் குடிகள் அழிக்கப் பட்ட பிறகு, ஐரோப்பிய நாடுகளுடன் வியாபார சம்பந்தம் வைத்துக் கொண்டது. அப்பொழுது அமெரிக்கா ஒரு விவசாய நாடு. ஐரோப்பிய நாடுகளோ கைத்தொழில் நாடுகள். சாதாரணமாகச் சர்வதேச வியாபார விஷயத்தில், விவசாய நாடுகளின் மீது கைத்தொழில் நாடுகள் சிலசலுகைகள் பெற முடியும். இதனால் அமெரிக்காவானது, தனது உள்நாட்டுக் கைத்தொழில்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, சுங்க வரிகளை, அந்நிய நாட்டுச் சரக்குகளின் மீது விதித்தது. சுங்க வரிகள் விதிப்பதென்றால், இறக்குமதியாகும் அந்நியச் சாமான்களின் மீது அதிகமான இறக்குமதித் தீர்வையை விதிப்பது. உதாரணமாக, அந்நிய நாட்டுப் பொருள் ஒன்று நூறு டாலர் பெறுமானமுள்ளதாயிருந்தால் அதற்கு எழுபது அல்லது எண்பது டாலர் இறக்குமதித் தீர்வையாக விதிக்கப்படும். இதனால் உள்நாட்டுப் பொருள்களை விட வெளிநாட்டுப் பொருள்கள் அதிக விலைக்கு விற்கப் படுவதால், வெளிநாட்டுப் பொருள்களின் புழக்கம் குறைகிறது; உள்நாட்டு பொருள்களின் புழக்கம் அதிகமாகிறது.

இப்பொழுதைய சீனாவின் நிலைமையென்ன? சீனாவில் அந்நிய நாட்டு வியாபாரம் தொடங்கப் படுவதற்கு

முந்தி, ஜனங்கள், கையினால் தயாரிக்கப்பட்ட பொருள்களை உபயோகித்து வந்தார்கள். 'ஆண்கள் நிலங்களைப் பயிரிடுவார்கள்; பெண்கள் நெசவு நெய்வார்கள்' என்பது சீனாவில் வழங்கப்பட்டுவரும் ஒரு பழமொழி. இதனால் சீனாவில் முக்கியமான தொழில்களாக விவசாயமும் நெசவுத் தொழிலும் இருந்தனவென்று தெரிகிறது. இதன் பிறகு, அந்நியச் சரக்குகள் வர ஆரம்பித்தன. இறக்குமதித் தீர்வை மிகக்குறைவாயிருந்தமையால், அந்நியத் துணிகள் விலை மலிவாகக் கிடைத்தன. தவிர, நாசூக்கான அந்நியத் துணிகளையே ஜனங்களிற் பலர் விரும்பி உபயோகித்தனர். இதனால் உள் நாட்டுக் கைத்தொழில்கள் நசித்துப் போயின. இதன் விளைவு என்ன? வேலையில்லாத் திண்டாட்டம். இதற்குக் காரணம் அந்நியர்களுடைய பொருளாதார ஆதிக்கம். இன்று கூட, சீனாவில் கைத்தறி நெசவு நடைமுறையில் இருக்கிறதாயினும், அதற்கு உபயோகிக்கப்படுகிற நூல் அந்நிய நூல். சென்ற சில வருஷங்களாகத்தான், உள் நாட்டு நூல் உபயோகிக்கப்படுகிறது. ஷாங்காயில் எத்தனையோ பருத்தி மில்கள் இருக்கின்றன. ஆனால் இறக்குமதி வரி காரணமாக, அந்நிய நாட்டு மில் உற்பத்திப் பொருள்களோடு இவை போட்டி போடமுடியவில்லை. தவிர, சீனாவில் உற்பத்தியாகும் துணிகளுக்கு அதிகமான ஏற்றுமதி வரி விதிக்கப்படுகிறது. ஐரோப்பிய யுத்தத்தின் போது, ஷாங்காய் மில்கள், நல்ல விலைக்குத் தங்கள் சரக்குகளை விற்றன. மில் முதலாளிகள் நூறு சத விகிதம் பங்குகள் பிரித்துக் கொடுத்தார்கள். ஆனால் யுத்தத்திற்குப் பிறகு அந்நியச் சரக்குகள், சீன மார்க்கெட்டில் வந்து குவிந்தன. ஷாங்காய் மில்கள் கடனாளிகளாகி விட்டன. சீனாவின் சுங்க வரி முறையானது, அந்நியச் சரக்குகளுக்குப் பாதுகாப்பளிப்பதாயிருக்கிறது! இவைகளினால் விளங்குவதென்னவெனின், அரசியல் ஆதிக்கத்தைவிட பொருளாதார ஆதிக்கம் மிகக்கடுமையானதென்பது நன்கு தெரிகிறது.

சீனாவில் அந்நிய வியாபாரம் ஏற்பட்டவுடனே, வெளி நாட்டு வியாபாரம் பெரிதும் விருத்தியடையத் தொடங்கியது. 1921ம் வருஷத்தில் ஏற்றுமதியைவிட, இறக்குமதி 50 கோடி டாலர் அதிகமாயிருந்தது. இந்த மாதிரி போய்க் கொண்டிருந்தால், வியாபாரத்தின் மூலமாக மட்டும், சீனா, அந்நிய நாடுகளுக்கு 125 கோடி டாலர் விகிதம் காணிக்கை செலுத்திக் கொண்டுவர வேண்டியிருக்குமென்று தெரிகிறது.

தவிர சீனாவில் அந்நிய பாங்கிகளின் ஆதிக்கம் அதிகமாயிருக்கிறது. சீனர்களுக்கு சுதேசி பாங்கிகளில் அவநம்பிக்கையும் அந்நிய பாங்கிகளில் நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கின்றன. சுதேசி பாங்கிகள் வெளியிடும் நோட்டுகளைவிட, அந்நிய பாங்கிகள் வெளியிடும் நோட்டுகளுக்கு அதிக மதிப்பு இருக்கிறது. இப்பொழுது சுதேசி பாங்கிகளின் வெள்ளி நாணயங்களுக்குக்கூட மதிப்புக்குறைந்திருக்கிறது. அந்நியர்கள் அனைவரும் பெரிய பணக்காரர்கள் என்ற நம்பிக்கை நம்மவரிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் நாம் பொருளைக் கொடுத்து காகிதத்தை வாங்குகி

றோம் என்பதை அறிந்து கொள்வதேயில்லை. அந்நியர்கள், அதிகமான பணத்தை வைத்துக் கொண்டு வியாபாரம் ஆரம்பிக்கவில்லை. அவர்களிடத்தில் இருக்கப்பட்ட பணமெல்லாம் நாம் கொடுத்ததுதான். லட்சக் கணக்கான பாங்கி நோட்டுகளை அச்சிட்டு அவர்கள் விநியோகிக்கிறார்கள். நாம் அவைகளை வாங்கி வைத்துக் கொண்டு டாலர் நாணயங்களைக் கொடுக்கிறோம்.

பாங்கி நோட்டுச் செலாவணியைத் தவிர, நாணயமாற்று விகிதம் வேறே இருக்கிறது. ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு பாங்கி உண்டியல் வாங்கினோமானால், அதற்காகக் கமிஷன் என்று ஒரு தொகை வாங்கி விடுகிறார்கள். தவிர, ஒரு நாணயமாக நாம் இங்குக் கொடுக்க அதை வேறொரு நாணயமாக வேறோர் இடத்தில் கொடுக்கச் சொல்கிற போது, அதனால் ஏற்படும் மதிப்பு வித்தியாசத்தில், பாங்கிகளுக்கு அதிக லாபம் ஏற்படுகிறது. தவிர, சீனர்கள், அந்நிய பாங்கிகளில்தான் தங்கள் பணங்களை ஜமால் செய்து வைக்கிறார்கள். அவர்கள் குறைந்த வட்டி கொடுக்கிறார்களா, அல்லது வட்டியே கொடுப்பதில்லையா வென்பனவற்றைப்பற்றி யெல்லாம் கவனிப்பதேயில்லை! நாம் ஜமால் செய்து வைக்கிற பணத்தைக் கொண்டே, அந்நிய பணக்காரர்கள், சீனர்களுக்கு அதிகமான வட்டிக்குக் கடன் கொடுத்து லாபஞ் சம்பாதிக்கிறார்கள். கப்பல் கேழ்வைகளின் மூலமாகவும், அந்நியக் கப்பல் கம்பெனிகள் அதிகமான லாபஞ் சம்பாதிக்கின்றன. ஜப்பான் துறைமுகங்களிலிருந்து ஐரோப்பியத் துறைமுகங்களுக்குச் செல்லும் கப்பல்கள் எவ்வளவு கட்டணம் விதிக்கின்றனவோ, அதைவிட அதிகமான கட்டணத்தை சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே சென்று கொண்டிருக்கும் வியாபாரக் கப்பல்கள் வசூலிக்கின்றன. இங்ஙனம் கப்பல் கேழ்வையின் மூலமாக மட்டும், சீனாவுக்கு வருஷத்தில் 10 கோடி டாலர் விகிதம் நஷ்டமேற்பட்டுக் கொண்டுவருகிறது.

இவைதவிர, நிலவரி, நிலவிக்கிரயச் செலவு, அந்நியர்கள் வசிப்பதற்கென்று ஒதுக்கிக் கொடுக்கப் பட்ட பிரதேசங்கள் ஆகிய இந்த மூன்றின் மூலமாகவும் சீனாவுக்கு அதிக நஷ்டமேற்பட்டிருக்கிறது. உதாரணமாக, ஹாங்காங், போர்மோஸா, ஷாங்காய், டீண்ட்ஸின் முதலிய பிரதேசங்களில் வசிக்கும் சீனர்கள், அந்நியர்களுக்கு வருஷந்தோறும் வரி செலுத்துவதன் மூலமாக மட்டும் 20 கோடி டாலர்கள் கொடுக்கிறார்கள்.

சீனாவில் ஏராளமான அந்நியக் கம்பெனிகள் இருக்கின்றன. இவை, ஒப்பந்தத்தின் மூலமாகச் சில விசேஷ உரிமைகள் பெற்றிருக்கின்றன. இவைகளும், நம்மிடத்திலிருந்து ஏராளமான லாபத்தைச் சம்பாதிக்கின்றன. உதாரணமாக, தெற்கு மஞ்சூரியா ரெயில்வே கம்பெனி ஒன்று மட்டும் வருஷத்தில் நிகரலாபமாக 5 கோடி டாலர் லாபம் சம்பாதிக்கிறது. இவையெல்லாம் போக, சீனாவின் பல பாகங்களிலும் அந்நியர்கள் சூதாட்ட நிலயங்கள் பலவற்றை ஏற்படுத்தி அவற்றின் மூலம் ஏராளமான லாபஞ் சம்பாதிக்கிறார்கள்.

இனி, இவற்றையெல்லாம் தொகுத்

நெப்போலியன் எங்கே?

—எஸ். இராமச் சந்திரன்.

நெப்போலியச் சக்கரவர்த்திக்கு அப்பொழுது கஷ்டதசை. ஐரோப்பா முழுவதையுமே நடுங்க வைத்துக் கொண்டிருந்த சக்ரவர்த்தி இப்பொழுது எல்லாப் பக்கங்களிலிருந்தும் தாக்கப்பட்டான். ஆஸ்திரியர்கள், ருஷியர்கள், ஜெர்மானியர்கள், ஆங்கிலேயர்கள் எல்லோரும் நெப்போலியனை வீழ்த்தச் சதி செய்துவிட்டனர். அவர்கள் அப்பொழு பாரிஸ் நகர்மீது படையெடுத்துச் சென்று கொண்டிருந்தனர். ஆனால் நெப்போலியனோ அவர்களை நசுக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தான்.

ஜீன் (Jean) என்பவன் ஒரு பிரெஞ்சுச் சிறுவன். அவனுக்கு வயது 14. அவன் தாய் தந்தையரை இழந்தவனாதலால் தன் பாட்டனோடு ஒரு குடிசையில் வசித்து வந்தான்.

ஜீன் காட்டிலேயே பிறந்து வளர்ந்

துச் சுருக்கமாகக் கூறுவோம். பிரதி வருஷமும், 50 கோடி டாலரும், கப்பல் கேள்வியின் மூலமாக 10 கோடி டாலரும், வரி முதலியவைகளின் மூலமாக 40 கோடி டாலரும், அந்நியர்கள் செய்யும் வியாபாரத்தின் மூலமாக 10 கோடி டாலரும், சூதாட்ட ஸ்தாபனங்கள் முதலியவை மூலமாக லட்சக் கணக்கான டாலர்களும் சீனா நஷ்டமடைந்து வருகிறது. ஆக பிரதி வருஷமும் நமக்கு ஏற்படுகிற மொத்த நஷ்டம் சுமார் 100 கோடி டாலராகும். இதற்கு ஏதேனும் பரிகாரம் தேடா விட்டால், இந்த நஷ்டம் வர வர அதிகப்பட்டு கொண்டுவரும். சீனா, இனியும் இந்த நஷ்டத்தைத் தாக்குப் பிடித்துக் கொண்டிருக்க முடியுமா? மேலே சொல்லப் பட்ட இந்த நஷ்டத்தொகை, நமக்கு வருமானமாயிருந்தால் நாம் எவ்வளவு செழிப்புள்ளவர்களாயிருப்போம்? இந்த நஷ்டத்தினாலல்லவோ, நாம் முன்னேற முடியாதவர்களாயிருக்கிறோம். லட்சக் கணக்கான போர் வீரர்கள் சேர்ந்து நம்மைக் கொலை செய்து விடுவதை விட, இந்தப் பொருளாதார ஆதிக்கம் மிகக் கொடுமையானது.

சென்ற அநேக நூற்றாண்டுகளாக, சீனாவானது ஜனத்தொகைப் பிரச்னை காரணமாகத் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது தவிர, அரசியல் விஷயத்திலும் பொருளாதார விஷயத்திலும் அந்நியர்களுடைய ஆதிக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்த மூன்று கஷ்டங்களுக்கும் நாம் பரிகாரந் தேடா விட்டால், இன்னும் ஒரு நூறு வருஷத்தில், நமது ஜாதியே இல்லாமற் போய்விடும்.

தான். காடு முழுவதும் அவன் சுற்றி யிருக்கிறான். காட்டில் அவனுக்குத் தெரியாத இடமே கிடையாது. ஒரு நாள் ஜீன் ஓர் அழுகைச் சப்தத்தைக் கேட்டான். போய்ப் பார்க்குமிடத்து அங்கு ஒரு பிரெஞ்சு சிப்பாயைக் கண்டான். அவன் ஒரு ஒற்றன். ஜெர்மானியர்களும் ருஷியர்களும் பாரிஸை நோக்கி வருவதை நெப்போலியனுக்குச் சொல்லி எச்சரிப்பதற்காக அனுப்பப் பட்டான். வழியில் ஒரு சில ஜெர்மானியர்கள் இவனைக் கண்டு கொண்டு காலில் சுட்டு விட்டனர். எனினும் இவன் தப்பி வந்துவிட்டான். தற்பொழுது நடக்கச் சக்தி யில்லாமல் இருக்கிறான்.

தன் சட்டையைக் கிழித்து ஜீன், சிப்பாயின் காயங்களைக் கட்டினான். தன் முதுகில் சாத்திக்கொண்டு மிக்க சிரமத்துடன் தன் குடிசைக்கு அழைத்து வந்தான். ஜீனின் தாத்தா சிப்பாயை உபசரித்து உணவு கொடுத்தார். ஜீன் சிப்பாயை தன் வீட்டிலேயே இருக்கும்படி சொல்லிவிட்டு தான் நெப்போலியனை எச்சரித்து வருவதாக உறுதி கூறினான்.

ஆனால் அதற்குள் அவன் குடிசையின் வாசற் பக்கம் கதவு 'டபார், டபார்' என்று தட்டும் சப்தம் கேட்டது. தட்டுபவர்கள் ஜெர்மன் வீரர்கள் என அறிந்த ஜீன் உடனே பிரெஞ்சு சிப்பாயை வீட்டின் பரண் மேல் மறைந்திருக்கும்படி செய்து விட்டு கதவைத் திறந்தான். ஜெர்மானியர்கள், உள் நுழைந்து குடிசையில் கிடைத்த பொருள்களைத் தின்று விட்டு படுத்துறங்கினர்.

இரவு மணி 2. ஜீன் மெள்ள எழுந்து ஒருவருக்கும் தெரியாமல் வெளியில் வந்துவிட்டான். ஓட்டமாய் ஓடி விடியற்காலை சுமார் ஆறு மணிக்கு பாரிஸ் வந்து நெப்போலியன் தங்கி யிருந்த கூடார வாசலை அடைந்தான். வாயிற்காப்போன் அறியாமல் மெள்ள உள் நுழைந்து விட்டான்.

இப்பொழுது சிறுவன் ஜீன், மாட்சிமை தங்கிய பெரிய சக்கரவர்த்தி நெப்போலியன் முன் நின்றான். சக்கரவர்த்தியின் பக்கத்தில் ஓர் உயர்ந்த உத்தியோகஸ்தன் நின்று கொண்டிருந்தான். சிறுவனைப் பார்த்ததும் இருவரும் ஆச்சரியங் கொண்டனர்.

'நீ யார், எங்கு வந்தாய்' என்று கேட்டான்.

ஜீன் பயந்து விட்டான். பின் மெள்ளச் சொன்னான்:—

'நான் சக்கரவர்த்தியுடன் பேச வேண்டும்.'

சேவகன் பையனை வெளியில் தள்ள யத்தனித்தான். ஆனால் நெப்போலியன் அவனைத் தடுத்து விட்டு பையனிடம் என்ன விஷயம் என்று கேட்டான். ஜீன் சொன்னான்:—'ஐய, பகைவர் பாரிஸ் நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர். நான் உங்களை எச்சரிப்பதற்காக வந்தேன்'.

'யார் உனக்கு இவ்விஷயம் சொன்னார்கள்' என்றான் நெப்போலியன்.

'என் தாத்தா குடிசையில் இப்பொழுது காயமடைந்து படுத்திருக்கும் ஒரு பிரெஞ்சு சிப்பாய்' என்று கூறினான் ஜீன்.

சக்ரவர்த்தி சந்தோஷம் கொண்டான். பின் பையனைப்பார்த்து 'ஜீன், உனக்கு என்ன பரிசு வேண்டும்? கூறு' என்றான்.

ஜீன்:—எனக்கு நிரம்பப் பணம் வேண்டும்.

நெப்போலியன்:—ஏன்?

ஜீன்—என் தாத்தா தொண்டு கிழவராய் விட்டார். அவரால் வேலை செய்ய முடியவில்லை. நானோ சிறுவன். சாப்பாட்டுக்கு இல்லாமல் நாங்கள் தவிக்கிறோம்.

சக்கரவர்த்தி, பையனிடம் ஒரு பணப்பை கொடுத்தான். பின் சில வார்த்தைகள் ஒரு கடிதத்தில் எழுதி அவனிடம் கொடுத்தான். 'ஜீன், நான் இப்பொழுது மிக்க வேலையாக இருக்கிறேன். யுத்தம் முடிந்த பின் என்னை இக்கடிதத்துடன் வந்துபார். உன்னையும் உன் தாத்தாவையும் ஆதரிக்கிறேன்' என்றார்.

ஜீன், சக்கரவர்த்திக்கு நன்றி கூறி விட்டு வீடு திரும்பினான். அப்பொழுது ஒரு பிரெஞ்சு சைனியம் ஜீன் வீட்டிலிருந்த ஜெர்மன் சிப்பாய்களைக் கைதியாக்கிக் கொண்டு சென்றது.

சிலதினங்களில் யுத்தம் முடிந்தது. சக்கரவர்த்தி கொடுத்த கடிதத்தைத் தன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு ஜீன், பாரிஸ் நகரம் நோக்கி நடந்தான். தானும் தன் தாத்தாவும் இனி நெப்போலியன் உதவியால் இனிது வாழலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தான்.

அரண்மனையில் வாசற் காப்போரிடத்தில் கடிதத்தைக் காட்டி

'நெப்போலியன் எங்கே? அவரை நான் பார்க்க வேண்டும்' என்றாள்.

அரண்மனை வாசற் காப்போன் கடிதத்தைப் படித்ததும் விம்மி விம்மி அழுதான்.

'ஐயோ' 'என்மகனே, நீ சக்ரவர்த்தியைப் பார்க்க முடியாது; அவர் இப்பொழுது ஒரு கைதி. யுத்தத்தில் தோற்றதனால் எல்பா(Elba) தீவில் கைதியாக்கி வைக்கப் பட்டிருக்கிறார்' என்றான்.

ஜீனின் தலை சுற்றியது.

இந்தியாவில் சுமார் இருபது லட்சம் குருடர்களும், சுமார் முப்பது லட்சம் பார்வை மழுங்கியவர்களும் இருக்கிறார்கள்.

ஐரோப்பிய நாடுகளின் விஸ்தீரணமும் ஜனத் தொகையும்

தற்போதைய ஐரோப்பிய யுத்த நெருக்கடியில் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப் பட்டிருக்கிற நாடுகளின் விஸ்தீரணமும் ஜனத்தொகையும் வருமாறு:—

நாடு	விஸ்தீரணம் சதுர மைல்	ஜனத் தொகை
ஜெர்மனி (ஸ்லோவேகியா உள்பட)	258,856	85,698,988
போலந்து	150,470	34,775,698
கிரேட் பிரிட்டன் (வட ஐர்லாந்து உள்பட)	95,030	46,217,197
ஐரே (ஐர்லாந்து)	26,600	2,968,420
பிரான்ஸ்	212,659	41,905,968
இத்தலி (அல்பேனியா (உள்பட)	130,393	43,996,726
பெல்ஜியம்	11,775	8,361,220
பல்கேரியா	39,825	6,077,939
டென்மார்க்	16,575	3,706,749
எஸ்தோனியா	18,353	1,126,413
பின்லாந்து	134,557	3,667,067
க்ரீஸ்	50,184	6,204,684
ஹங்கேரி (ருதேனியா உள்பட)	40,530	11,137,993
ஹாலந்து	12,704	8,639,595
லாட்வியா	25,395	1,950,502
லிதுனியா	20,400	2,397,008
நார்வே	124,556	2,814,194
போர்த்துகல்	35,490	6,825,883
ருமேனியா	113,881	19,535,398
ருஷ்யா	8,095,728	165,847,100
ஸ்பெயின்	190,050	24,583,096
ஸ்வீடன்	173,347	6,284,722
ஸ்விட்ஜர்லாந்து	15,944	4,200,000
துருக்கி	294,416	16,158,018
யூகோஸ்லேவியா	95,558	13,934,038
டான்ஜிக்	754	407,000

அம்பிகா சரண் மஜும்தார்



ஜனனம் 1851
மரணம் 1922

—"அரசியல் மாணாக்கன்"

ஐரோப்பிய மகா யுத்தம் வெகு மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் சர்வ சக்திகளும் ஏகாதிபத்திய நலனுக்காக உதவப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் 1916ம் வருஷம் டிசம்பர் மாதம் லட்சுமணபுரியில் முப்பத்தோராவது காங்கிரஸ் கூடியது. இதற்குத் தலைமை வகித்தவர் அம்பிகா சரண மஜும்தார். இவரை, வங்காள அரசியல் இயக்கத்தின் பிதா மகன் என்று சொல்வதுண்டு.

அம்பிகா சரண் மஜும்தார், பரித்பூர் ஜில்லாவைச் சேர்ந்த ஸேந்தியா என்ற கிராமத்தில் 1852ம் வருஷம் ஜனவரி மாதம் 6ந்தேதி ஜனனமானார். இவருடைய தகப்பனார் ராதா சரண மஜும்தார் என்பவர், பாரசீக பாஷையிலும், சமஸ்கிருத பாஷையிலும் பெரிய வித்துவானாக இருந்தார். தவிர, சநாதன தார்மிகராகவும், ஒழுக்க சீலராகவும் இருந்தார். பரித்பூர் ஜில்லா முழுவதிலுமே இவருக்கு அதிகமான மரியாதை இருந்தது. அம்பிகா சரணருடைய தாயார் சுபத்ரா தேவி, அசாதாரண ஞானம் படைத்த நாரீமணியாயிருந்தாள். மாதா பிதாக்களின் பூரண

அருளும் பெற்றவராகவே அம்பிகா சரணர் விளங்கினர். பாலியத்திலிருந்தே இவர் சுய தேசம், சுய தர்மம் இவற்றில் அபிமானமுடையவராகவும் தமது வாக்கைக் காப்பாற்றுவதில் கண்ணும் கருத்துமுடையவராகவும், அநியாயத்தைக் கண்டால் வெறுப்படைந்தவராகவும் இருந்தார்.

அம்பிகா சரணர், ஏழாவது வயதில், தமது சொந்தக் கிராமத்திலிருந்த சமஸ்கிருத பாடசாலையில் பயிற்சி பெறத் தொடங்கினர். தமது ஆசிரியரிடத்தில் அத்தியந்த விசுவாசத்துடன் நடந்துகொண்டார். இது, மற்றப் பிள்ளைகளுக்குப் பிடிக்கவில்லை; இதனால், இவர்கள் ஒன்று சேர்ந்து சூழ்ச்சி செய்து இவர்மீது குற்றஞ் சாட்டி இவருக்குத் தண்டனை விதிக்கச் செய்தார்கள். இது இவரால் வெறுக்க முடியவில்லை. உடனே பாடசாலையை விட்டு விலகிக்கொண்டார். பெற்றோர்கள், மீண்டும் பள்ளிக்கூடத்தில் போய்ச் சேரும்படி பல விதமாகச் சொல்லிப் பார்த்தார்கள். ஆயினும் இவர் பிடிவாதமாகப் பள்ளிக்கூடத்திற்குப் போகவே யில்லை. இதன் பிறகு காசியா என்ற கிராமத்திலிருந்த ஆங்கிலோ-வெர்ன குலர் பள்ளிக்கூடத்தில் படிக்கச் சென்றார். இங்கும், இவர் நீண்ட காலம் படிக்க கூடவில்லை. இதன் பிறகு, பாரிஸால் நகரத்திலிருந்த ஹைஸ்கூலுக்குச் சென்று அங்கு, தலைமை உபாத்தியாயரா யிருந்து ஆங்கில இலக்கியத்தின் சுவையை நுகரலானர். இந்தப் பள்ளிக்கூடத்தின் ஒவ்வொரு வகுப்பிலும் இவர் முதல் வகுப்பிலேயே தேறி வந்தார். 1868ம் வருஷம், மெட்ரிகுலேஷன் பரீட்சையில் எல்லாருக்கும் முதல்வராகத் தேறினர். இதன்பின்னர் கல்கத்தாவுக்கு வந்து, பிரஸிடென்ஸி காலேஜில் சேர்ந்து உயர்தரக் கல்வி பயிலத் தொடங்கினர். இந்தக் காலத்திலிருந்தே இவர், எளிய வாழ்க்கையும் உயரிய எண்ணமும் உடையவராக விளங்கினர். 1863ம் வருஷம் பி. ஏ. பரீட்சையில் தேறினர். மெட்ரோ பாலிடன் கல்லூரியில் ஓர் ஆசிரியராக இவருக்கு உடனே வேலை கிடைத்தது. இந்தத் தொழிலை நடத்திக் கொண்டிருக்கிற காலத்திலேயே, இவர் வக்கீல் பரீட்சைக்கும் படிக்கலானர். இதே சமயத்தில் எம். ஏ. பரீட்சையிலும் தேறினர். அடுத்த வருஷத்தில் பி. எல். பரீட்சையிலும் தேறினர். சுமார் இரண்டு வருஷ காலம் மேற்படி மெட்ரோபாலிடன் கல்லூரியில் தலைமையாசிரியரா யிருந்து வேலை பார்த்தார். இதே காலத்தில்தான் இவருடன் ஸ்ரீ சுரேந்திர நாத் பானர்ஜியும் ஆசிரியரா யிருந்தார். இருவருக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. இருவரும் சேர்ந்து, பள்ளிக்கூடத்தில் மாணக்கர்களின் வாத சபையொன்று ஆரம்பித்தார்கள். சுரேந்திரர் இதற்குத் தலைவராகவும், அம்பிகா சரணர் உப தலைவராகவும் தெரிந்தெடுக்கப் பட்டார்கள். என்றைய தினம், இவர் மேற்படி சபையின் உப தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டாரோ அன்றைய தினம், இவர், தமது வீட்டின் மாடிப் படியில் சறுக்கி விழுந்தார். இதனால் இவருடைய காலுக்கு ஊனம் ஏற்பட்டது. இந்த அங்கப் பழுது இவருக்கு ஆயுட்காலம் முழுவதும் இருந்தது.

அம்பிகா சரணர், 1879ம் வருஷம் பரீத்பூரில் வக்கீல் தொழிலைத் தொடங்கினர். வக்கீல் தொழிலை ஒழுங்காகக் கவனித்து, அதன் மூலம் கட்சிக்காரர்களின் அன்பையும், பொருள் வருவாயையும் பெற்றதோடு, பொதுஜன சேவையிலும் ஈடுபட்டார். மேற்படி பரீத்பூரில் 'பொது நலச் சங்கம்' என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்தார். இதுதான், வங்காள மாகாணத்திலேயே முதன் முதலாக ஏற்பட்ட அரசியல் சங்கம். லார்ட் ரிப்பனுடைய ஸ்தலஸ்தாபனச் சட்டம் அமுலுக்கு வந்த காலத்தில், பரீத்பூரில் ஒரு நகர சபையை ஏற்படுத்த முயன்றார். இந்த முயற்சி வெற்றியடைந்தது. சுமார் இருபது வருஷ காலம் இவரே மேற்படி சபையின் தலைவராக இருந்து அரிய சேவை செய்து வந்தார். பரீத்பூரில் ராஜேந்திர காலேஜ் என்ற ஒரு கல்வி ஸ்தாபனம் ஏற்படுவதற்கும் இவர் காரணராயிருந்தார். 1885ம் வருஷத்திலும் 1906ம் வருஷத்திலும் இந்தியாவெங்கணும் கொடிய பஞ்சங்கள் ஏற்பட்டனவல்லவா? அக்காலத்தில் இவர் செய்த சேவைமிக அரியனவாகும். இந்த மாதிரியான சேவைகளின் மூலம், பரீத்பூர் வாசிகளின் நன்றியை மட்டுமல்ல, பாரத வாசிகளின் நன்றியையும் பெற்றார்.

இந்திய தேசிய காங்கிரஸ் முன்னரேயே, வங்காளத்தில் 1883ம் வருஷம் 'நேஷனல் கான்பரென்ஸ்' என்ற பெயரால் ஒரு மகா நாட்டிலும், இதற்குப் பிறகு தொடங்கப் பெற்ற தேசிய காங்கிரஸிலும் இவர் முக்கிய பங்கெடுத்துக் கொண்டு உழைத்தார். 1902ம் வருஷம், இந்தியா சட்ட சபையில் இவர் ஓர் அங்கத்தினராயிருந்து தொண்டாற்றினர்.

வங்காளப் பிரிவினை காரணமாக எழுந்த கிளர்ச்சியில் இவர் ஈடுபட்டுழைத்தார். இந்தக் கிளர்ச்சியின் விளைவாகத் தோன்றிய சுதேசி இயக்கம், பஹிஷ்கார இயக்கம் முதலியவற்றில் இவர் செய்த சேவைகள் சொல்லத் தரமன்று.

1916ம் வருஷம் லட்சுமணபுரியில் நடைபெற்ற காங்கிரஸுக்கு இவர் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். சாதாரண ஒரு ஜில்லா வக்கீல், இந்த உயர்பதவி பெற்றதைப் பார்க்கிறபோது, இவருடைய மகத்தான சேவையே இதற்குக் காரணமாயிருந்த தென்பதை நன்கு தெரிந்து கொள்ளலாம். தவிர, லட்சுமணபுரி காங்கிரஸ் ஒரு முக்கியமான காங்கிரஸாகும். ஏனென்றால், இந்தக் காங்கிரஸில்தான் மிதவாதிகளும் அமிதவாதிகளும் ஒன்று கூடினர்கள். லோகமான்ய திலகர், இந்தக் காங்கிரஸிலேயே 'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை' என்று முழக்கம் செய்தார். மற்றும், இந்தக் காங்கிரஸிலேயே காங்கிரஸ்-முஸ்லீம் லீக் ஒப்பந்தம் ஏற்பட்டது.

அம்பிகா சரணர், வங்காள மாகாண மகா நாட்டிற்கு இரண்டு முறை தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். 1917ம் வருஷம் டில்லியில் நடைபெற்ற ஏகாதிபத்திய யுத்த மகா நாட்டுக்கு வங்காளத்தின் பிரதிநிதியாகச் சென்றார்.

அம்பிகா சரண் மஜூம்தார் 1922ம் வருஷம் டிஸம்பர் மாதம் 29ந் தேதி பூதவுடல் நீத்தார்.

குழந்தைகள் காண்பது என்ன?

(ஒரு ஆங்கிலப் பாடல்)

பொ. திருகூடசுந்தரம் மொழி பெயர்ப்பு

1. நாம் சிறு குழந்தைகள்தான்,
ஆனால் குழந்தைகளா யிருப்பதில்
எத்தனை கோடி யின்பம்!
பெரியவர்கள் காணவே முடியாத
ஆயிர விஷயங்கள் நாம் காண்போம்.

2. அதோ ஒரு பாறை,
அதன்மேல் பாசி,
அவற்றை அவர்கள் பார்ப்பதுண்டோ?
அவர்கள் புல்லில் படுத்து
விளையாடு வதுண்டோ?

3. கடற்கரைக்குப் போனால்
நம் அப்பாவும் வருகிறாரே
நம்மைப் போல் விசித்திர வஸ்துக்களை
அவர் காண்பதுண்டோ?



1939

ஆகஸ்ட்

25 யுத்தம் ஏற்படாமல் சமாதானத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று ஹிட்லருக்கும், போலிஷ் குடியரசுத் தலைவராகிய மோஸிஸ்கிக்கும், அமெரிக்கா பிரசிடெண்டான ரூஸ்வெல்ட் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

ஜெர்மானிய ஆகாய விமானமொன்று போலந்து எல்லையில் நுழைந்து பல சேதங்களை உண்டு பண்ணியதாகச் சொல்லப் படுகிறது.

போலந்துக்கும் இங்கிலாந்துக்கும் ஏற்பட்ட பரஸ்பர உதவி ஒப்பந்தத்தில் இன்று இரு நாட்டுப் பிரதிநிதிகளும் லண்டனில் கையெழுத்திட்டார்கள்.

ருஷ்ய-ஜெர்மன் ஒப்பந்தத்தைக் கண்டித்து, ஜப்பான் ஜெர்மனிக்கு ஓர் அறிக்கை அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

26 கிரேட் பிரிட்டனிலுள்ள எல்லா ஜெர்மானியர்களும் நாட்டை விட்டுச் செல்ல வேண்டுமென்று ஓர் அறிக்கை பிறந்திருக்கிறது.

ஐரோப்பிய வல்லரசுகள் தங்களுக்குள்ள தகராறுகளைச் சமாதான முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று போப்பரசர் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

ஜப்பானுக்கும் ருஷ்யாவுக்கும் விரைவில் ஒப்பந்தம் ஏற்படுமென்று ஊகிக்கப்படுகிறது.

ஆங்கிலோ-போலிஷ் ஒப்பந்தம், போலந்தில் அதிக உற்சாகத்தை ஊட்டியிருக்கிறதென்று ஓர் அறிக்கை கூறுகிறது.

சீனாவுக்குச் சென்றுள்ள பண்டித நேரு, இன்று சியாங்-கை-ஷேக் தம்பதிகளைக் கண்டு பேசினார்.

27 ஆங்கிலோ-ருஷ்ய சமரசப் பேச்சுகள் முறிந்து போய் விட்டன வென்று ஓர் அறிக்கை கூறுகிறது.

28 பிரிட்டிஷ் கப்பல்கள் மத்தியதரைக் கடலில் போக்குவரத்து வைத்துக் கொள்ளக் கூடாதென்று உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது.

பிரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் ரெயில் போக்குவரத்து நின்றுவிட்டது.

ஜப்பானிய மந்திரிச் சபை இன்று ராஜீநாமா செய்துவிட்டது.

பிரெஞ்சு பிரதம மந்திரியான டலாடியருக்கு ஹிட்லர் பதிலளிக்கிறபோது, டான்ஜிக்கும் 'காரிடர்' பிரதேசமும் ஜெர்மனியைச் சேர்ந்துவிட வேண்டுமென்று கூறினார்.

29 இன்று சேம்பர்லேன் பார்லிமெண்டில் பேசியபோது, உலகத்தில் சமாதானம் நிலவ வேண்டுமா கூடாதா வென்பது ஹிட்லரிடத்திலேயே இருக்கிறதென்று கூறினார்.

ஹிட்லர், பஞ்சாயத்து வைத்துத் தமது கோரிக்கைகளுக்குப் பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டுமென்று மகாத்மா

காந்தி இன்று ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

30 போலந்தில், படை திரட்டும் உத்திரவு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

இன்று பிரிட்டிஷ் மந்திரிச் சபை கூடி, போலந்து விஷயமாக ஜெர்மனி கோரும் கோரிக்கைகளுக்குப் பதில் அளிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

சென்னை நகர சபையில், சுபாஷ் சந்திர போஸுக்கு வரவேற்பு உபசாரப் பத்திரம் அளிப்பதில்லை யென்று சொல்லப்பட்டது.

ருஷ்யாவின் பக்கமாயுள்ள தன் எல்லைப் புறத்தைப் பாதுகாக்க ருமேனியா பந்தோபஸ்து செய்து வருகிறது.

வங்காள மாகாண காங்கிரஸ் கமிட்டி இன்று கூடி, சுபாஷ் சந்திர போஸிடத்தில் நம்பிக்கை இருப்பதாகத் தெரிவித்தது.

31 யுத்த நெருக்கடியை முன்னிட்டு, ஜெர்மனியின் பாதுகாப்புக்காக, மந்திரி சபையொன்றை ஹிட்லர் நியமித்திருக்கிறார். இதற்கு தளபதி கோயரிங் தலைவரா யிருப்பார். ஹெஸ், ப்ரிக், புங்க் ஆகிய மூவரும் அங்கத்தினர்களா யிருப்பார்கள்.

பிரிட்டன் தனது கடற்படையைத் திரட்டி யிருக்கிறது.

லண்டனிலுள்ள பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் முதலியோர் வெளியூர்களுக்கு இன்றிலிருந்து அனுப்பப்படுகிறார்கள்.

இத்தலிக்கும் ஜெர்மனிக்கும் இடையே ரெயில் போக்குவரத்து நின்றுவிட்டது.

செப்டம்பர்

1 போலந்தின் மீது படையெடுக்கும் நோக்கத்தை ஜெர்மனி தடுத்துக் கொண்டாலன்றி, போலந்துக்குத் தாங்கள் கொடுத்த வாக்குறுதிப்படி பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நடந்து கொள்ளப் போவதாக ஜெர்மனிக்குத்தாம் தெரிவித்து விட்டதாக சேம்பர்லேன் பார்லிமெண்டில் கூறினார்.

போலந்து எல்லைக்குள் ஜெர்மானியத் துருப்புகள் பிரவேசித்து விட்டன. கிட்னியா என்ற துறை முகத்தின் மீது ஜெர்மானிய வெடிகுண்டுகள் விழுந்தன.

பிரிட்டன், படைதிரட்ட உத்திரவு கொடுத்து விட்டது.

டான்ஜிக் பிரதேசத்தை ஜெர்மனியுடன் சேர்த்து விட்டதாக இன்று ஜெர்மன் பார்லிமெண்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

போலிஷ்காரர்களுடைய பைத்தியக் காரத்தனத்தை நீக்குவதற்காக பலாத்காரத்தை பலாத்காரத்தினாலேயே எதிர்க்க வேண்டியதைத் தவிர தமக்கு வேறு வழியில்லை யென்று, ஹிட்லர், ஜெர்மன் ராணுவத்திற்கு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

2 போலந்தின் மீது, ஜெர்மனி படையெடுத்து விட்டதனால், போலந்துக்கு தன்னாலியன்ற உதவியனைத்தையும் செய்வதாக பிரெஞ்சு அரசாங்கம் வாக்குறுதி கொடுத்திருக்கிறது.

அமெரிக்கா, இத்தலி, ஜப்பான், ஐர்லாந்து, போர்த்துகல், டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, நார்வே, ஸ்வீடன் முதலிய நாடுகள், தாங்கள் நடு நிலைமை வகிக்கப்போவதாக அறிக்கை வெளியிட்டிருக்கின்றன.

ராஜப் பிரதிநிதியின் அழைப்புக் கிணங்க இன்று மகாத்மா காந்தி வார்தாவிலிருந்து சிம்லாவுக்குச் சென்றிருக்கிறார்.

போலந்தில் யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. போலந்து முழுவதும் ராணுவச் சட்டம் அமுல். போலந்தின்மீது பறந்து சென்ற 36 ஜெர்மன் விமானங்களைச் சுட்டுக் கீழே வீழ்த்தியதாக போலிஷ் அறிக்கை கூறுகிறது.

பிரான்சுக்கும் பிரிட்டனுக்கும் பக்கத் துணையாகத்தான் இருப்பதாக துருக்கி வாக்குறுதி கொடுத்திருக்கிறது.

பிரான்சில், படை திரட்டும் உத்திரவு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஸர் ராதாகிருஷ்ணன், காசி ஹிந்து சர்வகலா சாலையின் உப அத்தியட்சர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

3 இங்கிலாந்தில் புதியயுத்த மந்திரிச் சபை அமைக்கப் பட்டது. இதில் பின்வரும் அங்கத்தினர்கள் இருப்பார்கள் :—

திரு. சேம்பர்லேன்—பிரதம மந்திரி.

ஸர்ஜான் ஸைமன்—பொக்கிஷ மந்திரி.

லார்ட் ஹாலிபாக்ஸ்—அந்நிய நாட்டு மந்திரி.

லார்ட் சாட்பீல்ட்—பாதுகாப்பு மந்திரி.

திரு. வின்ஸ்டன் சர்ச்சில்—கடற்படை மந்திரி.

ஹோரே பெலிஷா—யுத்தமந்திரி.

ஸர் கிங்ஸ்லி வுட்—ஆகாயப்படை மந்திரி.

ஸர் ஸாமியல் ஹோர்—லார்ட் ப்ரீவி சீல்.

அந்தோனி ஈடன்—குடியேற்ற நாட்டு மந்திரி.

இன்று பகல் 11 மணிக்கு இங்கிலாந்து, ஜெர்மனியோடு யுத்தம் தொடுத்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. பிரான்ஸும் பிரிட்டனுடன் சேர்ந்திருக்கிறது.

யுத்த நெருக்கடியில் எல்லாரும் கிரேட் பிரிட்டனுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று மன்னர்பிரானும், ராஜப்பிரதிநிதியும் அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

ஹிட்லரிஸத்தைத் தொலைத்து விடுவதற்காகவே பிரிட்டன் யுத்தம் தொடுத்திருக்கிறதென்று சேம்பர்லேன் பார்லிமெண்டில் பேசினர்.

சுபாஷ் சந்திர போஸ் சென்னைக்கு விஜயஞ் செய்தார். உற்சாகமான வரவேற்பு நடைபெற்றது.

4 காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டத்திற்கு வரும்படி சுபாஷ் சந்திர போஸை, சர்தார் படேல் அழைத்திருக்கிறார்.

இந்தியாவின் ராணுவத்தை நவீன முறையில் அமைப்பதற்காக, பிரிட்டிஷ் அரசாங்கத்தார், இந்திய அரசாங்கத்தாருக்கு $33\frac{1}{2}$ கோடி ரூபாய் நன்கொடையாக அளித்திருக்கின்றனர். இது தவிர, வட்டி யில்லாமல் $11\frac{1}{2}$ கோடி ரூபாய் கடனுகக் கொடுத்திருக்கின்றனர்.

34,000 டன் நிறையுள்ள 'அதினியா' என்ற பிரிட்டிஷ் கப்பல் அத்லாந்திக் மகா சமுத்திரத்தில் மூழ்கடிக்கப்பட்டது.

இன்று ராஜப்பிரதிநிதியை மகாத்மா காந்தியும், எம். ஏ. ஜின்னாவும் சந்தித்துப் பேசினார்கள்.

போலந்தில் ஜெர்மானிய ஆகாய விமானங்கள் வெடிகுண்டுகளை வீசி யெறிந்து பலத்த சேதத்தை உண்டுபண்ணின.

5 ஜெர்மானியக் கப்பல்களான 'நலிந்தா' 'காரல் பிரிட்டைன்' என்ற இரண்டும் மூழ்கடிக்கப்பட்டன என்று பிரிட்டிஷ் அறிக்கை கூறுகிறது.

'பாஸ்னியா' என்ற பிரிட்டிஷ் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாக ஜெர்மானிய அறிக்கையொன்று கூறுகிறது.

ஸிலேஷியா மாகாணத்தில் மட்டும் சுமார் 15,000 போலிஷ்காரர்களைக் கைதிகளாகத் தாங்கள் பிடித்துவிட்டதாக ஜெர்மன் அறிக்கையொன்று கூறுகிறது.

6 போலந்து அரசாங்கம், வார்ஸாவிலிருந்து காலி செய்து விட்டது.

ஜெர்மனியின் மேற்குப்போர் முனையில் பிரெஞ்சு துருப்புகள், ஜெர்மன் துருப்புகளின் மீது பிரங்கிப் பிரயோகம் செய்தனவென்று சொல்லப்படுகிறது.

ஜெர்மனியின் மீது பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் சுற்றிப் பறந்தன.

டான்ஜிக் பிரதேசத்தில், போலந்துக்காரர்கள், ஜெர்மானியர்களைத் தாக்கினார்கள்.

7 வார்ஸா நகரம், ஜெர்மானிய ஆகாய விமானங்களிலிருந்து பலமாகத் தாக்கப் பட்டது.

ஜெர்மானிய ஆகாய விமானங்கள், பாரிஸ் நகரைத் தாக்க முயற்சி செய்தன.

இங்கிலாந் தினிடத்திலும் பிரான்ஸினிடத்திலுமே தன்னுடைய அநுதாபம் இருக்கிறதென்று மகாத்மா காந்தி ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

பண்டித ஜவஹர்லால் நேரு, தமது சீனப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு, இன்று இரங்கூன் வந்து சேர்ந்தார்.

8 ஜெர்மானியப் படைகள், வார்ஸாவுக்குள் நுழைந்து விட்டன வென்று சொல்லப்படுகிறது.

போலந்தின் மாஜி பிரசிடெண்டாகிய பாதர்வெஸ்கிக்கு, போலந்தின் மீது தனக்குள்ள அநுதாபத்தைத் தெரிவித்து மகாத்மா காந்தி ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்.

9 இன்று வார்தாவில் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் கூடியது. மகாத்மா காந்தியும் பிரசன்னமா யிருந்தார், சுமார் ஆறு மணி நேரம் வாதம் நடைபெற்றது.

ஹிந்து மகா சபையின் தலைவரா யிருந்த புங்கி உத்தமர் ரங்கூனில் இறந்துவிட்டார்.

ருஷ்யாவில் படை திரட்டப்படுவதாக வதந்திகள் தோன்றி யிருக்கின்றன.

வார்ஸா நகரத்தை ஜெர்மானியர்கள் கைப்பற்றிக் கொண்டார்களென்ற செய்தியை போலந்து மறுக்கிறது.

ஜெர்மனியில் உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தோன்றி யிருப்பதாக பிரிட்டிஷ் அறிக்கைகள் கூறுகின்றன.

10 பிரெஞ்சுப் பீரங்கிப் படைகள், ஜெர்மானிய எல்லைக்குள் நுழைந்து விட்டன வென்று ஓர் அறிக்கை கூறுகிறது.

போலந்தில் லோட்ஸ் என்ற முக்கியமானதொரு நகரத்தை ஜெர்மானியர்கள் வசப்படுத்திக் கொண்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது.

சமஷ்டி அரசியல் திட்டத்தை ரத்து செய்து விட வேண்டு மென்றும், இது சம்பந்தமாக ராஜப் பிரதிநிதி ஓர் அறிக்கை வெளியிட வேண்டுமென்றும் மகாத்மா காந்தி ஹரிஜன் பத்திரிக்கையில் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

வார்தாவில் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் ஒன்பது மணி நேரம்கூடி ஆலோசித்தது. ஒரு முடிவுக்கும் வரவில்லை. ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் எம்.என். ஆனே முதலியோர் ஆஜராயிருந்தனர்.

11 இந்தியா சட்டசபை, ராஜாங்க சபை ஆகிய இரண்டு சபைகளையும் ஒன்று கூட்டி ராஜப்பிரதிநிதி இன்று பேசினார். அப்பொழுது, சமஷ்டி திட்டத்தைத் தற்காலிகமாகத் தள்ளி வைத்திருப்பதாகத் தெரிவித்தார்.

வார்தாவில் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் கூடி சர்வதேச நிலைமையைப் பற்றி ஐந்தரை மணி நேரம் ஆலோசித்தது.

ருஷ்யாவின் தலை நகரமாகிய மாஸ்கோவில், யுத்த பரபரப்புகள் இருப்பதாகத் தெரிகிறது.

ஸர் வில்லியம் ஓநீல், இந்தியா-பர்மா உதவி மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பர்மா கவர்னரான ஸர் ஆர்ச்பால்ட் காக்ரேன், தமது ரஜாவை ரத்து செய்து விட்டு, இன்று லண்டனிலிருந்து ரங்கூனுக்குப் புறப்பட்டுவிட்டார்.

'மக்தாபூர்' என்ற ஒரு பிரிட்டிஷ் கப்பல் முழுகடிக்கப்பட்டது.

போலந்து சண்டை ஏறக்குறைய முடிந்துவிட்டதாக ஜெர்மன் அறிக்கைகள் கூறுகின்றன.

12 ஸார் பிரதேசத்தில் பிரெஞ்சுத் துருப்புகள் அமைதியாக முன்னேறிச் செல்வதாக பிரெஞ்சு அறிக்கைகள் கூறுகின்றன. 'இன்வெர்லிப்பே' 'ப்ளோர்லோகி' என்ற இரண்டு பிரிட்டிஷ் கப்பல்கள் இன்று முழுகடிக்கப் பட்டன.

இன்று பாரிஸ் நகரத்தில் பிரெஞ்சு அரசாங்கப் பிரதிநிதிகளும், பிரிட்டிஷ் அரசாங்கப் பிரதிநிதிகளும் கூடி யுத்தசம்பந்தமாக ஆலோசித்தார்கள்.

வின்ட்ஸர் கோமகனும் அவர் மனைவியும் இன்று லண்டன் வந்து சேர்ந்தனர்.

போலந்துக்கு அநுதாபங் காட்டி ராஜாங்க சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

வார்தாவில் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடி நாலரை மணி நேரம் ஆலோசித்தது.

13 தற்போதைய யுத்தத்தில், பிரிட்டிஷாருக்குச் சார்பாக இருப்பதாக பாலஸ்தீனத்திலுள்ள அராபியர்கள் ஒரு அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

சீனாவிலுள்ள சில நகரங்களில் ஜப்பானிய ஆகாய விமானங்கள் வெடிகுண்டுகள் போட்டு, பலருக்குக் காயமுண்டு பண்ணின.

14 போலந்துக்குச் சொந்தமான கிட்னியா என்ற துறைமுகத்தை ஜெர்மானியர்கள் கைப்பற்றிக் கொண்டு விட்டனர்.

போலந்திலுள்ள ருஷ்யர்கள் துன்புறுத்தப் படுவதாக ருஷ்யப் பத்திரிகைகள் கூறுகின்றன.

ஆஸ்திரியாவின் மாஜி சான்ஸலரான டாக்டர் ஷூஷ்னிக், சுட்டுக் கொல்லப் பட்டதாகத் தெரிகிறது.

ஐரோப்பிய யுத்தத்தைப்பற்றி காங்கிரஸின் கொள்கை யென்ன வென்பதை விளக்கி, காரியக் கமிட்டி நீண்டதோர் அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

சுபாஷ் சந்திர போஸும் மகாத்மா காந்தியும் சிவகிராமத்தில் ஒன்றரை மணி நேரம் கலந்து பேசினார்கள்.

இன்று வின்ட்ஸர் கோமகனுக்கு அரசர் பெருமான் பேட்டி கொடுத்துப் பேசினார்.

15 ஐரோப்பிய யுத்த சம்பந்தமாகக் காங்கிரஸ் காரியக் கமிட்டி வெளியிட்ட அறிக்கை தயார் செய்யப்பட நான்கு நாள் பிடித்ததென்றும், இந்த அறிக்கையைப் பண்டித ஜவஹர்லால் நேருவே தயார் செய்தாரென்றும், காரியக் கமிட்டி விவாதத்தின்போது, எவ்வித நிபந்தனையும் கோராமல் பிரிட்டனுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற கட்சியில் தாம் ஒருவரே இருந்ததாகவும் மகாத்மா காந்தி ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்.

டெல்லி காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்தை போலீஸார் பரிசோதனை செய்து ஒருவரைக் கைது செய்தனர்.

பிரெஞ்சுத் துருப்புகள், ஜெர்மனியின் எல்லைப்புறத்தில் முன்னேறிச் சென்று கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

17 இன்று ருஷ்ய ராணுவப் படை போலந்தின்மீது படையெடுத்தது.

போலந்திலுள்ள அந்நிய நாட்டுத் தூதர்களுடைய காரியாலயங்கள் போலிஷ்-ருமேனிய எல்லைப்புறத்திற்கு வந்திருக்கின்றன.

துருக்கிக்கும் ருஷ்யாவுக்கும் விசேஷ ஒப்பந்தம் ஏற்படும்போலிருக்கிறது.

ஜெர்மனியின் மேற்குப் போர் முனையில் அக்ஸ்-லா-சாபேல் என்ற வழியிலுள்ள ஜெர்மானியர்கள் துருப்புகளோடு காலி செய்து விட்டனரென்று சொல்லப்படுகிறது.

இன்று பர்மாவின் கவர்னரான ஸர் ஆர்ச்பால்ட் காக்ரேன், ராஜிநாமா செய்து கொண்டு, இங்கிலாந்திலிருந்து, ஆகாய விமான மூலம் இரங்கூன் வந்து சேர்ந்தார்.

18 ருஷ்யத் துருப்புகள், சோவியத்-போலிஷ் எல்லைப்புறத்தைத் தாண்டி போலந்துக்குள் சுமார் 90 மைல் வரை உள்ளே பிரவேசித்திருக்கின்றன என்று ஒரு அறிக்கை கூறுகிறது.

'கரேஜஸ்' என்ற ஒரு பிரிட்டிஷ் யுத்தக் கப்பல், ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பலொன்றினால் மூழ்கடிக்கப் பட்டிருக்கிறது.

போலந்து போர் முகத்திலுள்ள ஜெர்மானியத் துருப்புகள் பெரும் பாகம் மேற்குப் போர் முனைக்கு மாற்றப்படுகின்றன.

பிரெஞ்சு பிரதம மந்திரியான டலாடியர், இன்று பிரெஞ்சுக் கிழக்குப் போர் முனைக்கு விஜயஞ் செய்தார்.

விண்ட்ஸர் கோமகன், ராணுவத்தில் ஒரு பதவியை ஏற்றுக்கொண்டார்.

போலந்து இந்த யுத்தத்தில் எப்படியாவது வெற்றி பெறும் என்று தாம் நம்பிக்கை கொள்வதாக, போலிஷ் குடியரசுத் தலைவர் தெரிவிக்கிறார்.

ஜப்பான் விஷயத்தில் அமெரிக்கா காட்டும் மனப்பான்மை மாறினாலன்றி, பசிபிக் சமுத்திரம் ஒரு பெரிய யுத்தகளமாகி விடுமென்று ஜப்பான், அமெரிக்கா அரசாங்கத்திற்கு ஓர் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

சீன-ஜப்பானிய யுத்தத்தில் ஜப்பானியர்கள் பெரிய படையெடுப்பை ஆரம்பித்திருக்கின்றனர்.

19 இன்று, ஹிட்லர், டான்ஜிக்குக்கு விஜயஞ் செய்து, இந்தப் பிரதேசம் ஜெர்மனியோடு சேர்ந்து விட்டதைப்பற்றித் தாம் ரொம்ப சந்தோஷப்படுவதாகக் கூறினார். அப்பொழுது, போலந்து விஷயத்தில் ஜெர்மனி சமாஸமாகப் போவதற்கு பிரிட்டன்தான் குறுக்காக நின்றதென்று கூறினார்.

ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் சிநேக ஒப்பந்தம் ஏற்பட்டதன் காரணமாக, ருஷ்யாவின் உதவி சீனாவுக்குக் கிடைக்காமல் போகாதென்று தளபதி சியாங்-கை ஷேக் கூறினார்.

பதினாயிரம் போலிஷ் துருப்புகள் நிராயுதபாணிகளாக்கப் பட்டு ருமேனியாவில் காப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், இது தவிர, 41,500 பேரும் 400 குழந்தைகளும் ருமேனியாவில் அடைக்கலம் கொடுக்கப்பட்டிருக்கிறார்களென்றும் ஓர் அறிக்கை கூறுகிறது.

நாலைந்து ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களை, பிரெஞ்சுக் கப்பல்கள் மூழ்கடித்து விட்டனவென்று ஒரு பிரெஞ்சு அறிக்கை கூறுகிறது.

போலந்தின் குடியரசுத் தலைவராகிய மோசிஸ்கியும் மற்ற அரசாங்க அங்கத்தினர்களும் ருமேனியாவில் வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

போலந்தின் மாஜி பிரதம மந்திரியாயிருந்த அலெக்ஸாந்தர் பிரிஸ்டோர், வில்னா என்ற ஊரில் இறந்து கிடந்தார்.

ஸ்லோவேகியாவில் ஜெர்மானியர்களுக்கு விரோதமான இயக்கம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

20 பிரெஞ்சு அரசாங்கத்தார் ஜெர்மனிக்கு விரோதமாக எடுத்துக் கொண்டுள்ள யுத்த நடவடிக்கைகளை பிரெஞ்சு பார்லிமெண்ட் அங்கீகரித்திருக்கிறது.

மஞ்சூகோ எல்லைப்புற சம்பந்தமாக ஜப்பானுக்கும் ருஷ்யாவுக்கும் ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கி, சமாஸம் ஏற்பட்டு விட்டது.

கிழக்குப் போலந்தை ருஷ்யா ஆக்ரமித்துக் கொண்டு விட்டதைப்பற்றி ஜார்ஜ் பெர்னார்ட் ஷா என்ற பிரிட்டிஷ் அறிஞர் அபிப்பிராயங் கூறுகையில், ஸ்டாலின், ஹிட்லரை ஒரு கருவியாக உபயோகித்துக் கொண்டு வருவதாகக் கூறுகிறார்.

21 கவிஞர் ரவீந்திர நாத் டாகூருடைய மருகராகிய சௌம்யேந்திர நாத் டாகூர் இன்று கல்கத்தாவில் கைது செய்யப்பட்டார்.

போலந்தில், ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் இடையில் எல்லை வகுக்கப்பட்டது.

தற்போதைய ஐரோப்பிய யுத்தத்திற்கு பிரிட்டன்தான் காரணமென்று கூறி, ஜெர்மன் அரசாங்கம் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

ருமேனியாவின் பிரதம மந்திரியாகிய காலினெஸ்க்யு என்பவர், இன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

போலந்திலுள்ள சில முக்கியமான நகரங்களை ருஷ்யப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

அமெரிக்காவின் பார்லிமெண்டாகிய காங்கிரஸ் இன்று கூடியது. மேற்படி தேசம் ஐரோப்பிய யுத்தத்தில் நடுநிலைமை வகிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

22 ஜெர்மனியின் ஆதிக்கத்திற்கு வந்திருக்கிற கிட்னியா என்ற துறைமுகம் 'கோட்டென் ஹாபன்' என்று பெயரிடப்பட்டு, அந்நகரத்திற்கு இன்று ஜெர்மன் போலீஸ் ரகசியப் படையின் தலைவராகிய ஹிம்லர் பிரவேசஞ் செய்தார்.

ஜெர்மனியின் மேற்குப் புற அரணாகிய சீக்பிரெட் அரண் வரை, பிரெஞ்சுத் துருப்புகள் அணுகிவிட்டன வென்று தெரிகிறது.

ருமேனியாவின் பிரதம மந்திரி, சுட்டுக் கொல்லப்பட்டதன் விளைவாக, மந்திரிச் சபை திருத்தியமைக்கப்பட்டது.

ஜெர்மனியின் மேற்குப் போர் முனைக்கு ஹிட்லரும், ஜெர்மன்சேனாதிபதியும் வந்திருப்பதால், அங்கு ராணுவச் சுறுசுறுப்பு அதிகமாயிருக்கிறது.

23 போலந்தைப் பிரித்து ருஷ்யாவும் ஜெர்மனியும் எடுத்துக்கொண்டதன் விளைவாக, பாதி ஜெர்மனிக்கும், பாதி ருஷ்யாவுக்கும் போய்ச் சேர்ந்திருக்கிறதென்று சொல்லலாம்.

போலோக்னா என்ற நகரத்தில் முஸோலினி பேசுகிறபோது, இன்னும் சமாதானத்திற்கு வழி இருக்கிறதென்று கூறினார்.

கிரீஸ் தேசத்திலுள்ள ஸ்மிர்னா என்ற ஊரில் பெரிய பூகம்பம் ஏற்பட்டது. 200 பேருக்கு மேல் மரணமடைந்தனர்.

போலந்தில் ஏற்பட்ட சண்டையின் விளைவாக, சுமார் 1½ லட்சம் ஜெர்மானியர்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் போயிருக்கிறார்கள் என்று ஓர் அறிக்கை கூறுகிறது.

24 ஜெர்மனியின் மேற்குப் போர் முனையில், பிரெஞ்சுப் படைகளுக்கும் ஜெர்மானியப் படைகளுக்கும் பீரங்கி யுத்தம் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது.

ஸ்வீடன் தேசத்தைச் சேர்ந்த ஒரு சாமான் படகை, ஜெர்மானியர் மூழ்கடித்து விட்டனர்.

பிரபல மனோதத்துவ சாஸ்திரியாகிய சிக்மண்ட் ப்ராயிட் இன்று லண்டனில் இறந்து விட்டார்.

25 லிதுவேனியாவில் படை திரட்டும் உத்தரவை, அரசாங்கத்தார் அமுலுக்குக் கொண்டு வந்திருக்கின்றனர்.

வார்ஸா, மோட்லின் என்ற இரண்டு நகரங்களின் மீது, ஜெர்மானியர் பலத்த பீரங்கிப் பிரயோகம் செய்து வருகின்றனர்.

சீன-ஜப்பானிய யுத்தத்தில், ஜப்பானியப் படை, சாங்ஷா என்ற ஊரை நோக்கி மும்முரமாக முன்னேறி வருகின்றது என்று சொல்லப்படுகிறது.

ஜெர்மனியின் மேற்கு அரணாகிய சீக்ப்ரிட் அரண் மீது, பிரெஞ்சுப் படைகள் பீரங்கிப் பிரயோகம் செய்து வருகின்றன.

துருக்கியின் அந்நிய நாட்டு மந்திரி, தமது பரிவாரங்களுடன், ருஷ்யாவுடன் சமாதானம் பேச இன்று மாஸ்கோ நகரம் வந்து சேர்ந்தார்.

26 பிரான்ஸிலுள்ள பொதுவுடைமைக் கட்சியை, அரசாங்கத்தார் கலைத்து விட்டனர்.

ருஷ்யாவின் ஆதிக்கத்துக்குட்பட்ட போலந்தில், சோவியத் நிருவாக முறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

27 வார்ஸா நகரம் இன்று ஜெர்மானியர்களுக்குப் பணிந்து விட்டது.

ஜெர்மானியர்கள், ஸார்ப்ருக்கென் பிரதேசத்தைக் கைவிட்டு விட்டதாக ஓர் அறிக்கை கூறுகிறது.

ஜெர்மன் அந்நிய நாட்டு மந்திரியான வான் ரிப்பென்ட்ராப், இன்று மாஸ்கோ நகரம் வந்து சேர்ந்தார்.

பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரியாகிய ஸர் ஜான் ஸைமன், இன்று பார்லிமெண்டில் புதிய பட்ஜெட்டை ஆஜர் படுத்தினார். இதன்படி சில புதிய வரிகள் போடப்பட்டிருக்கின்றன.



தேவி சௌதுராணி

பங்கிம் சந்திர சட்டோபாத்யார் வங்காளியில் இயற்றியது; வங்காளி மூலத்திலிருந்து மொழி பெயர்த்தவர்: ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன், பி. ஏ., வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; டபிள் கிரௌன் அளவு 1x16; 236 பக்கங்கள்; விலை. ரூ 1—4—0

பங்கிம் சந்திரருடைய 'ஆனந்த மடம்,' 'விஷ விருக்ஷம்' ஆகிய இரண்டு நவீனங்களோடு, இந்த 'தேவி சௌதுராணி'யையும் நாம் சேர்க்க விரும்புகிறோம். சரித்திர நவீனமாக இஃது எழுதப்பட்டிருக்கிறது. புக்ககத்தினரால் திரஸ்கரிக்கப்பட்ட பிரபுல்லா, தேவி சௌதுராணியாக மாறி நிஷ்காமிய கர்மத்திலே ஈடுபட்டு, ஜிதேந்திரியையாகி வாசஞ் செய்யுங் காலத்திற்கூட, பதி பக்தி குன்றாதவளாய் நாயகனாகிய விரஜேசுவரனை அடைய முயற்சி செய்த வரலாற்றை ஆசிரியர் மிக அழகாக எடுத்துச் சொல்லிக் கொண்டு போகிறார். பவானி பாடக்கின் ஆதரவில் தேவி சௌதுராணி நடத்தி வந்த வாழ்க்கையை வருணித்துச் செல்கிற இடம், (ப[illegible]ம் அத்தியாயம்) நிஷ்காம கர்ம யோகத்தின் பெருமையை நமக்கு நன்கு எடுத்துக் காட்டுவதாயிருக்கிறது.

'நீங்கள் சொன்னபடி கர்மாவை நான் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு அர்ப்பணஞ் செய்து விட்டேன். அது அவருடையது; என்னுடையதன்று. அதைச் செய்வதிலிருந்து ஏற்படும் சுகதுக்கங்களும் அவருடையது. எதற்காக எது செய்ய வேண்டுமோ அதைச் செய்யத் தயாராக இருக்கிறேன். உங்கள் உத்திரவுக்குக் கீழ்ப்படிகிறேன்' என்று பிரபுல்லா மேலும் சொன்னதைக் கேட்டு பவானி பாடக் பரவசம் கொண்டார்.

—பக். 95

படகில் தேவி சௌதுராணி வீணை வாசித்துக் கொண்டிருந்ததை வருணிக்கிற போது பங்கிம் சந்திருடைய கற்பனா சக்தி உச்சஸ்தாயியை அடைகிறது.

நவரத்தின பூஷிதையாக ஸரஸ்வதியே உருவெடுத்து வந்தது போல வீணை வாசித்துக் கொண்டிருந்தாள் அந்த சர்வாங்க சுந்தரி. சந்திரன் பிம்பத்தில் நிலவு கலப்பது போல அவளிடத்தில் அந்த

மிருதுவான மதுர வீணை தொனியும் கலந்தது. ஜலத்தில் சந்திர கிரணம் விளையாடுவது போலவும், அந்தக் கட்டழகியின் அலங்காரத்தில் சந்திரிகை புகுந்து விளையாடினது போலவும், காட்டு மலர்களின் மணம் ஏறியதும், வெண்ணிலவு நீராடியதுமான காற்றில் அந்த சப்தம் விளையாடிற்று. பலவிதமான ஸ்வர ஸ்தானங்களிலிருந்து கிளம்பிய கமகங்களையும் குழைவுகளையும் எப்படி எடுத்துரைப்பது? வீணை சில சமயங்களில் சோகத் துவனியுடன் உருகிற்று; சில சமயங்களில் ராகத்தின் உச்சஸ்தாயியில் கிளம்பி எழுந்தது. நர்த்தனம் செய்வது போலவும், ஆதரவுடன் கொஞ்சுவது போலவும், கர்ஜிப்பது போலவும், புன்சிரிப்புப் பூப்பது போலவும் மாறி மாறி கானம் செய்தது. செஞ்சுருட்டி, காம்போஜி, ஸிந்து ராகங்களில் முழக்கம் செய்தது; கேதாரம், நாட்டை, பியாக் ராகங்களில் கம்பீரமாக ஒலித்தது; கானடா, சஹானா, வாகீசுவரி ராகங்களில் உணர்ச்சிப் பெருக்காகக் கிளம்பிற்று; நாதம், பூமாலை போல நதியின் அலை வெள்ளத்தில் மிதந்து சென்றது. பிறகு ஓரிரண்டு தடவை பர்தாத் துணியை எடுத்துவிட்டு திடீரென்று அவள் புத்துணர்ச்சி மேலிட்டு வீணையின் தாரஸ்தாயியில் உயிர் ஒலியைக் கிளப்பத் தந்திகளை உத்வேகத்துடன் விம்மச் செய்தாள். பக் 109.

ஸ்ரீ ராஜகோபாலனுடைய மொழிபெயர்ப்பு நன்றாகவே இருக்கிறது. அல்லயன்ஸ் கம்பெனி யாருடைய நூல்கள் யாவுமே, எழுத்துப் பிழைகளின்றி சுத்தமாக இருக்கும். ஆனால் இந்த நூலில் என்ன காரணத்தினாலோ நாம் எதிர்பாராத சில பிழைகள் காணப் படுகின்றன. இவை, அடுத்த பதிப்பில் திருத்தப்படுமென்று நாம் நப்புகிறோம்.

சுகந்தா

அல்லது

காதலின் சோதனை

ஆசிரியர்: ஸ்ரீ எஸ். ஆர். சாரங்கபாணி; புத்தகம் கிடைக்குமிடம்: ஸ்ரீ எஸ். ஆர். சாரங்கபாணி, நெ. 11, டால்மியா பில்டிங்ஸ், மதுங்கா, பம்பாய்; டெமி அளவு 1x8; 98 பக்கங்கள்; விலை: பன்னிரண்டு அணா.

இஃதொரு ஜனசார நாடக நூலென்று, இதற்கு முன்னுரையளித்திருக்கிற ஸ்ரீ கே. ராமசாமி ஐயங்கார் கூறுகிறார். அந்த மட்டும் ஜனசார சீர்திருத்த நூலென்று சொல்லாமல் விட்டதற்கு நாம் சந்தோஷமே படுகிறோம். 'சிறந்த நடிப்பைக்காட்டக்கூடிய பல சந்தர்ப்பங்களும் இதிலிருக்கிறதென்று' தாம் தெரிந்துகொண்டதாக (சாஸ்வதிகான சபையார் நடித்துக் காண்பித்ததிலிருந்து) ஆசிரியர் கூறுகிறார். அப்படியானால், நடிப்புக்கலைக்கென்று தனியான இலக்கணமொன்று, பம்பாய் முதலிய பிரதேசங்களில் இருக்கிறதோ என்னவோ நமக்குத் தெரியாது. நம்மைப் பொறுத்த மட்டில், இந்த நாடகத்தில் படிப்பு ருசியோ, நடிப்பு ருசியோ இல்லை. உயர்ந்த கருத்துக்களோ, கற்பனைகளோ, தேடித் தேடிப் பார்த்தும் நமக்குக் கிடைக்கவில்லை. பாத்திரங்களுக்கேற்றவாறு

சம்பாஷணைகளை அமைக்கும் பயிற்சிக்கு, இந்த நூலாசிரியர் இன்னும் அதிகமாகத் தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பொதுவாக இந்த நாடகம், தற்கால சினிமாக்களுக் கென்று எழுதப்பட்ட ஒரு நாடகம் போல் தோன்றுகிறது. இத் தகைய நாடகங்கள், தமிழ் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட வேண்டியது அவசியமா? இத்தகைய 'கலைக் களஞ்சியங்கள்' தமிழ் நாட்டிலேயே ஏராளமாக இருக்கின்றனவே!

கப்சிப் தர்பார்

(ஹிட்லரின் வாழ்க்கையும கனவுகளும்)

ஆசிரியர்கள்: ஸ்ரீமான்கள் சொ. விருத்தாசலம், ந. ராமரத்னம்; நவயுகப் பிரசுராலயம் லிமிடெட், ஜீ. டி. மதராஸ்; டபிள் கிரவுன் அளவு 1x16; 140 பக்கங்கள்; விலை: எட்டு அணா

நமது விமரிசனத்திற்கு வந்திருக்கிற இந்த நூல், இரண்டு ஆசிரியர்களால் எழுதப்பட்டிருக்கிறது. இரண்டு பேரும் ஹிட்லரைப்பற்றி வெவ்வேறு விதமான அபிப்பிராயங்களை ஒரே நூலில் தெரிவித்திருக்கிறார்கள். ஒருவர், ஹிட்லரை ஒரு வெறியன் என்கிறார். இன்னொருவர், ஹிட்லர் ஒரு யுக புருஷன் என்கிறார். இதனால் தான், இந்த நூல், ஒரு தனி மனிதனுடைய பூர்ஜிய சரித்திரமாகவுமில்லை. ஒரு தேசத்தின் பரிபூர்ண சரித்திரமாகவுமில்லை. இரண்டுங் கலந்த ஒரு மிசிரம் என்று ஒருவாறு சொல்லலாம். அதுவும் ஒருவாறு தான்.

ஜெர்மனியிலிருந்து பிரஷ்டம் செய்யப்பட்ட கோன்ராட் ஹைடன் (Konrad Heiden) என்ற ஒரு யூதர் ஹிட்லரைப்பற்றி ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். ஏறக்குறைய அதில் கூறப்பட்ட விஷயங்களிற் பெரும்பாலன, முதல் ஒன்பது அத்தியாயங்களில் பிரதிபலிக்கின்றன என்று சொல்லலாம். நமக்கு ஒரு மனிதன் பிடிக்கவில்லையென்றால், அவனுடைய வமிசாவளியிலே கூடவா களங்கத்தை ஏற்படுத்திவிட வேண்டும்?

புத்தகங்களுக்கு எழுதுகிற தினுசு வேறே; தினசரிப் பத்திரிகைகளில் எழுதுகிற தினுசுவேறே. புத்தகங்கள், இலக்கியத்தில் நிரந்தர ஸ்தானம் பெறுபவையாயிருக்க வேண்டும். இந்த நோக்கத்தோடு ஓர் ஆசிரியன் எழுதுகிற நூலுக்குத்தான் அதிக மான மதிப்பிருக்கும். எனவே புத்தகங்களில் கண்ணியமான பதப் பிரயோகங்களும், பொருத்தமான உபமான உபமேயங்களும் இருக்க வேண்டுவது மிகவும் அவசியம்.

ஹிட்லர் பார்வைக்கு, (போட்டோக்களில்) தலைமட்டிலும் "உர்" என்று இருந்தாலும் கொஞ்சம் கொள கொளா உடம்பு; அதுவும் ரீஷ் சான்ஸலர் ஆனபின் அதிகம். மிலிட்டேரி தோரணையில் 'டக்' என்று சலூட் வைக்கத் தெரியாது. சலூட் வைக்கும்பொழுதெல்லாம் கை 'கோணக்' என்று 'கோணல்' காண்பித்து நிற்கும். பக் 10.

ஆனால் நிர்வாக இலாகாவில் உட்கார்ந்து கொண்டு, நாளாவிர்த்தி வேலைகளை, ஜட்கா வண்டிக் குதிரைமாதிரிப் பார்த்துக்கொண்டிருக்கத் திறமை கிடையாது. பக் 11.

ஸ்ரீ. சத்தியமூர்த்தி அந்தக் காலத்தில், 'அவன் தோல் வெளுப்பாம் நம் தோல் கறுப்பாம்' என்ற பல்லவியை வைத்துக் கேட்கிறவர்களுக்கு ஆவேசத்தை ஊட்டியது போல, "ஜெர்மனியராகிய நாம்" என்பதற்கு ('வீர்') என்ற ஒரு பதத்தை உபயோகிப்பான். இந்த 'வீர்' என்ற வார்த்தை பூசாரியின் உடுக்கைப்

போல உன்மத்த வெறியை யூட்டிவிடுமாம். அப்பொழுதெல்லாம் ஜெர்மனியில் இந்த 'வீர்' என்ற பதப் பிரயோகத்திற்கு அர்த்தமே கிடையாது. ஜெர்மனி ஒரு நெல்லிக்காய் மூட்டை' பக் 12.

எல்லாரும் மேல் வீட்டு அண்ணாச்சியும் கீழ் வீட்டுத் தம்பியுந்தான்! பக் 15.

அலாயி ஹிட்லருக்குத் தொழில் செருப்புத் தைப்பதும் கலியாணம் செய்து கொள்வதும். பக் 16.

கோயரிங்குடைய தடித்தனமும் கோபல்ஸின் இரக்கமற்ற சிந்தையும் உடையவன். சமாதானத்தை வெறுத்த குழப்பத்தில் மகிழ்ச்சி கொள்ளும் காலி. பக் 39.

ஹிட்லரின் கதை, பவுண்டில் கிடந்த ஜல்லிக்கட்டுக் காளை பிய்த்துக் கொண்டு போன மாதிரி. பக் 60.

புத்தகங்களை வாங்கிப் படித்துத் தங்கள் அரசியல் அறிவையோ உலக ஞானத்தையோ அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் கொண்ட தமிழன்பர்கள் மேற்படி வாசகங்களை எவ்வளவு தூரம் சுவைத்து இன்புறுவார்கள் என்பது நமக்குச் சந்தேகமா யிருக்கிறது.

நூலின் பத்தாவது அத்தியாயத்திலிருந்து கடைசி வரையில், தமிழ் நடையும் விஷயத் தொடர்ச்சியும் நன்றா யிருக்கின்றன. 1933ம் வருஷம் ஹிட்லர் பதவி ஏற்றது முதற்கொண்டு, தற்காலம் வரை-போலந்து-டான்ஸிக் பிரச்னை வரை-ஜெர்மனியின் அரசியல் போக்கு எப்படி இருந்து வந்திருக்கிறதென்பது தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறப்பட்டிருக்கின்றன. தினசரிப் பத்திரிகைகளைத் தொடர்ந்து படிக்கிறவர்களுக்கு இவை யாவும் புதிய விஷயங்களாயில்லாமற் போனாலும், விஷயங்களைத் தொகுத்துக் கூறி யிருப்பது பாராட்டத்தக்கதல்லவா?

மற்றொரு முக்கியமான விஷயம். நூலின் பிற்பாகத்தை எழுதிய ஆசிரியர், ஹிட்லர் ஒரு மனிதன் என்று மதித்து, அவனுக்குரிய மதிப்பைக் கொடுத்திருக்கிறார். இது மிக முக்கியமானது. ஒருவன் நமது பரம சத்துருவா யிருந்தாலும், அவனுடைய கொள்கைகள் பரிபூரணமாகப் பிடிக்கா விட்டாலும், அவனைப்பற்றி எழுதுகிற போது கண்ணியமாகவும் தர்க்க ரீதியாகவும் தாக்க வேண்டாமா? இது விஷயத்தில், நூலின் பிற்பாக ஆசிரியர் பின்பற்றியிருக்கும் முறையை நாம் பாராட்டுகிறோம்.

நூலின் முதல் ஒன்பது அத்தியாயங்களில் ஹிட்லர் வருணிக்கப்பட்டிருப்பதற்கும், பிந்திய ஒன்பது அத்தியாயங்களில் வருணிக்கப்பட்டிருப்பதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது பாருங்கள்:—

ஹிட்லரை ஒரு கொடுங்கோலனாக வெளியுலகத்தாருக்குப் படம் எழுதிக் காட்டுவது சாம்ராஜ்ய நாடுகளின் ஏகாதிபத்திய நலன்களுக்கு ஏற்றதா யிருக்கலாம். ஆனால் ஒரு தேசம் முழுவதையும், ஒரு மனிதன் அடக்கி வைத்திருக்கிறானென்று சொன்னால், அந்தத் தேசத்தினரின் சம்மதம் இல்லாமலா அப்படி நடக்கிறது? முதுகெலும்பில்லாத நிர்வாகத்தை ஜனங்கள் ஆதரிக்கமாட்டார்கள். உறுதியும், திட சித்தமுமுள்ள நிர்வாக முறைதான், பாமர மக்களுக்கு கவர்ச்சியை அளிக்கும், ஜெர்மன் மக்களை ஹிட்லர் அடக்கி வைக்கவில்லை. ஹிட்லர் யுக-புருஷன். ஜெர்மனிக்கு அவன் வேண்டும். பக் 134.

ஜெர்மன் மக்களின் தேசிய கௌரவம் உயரும் வகையில் அவன் காரியங்கள் செய்திருக்கிறான் என்பதை யாராவது மறுக்கிறார்களா? மக்களின் நலன்களுக்கு விரோதமாக அவன் நடந்துகொள்ளவில்லை யென்பது ஒப்புக்கொள்

ளப்பட்டால், ஹிட்லர் ஆட்சியை ஏன் குறை கூறவேண்டும்? பக் 136.

ஹிட்லர் பைத்தியக்காரனல்லன், வெறும் சொப்பனம் காண்பவனல்லன். வறுமையிலும், பட்டினியிலும் உழன்று கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த காலத்தில் ஹிட்லர் சில வாழ்க்கை நியதிகளை நிர்ணயித்துக் கொண்டான். அவற்றையே இப்பொழுதும் பின் பற்றுகிறான். பக் 139.

பொதுவாக, ஒரே நபரைப்பற்றி, இரண்டு ஆசிரியர்கள் மாறுபட்ட கருத்துக்களைத் திணித்து ஒரு புத்தகமாக வெளியிடுகிற முறையை நாம் பாராட்ட முடியவில்லை. தவிர நூல்களுக்கு இடப்படும் பெயர்களும் கொஞ்சம் கௌரவமாகவும் அழகாகவும் இருக்க வேண்டும். 'கப்சிப் தர்பார்' 'பாசிஸ்ட் ஜடாமுனி' என்ற தலைப்புகளைவிட வேறு தலைப்புகள் அகப்படவில்லையா? சிறப்பாக, இந்த மாதிரியான உயர்ந்த சீர்திருத்தங்களை யெல்லாம், நவயுகப் பிரசுராலயத்திலிருந்து நாம் அதிகமாக எதிர்பார்க்கிறோம். ஏனென்றால், அவர்களால் வெளியிடப் பெறும் நூல்கள் தமிழ் இலக்கியத்தில் நிரந்தர ஸ்தானம் பெற வேண்டுமென்பது நமது ஆசை.

தானே தமிழ் கற்கும் முறை

(Tamil Self-Tanght)

வெளியிட்டோர்: தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை; விலை: ஆறு அணா.

கல்வியறிவு பெறாத முதியோருக்கும் சிறியோருக்கும் அந்த அறிவைப் புகட்ட வேண்டு மென்ற ஓர் எண்ணம், ஓர் உணர்ச்சி தமிழ் நாட்டில் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. நாட்டின் முன்னேற்றத்தில் நாட்டஞ் செலுத்தும் பலர்க்கும் இது பெரு மகிழ்ச்சியையுண்டுபண்ணும் என்பதில் ஐயமில்லை. இவ்வெண்ணத்தையும், உணர்ச்சியையும் செயல்முறையில் கொணர விரும்பும் அன்பர்களுக்குத் துணைக் கருவியாக இந்த 'தானே தமிழ் கற்கும் முறை' அமைந்திருக்கிறது. மிக உபயோகமுள்ள புத்தகம். சுமார் ஒரு மாத காலத்திற்குள் தமிழை எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டு விடலாம். ஒவ்வோர் எழுத்தையும் பல முறை எழுதிப் பழகுவதற் கேற்ற வசதிகளும், அந்த ஒவ்வோர் எழுத்திருந்து எத்தனை வார்த்தைகளைக் கற்றுக் கொள்ளலா மென்பதற்கான சௌகரியங்களும் இதில் செய்து தரப்பட்டிருக்கின்றன. சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தார், தமிழ்மொழிக்காக இதுவரை செய்து வந்துள்ள பல அரிய பணிகளுள், இந்த நூலை வெளியிட்ட பணியே சிகரம் போல் நிற்கிற தென்று கூறுவோம். தமிழ் நாட்டில் கல்வியின்மையால் ஏற்பட்டிருக்கிற அந்தகாரத்தைப்போக்க விரும்பும் ஒவ்வொரு தமிழ்த் தொண்டரும் ஒவ்வொரு தேசபக்தரும் இந்தப் புஸ்தகமாகிற விளக்கை ஏந்திக் கொண்டு கிராமங்கள் தோறும் சென்று, தமிழ் மக்களின் கண்ணைத் திறக்க வேண்டுமென்று விரும்புகிறோம்.

சக்தி

மாத வெளியீடு; நிருவாக ஆசிரியர்: ஸ்ரீ வை. கோவிந்தன். உரிமையாளர்கள்: சக்திபிரஸ் லிமிடெட், 55, அரண்மனைக் காரத் தெரு, சென்னை; டெமி 1x4 அளவு; 48 பக்கங்கள்;

வருஷ சந்தா: உள்நாடு ரூ 3-8-0; பர்மா: ரூ 4-0-0; மலேயா ரூ 5-0-0.

இந்தப் பத்திரிக்கையைக் கையிலெடுத்த வுடனேயே மிகவும் கவர்ச்சி தரக்கூடியதாக இருக்கிறது. உள்ளே நல்ல தாள்; வெளியே நல்ல அட்டை; இவை போலவே, விஷயங்களும் பலருக்கும் பயன் படக்கூடிய நல்ல விஷயங் களாயிருக்கின்றன. நமது பார்வைக்கு வந்துள்ள முதலிதழில், டாக்டர் உ.வே. சாமிநாதையர், ஸ்ரீமான்கள் மு. ராகவய்யங்கார், சோமசுந்தர தேசிகர், சுத்தானந்த பாரதியார், சற்குணர் முதலிய அறிஞர்கள் அரிய கட்டுரைகள் எழுதி யிருக்கிறார்கள். ஒவ்வொரு கட்டுரையும் அறிவுக்கு உணவு ஊட்டக் கூடியதாக இருக்கிறது. 'சக்தி' யின் ஆசிரியர் கொள்கை பின் வருமாறு விவரிக்கப் படுகிறது:—

சக்தி, காங்கிரஸ் சர்க்காரின் ஆணையையே போற்றித் தொண்டு புரியும். மஹாத்மாவின் திருவுளக் கட்டளைக்குப் புறம்பான வேறெந்தப் புதிய கட்சியையும் அது ஆதரிக்காது. நமது நாட்டை நிதானமாக, பதறாமல் இரத்தம் சிதறாமல், பக்குவமறிந்து நடத்தும் அற்புதசக்தி மஹாத்மாவுக்கே உண்டு என்பது கண்கூடு. அவர் 'நில்' லென்றால் நிற்போம், 'செல்' லென்றால் செல்வோம். அதுவே நமது கடமையாம். அவர் ஆசி பெற்ற எல்லா இயக்கங்களையும், சீர்திருத்தங்களையும் நாம் வணக்கமுடன் வரவேற்றுப் போற்றுவோம்.

'சக்தி' பத்திரிக்கை நீண்டு நிலவி, பொதுவாக உலகத்திற்கும் சிறப்பாகத் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் அரிய பணிகள் பல ஆற்றி வரும் என்று உறுதியாக நம்புகிறோம்.

ஜேர்மனிக்கு விரோதமாக பிரிட்டன் யுத்தம் தொடுத்திருக்கிற தல்லவா? இதில் பிரிட்டிஷ் படைகளின் சேனாதிபதிகள் வருமாறு:—

வைகவுண்ட் கோர்ட்—*ஏகாதிபத்தியச் சேனை ஸ்தாபனத்தின் பிரதம தலைவர்.*

ஸர் எட்மண்ட் ஐரன்சைட்—*பிரதம சேனாதிபதி.*

ஸர் டட்லி பவுண்ட்—*கடற் படைத் தலைவர்.*

சர் சைரில் நியுவால்—*ஆகாயப் படைத் தலைவர்.*

மணி அடிப்போன்

(ருஷ்யக் கதை)

மொழிபெயர்த்தவர்——எஸ். கிருஷ்ணன்

வ்ளாடிமீர் கோரோலெங்கோ (Vladimir Korolenko) (1853-1921) சிறந்த ருஷ்ய கதாசிரியன். தன் கொள்கை காரணமாக, வாழ்க்கையில் பல கஷ்டங்களை அநுபவித்திருக்கிறான். அரசாங்கத்தினரால் பிரஷ்டம் செய்யப்பட்டு ஆறு வருஷ காலம் சைபீரியாவில் வாசம் செய்தான். இவனுடைய சிறந்த நாவல் 'குருட்டுப் பாடகன்' (Blind Singer) என்பது. இவனுடைய சிறு கதைகள் பலவற்றுள் ஒன்றான 'மணியடிப்போன்' என்ற கதையை ஸ்ரீ கிருஷ்ணன், இங்கு மொழிபெயர்த்திருக்கிறார்.

எங்கும் இருள் பரவிக் கொண்டிருந்தது.

வசந்த காலத்துக்கு இயற்கையான அமைதி நிறைந்த அந்தியின் மங்கிய ஒளியில் காட்டின் மத்தியில் அமைந்திருந்த சிறு கிராமம் மூடுபனியால் மூடப்பட்டு, காந்தி யிழந்ததாய்த் தெரிந்தது................எல்லாம் அசைவற்றுத் தயங்கிக் கொண்டு துயரத்தின் நிழலாய்த் தோற்றம் அளித்து சிறு கிராமம் அமைதியுடன் துயிலில் ஆழ்ந்தது.

ஏழைகளுடைய குடிசைகளின் உருவம் தெளிவாய்த் தெரியவில்லை. ஆங்காங்கு ஒரு தீபம் பிரகாசிக்கும். அடிக்கடி கதவு திறக்கப்படுவதால் ஏற்படும் 'கிரீச்' என்ற ஓசை கேட்கும். சட்டென்று நாய் குரைக்கும். மறுபடி சாந்தமாய் விடும். காற்றில் முனு முனுத்துக் கொண்டு மரக்கிளைகள் அசையும்; காட்டிற்குள்ளிருந்து ஒரு பாதசாரியோ குதிரையோ வெளியே வருவதைக் காணலாம்; அல்லது மாட்டு வண்டி 'கடக்' என்ற ஓசையுடன் ஊர்ந்து செல்லும். வண்டியில் போகிறவர்களும் பாதசாரிகளும் குதிரை மீது ஏறிச் செல்வோரும் வசந்த விடுமுறைக்காக மாதா கோயிலுக்குச் செல்லும் கிராம வாசிகளே யாவார்கள்.

கிராமத்தின் நடுவில் சிறு குன்றின் மீது அமைந்திருந்தது மாதாகோயில். இருளடர்ந்த ஓங்கி உயர்ந்த மணி மேடை நீலவானோடு அளவளாவிக் கொண்டிருந்தது.

மிகேயிச், மேடைக்குச் செல்லும் போது அவன் காலின் கீழ் ஏணிப்படிகள் 'கிரீச்' என்று சத்தமிடும். அவனுடைய விளக்கு விண்ணில் தோன்றும் தனித்தாரை போல் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருப்பதாகத் தோன்றும். மிகேயிச் அந்த மேடை மணி அடிப்பவன்.

அக்கிழவனுக்கு ஏணிப்படி ஏறுவது சிரமமாய்த்தானிருந்தது. அவனுடைய கால்கள் அவன் சொற்படி கேட்கவில்லை. அவன் கண்களில் ஒளியும் குன்றிவிட்டது. அவனைப் போன்ற கிழவர் இதற்குள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் ஈசன் எக்காரணத்தினாலோ அவனைக் காலன் வாயிலிருந்து தப்பித்துக் கொண்டே வந்திருக்கிறார். தன் பேரன்களையும் பிள்ளைகளையும்கூட அவன் மண்ணில் புதைத்து விட்டான். எண்ணற்ற கிழவரையும் வாலிபரையும் அவர்களுடைய 'ஓய்விட'த்தில் சேர்ப்பித்திருக்கிறான். ஆனால் இன்னும் அவன் உயிரோடிருக்கிறான்! இது கஷ்டந்தான். இந்த மணி மேடையில் அவன் இதற்கு முன் வசந்த விடுமுறையை வரவேற்றிருக்கிறான். குறித்த காலத்தை எண்ணிக் கொண்டு எவ்வளவோ முறை இதே மேடையில் காத்திருந்திருக்கிறான். ஆம்; கடவுள் இம்முறையும் அவனை......................

மேடை வாசலில் கைப்பிடியைப் பிடித்துக் கொண்டு நின்றான். மாதா கோயிலுக்குச் சுற்றிலுமுள்ள இருள் படிந்த நிலத்தில் சீராய் வைக்கப்படாத கல்லறைகளுக்குக் காவல் புரிவது போல் சிலுவைகள் கைகளை நீட்டிக் கொண்டு நின்றன. இவைகள் மேல் இலை பொதிந்த மரக்கிளைகள் சாய்ந்து கிடந்தன. அனந்த சித்திரையின் நினைவூட்டிக் கொண்டு கீழேயிருந்து பூக்களின் நறுமணம் மிகேயிச்சை அணுகிற்று.

ஒரு வருஷத்துக்குப் பின் அவன் எங்கேயிருப்பானோ? மறுபடியும் ஆழ்ந்த இரவை எழுப்பும் வெண்கல மணியை அடிப்பதற்காக இப்படிகள் ஏறுவானோ அல்லது அந்தத் தரையில் ஒரு மூலையில் சிலுவைக் கடியில் அழியா உறக்கத்தில் ஆழ்ந்துவிடுவானோ? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!........

அவன் போகத் தயார்தான். சரி, வருவது என்னவானாலும் இம்முறை ஆண்டவன் அருளால் வசந்த விடுமுறையை வரவேற்க முடிந்ததல்லவா?

"ஆண்டவன் அருள் பெருகுக" என்று அவன் நா, வழக்கம்போல் உச்சரித்தது. அவன் கைகள் சிலுவைக் குறிகாட்டின.

'மிகேயிச், ஏ, மிகேயிச்' என்று கீழிருந்து வந்தது ஒரு இனிய குரல். காவல்காரக் கிழவன் நீர் நிறைந்த கண்களுடன் மணி மேடையைப் பார்த்தான். அவன் முயன்றது மிகேயிச்சைக் காணவேயாகும்.

'என்ன வேண்டும்? இங்கே இருக்கிறேன். கண் தெரியவில்லையா?' என்று கூவினான் மிகேயிச்.

'கண் தெரியவில்லை. மணி அடிக்க நேரமாகியிருக்கும், என்ன சொல்கிறாய்?'

இருவரும் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தார்கள். ஆண்டவன் ஏற்றிய எண்ணற்ற தீபங்கள் அங்கு ஜொலித்தன.

................மிகேயிச் யோசித்தான். 'இல்லை. இன்னும் நேரமாகவில்லை. எப்போது அடிக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும்...........'

உண்மையில் அவனுக்கு நன்றாய்த் தெரியும். அவனுக்குக் காலம் அறிய கடிகாரம் வேண்டாம். ஆண்டவன் அளித்த விண் மீன்கள் இருந்தன....... மண்ணும் விண்ணும் ஆகாயத்தில் ஓடிய வெண்முகிலும் இருளில் மூழ்கிய காடும் அதன் 'முணு முணு' சத்தமும் 'கட கட' வென்று ஓடிய சிற்றாறும் அவனுக்குத் தெரியும்—அவன் அவற்றின் அம்சமேயாகி விட்டான். வாழ் நாள் முழுதும் வீணாகவா அவன் அவ்விடத்தில் கழித்தான்?

வெகு தூரத்தில் மறைந்திருந்த பூதகாலம் அவன் முன் மறுபடியும் காட்சி அளித்தது..................முதன் முறை தகப்பனுடன் அவன் இந்த மணி மேடையை அடைந்தான். ஆண்டவனே! அது நடந்து வருஷங்கள் எத்தனையோ ஆகிவிட்டனவே! ஆனால் சமீபத்தில் நடந்தது போல் அல்லவா தோன்றுகிறது............... தன்னை அழகிய வாலிபனாய்க் கண்டான். ஒளி நிறைந்த கண்கள்; பொலிவுற்ற முகம்; புழுதியைக் கிளப்பும் காற்று அன்றடிக்கவில்லை,— ஆனால் அவன் தலையைத் தடவிக் கொடுத்துக் கொண்டு ஓசையின்றி வீசியது. அந்தத் தென்றல் கீழே பாதையில் சிறிய ஜீவிகள் அசைந்து ஆடிக்கொண்டு சென்றன. குடிசைகள் மிகச் சிறிதாகத் தோன்றின. காடு விலகியது. அந்தக் கிராமம் நின்ற வெளியானது விரிவாய் எல்லையற்றதாய்ப் பரவியது...............

'அதோ அவை யெல்லாம் தெரிகின்றன' என்றான் அந்தத் தலை நரைத்த கிழவன். அவன் உதடுகளில் புன் முறுவல் தவழ்ந்தது. அதுவே வாழ்க்கையின் பாதை போலும். இளமையில் அதன் இறுதியைக் காண முடிவதில்லை. இப்பொழுது உள்ளங்கை நெல்லிக்கனி போல் ஆதி முதல் அந்தம் வரை—தனக்கென்று கருதியிருக்கிறானே—அந்த ஆறடி பூமி—அது வரை எல்லாம் நன்றாய்க் காண முடிகிறது..........................ஆம்; ஆண்டவன் அருள் பெருகுக! ஓய்வெடுக்கக் காலம் ஆகிவிட்டது........... வாழ்க்கைச் சுமையை கடவுள் அருளால் ஆண்மையுடன் அவன் சுமந்து விட்டான். இனி? நனைந்த பூமி, தாயைப் போல் அவனை வருந்தி அழைப்பதாகத் தோன்றியது........... விரைவில்...........அதிவிரைவில்!........

மணி ஆகிவிட்டது. மிகேயிச் ஆகாயத்தில் நட்சத்திரத்தைப் பார்த்தான். தலைத்தொப்பியை எடுத்து வைத்தான். சிலுவையை மனதில் எண்ணினான். மணி நாக்கைக், கட்டியிருந்த கயிற்றைப் பிடித்தான். மறுகணம் மணியோசை, இரவின் ஊதற் காற்றில் தவழ்ந்து சென்றது. ஒன்று இரண்டு, மூன்று,...........நான்காவது ....ஒன்றன் பின்னொன்றாகச் சாந்தமாய் புனிதமாய் எங்கும் நிறைந்த இரவில் மிதந்து வெளியில் கலந்தது அவ்வினிய கம்பீர ஓசை.

மணி ஓசை அடங்கியது. மாதா கோயிலில் பிரார்த்தனை ஆரம்பமாயிற்று. பிரார்த்தனையில் கலந்து கொள்வதற்காகவும் பாட்டுக் கேட்பதற்காகவும் கீழிறங்கி வந்து கதவருகில் நிற்பது மிகேயிச்சின் வழக்கம். ஆனால் இம்முறை அவன் மணி மேடையிலேயே நின்றுவிட்டான். படி இறங்க முடியாது. மேலும் மிகக் களைப்புற்றிருந்தான். ஆகவே

'பஞ்சி'ன்மீது உட்கார்ந்துவிட்டான். காற்றில் கலந்து சென்ற மணியோசை அவன் காதில் விழுந்தது. அவன் சிந்தனையில் ஆழ்ந்தான். எதைப்பற்றிச் சிந்தித்தான்? அவனுக்குத் தெரியாது. அந்த மேடையெங்கும் அவனுடைய சிறிய லாந்தரின் வெளிச்சம் விழுந்து கொண்டிருந்தது. ஒலித்துக் கொண்டிருந்த மணி, மங்கிய ஒளியில் கண்ணுக்குத் தெரியவில்லை. மாதாகோயிலில் எழுந்த பிரார்த்தனை கீதம் இடையிடையே காதில் விழுந்து கொண்டிருந்தது. மணி நாக்கில் கட்டியிருந்த கயிறு தென்றலில் அசைந்தாடிக் கொண்டிருந்தது. கிழவன் தலையைத் தொங்க விட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் மனம் கற்பனையுலகில் உலாவிக்கொண்டிருந்தது. 'அவர்கள் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார்கள்' என்று அவன் மனதில் எண்ணிக்கொண்டான். சிறுவரும் சிறுமியரும் ஒன்றாய்ச் சேர்ந்து பாடுவதாகவும் அதைத்தான் கேட்டு மகிழ்பங்கிற்பதாகவும் எண்ணிக்கொண்டான். 'காய்' என்ற வெகு காலத்துக்கு முன் இறந்துபோன பாதிரியார் பாட்டின் அடியெடுத்துக் கொடுப்பதாகவும் மற்றவர்கூடப் பாடுவதாகவும் எண்ணிக்கொண்டான். பால் வைத்த கதிர், காற்றில் அசைவதுபோல் நூற்றுக்கணக்கான குடியானவர்களுடைய தலைகள் குனிவதும் நிமிர்வதுமாயிருக்கும் காட்சியைக் கண்டான். குடியானவர்கள் கைகளால் சிலுவைக் குறி காட்டினார்கள்......அவர்கள் மண்ணுலகை விட்டுப் பல்லாண்டாகியும் நெருங்கிய பழக்கத்தால் இன்னும் அவருருவம் மனதிலிருந்து மறையவில்லை. தன் தந்தையின் காம்பீரமான முகத்தைக் கண்டான். மெய்யார்வத்துடன் ஆண்டவனை வணங்கித் துதித்துக் கொண்டிருந்த தன் சகோதரனை அவன் கண்டான். தானும் சொல்லி முடியாத இன்பமும் நம்பிக்கையும் கொண்டவனாய் உடல் வலியும் மன உறுதியும் வாய்ந்த இளங்காளையாய் அவர் நடுவே நின்று கொண்டிருப்பதாக எண்ணிக்கொண்டான். ஒரு கணம் அக்கிழவனுடைய உள்ளத்தில் பழைய நினைவுகள் புத்தொளியுடன் சுடர்விட்டுப் பிரகாசித்தன. அவ்வொளியில் சென்ற வாழ்க்கையின் பற்பல நிகழ்ச்சிகள் தெளிவாய்த் தெரிந்தன.

கடுமையான ஓயா உழைப்பைக் கண்டான். துயரம் என்னவென்று அனுபவித்து அறிந்துகொண்டான். கவலை என்னவென்று உணர்ந்தான்............ஆனால் இன்பம் எங்கேயிருக்கிறது? வறுமையின் கொடுமையால் இளம் முகத்தில் சுருக்கங்கள் காண்கின்றன. வலியுற்ற முதுகு வளைந்து போகிறது. ஏங்கி ஏங்கிப் பெருமூச்செறியும் தன் சகோதரனைப் போல் எல்லோரும் பெருமூச்சு விட ஆரம்பித்து விடுகிறார்கள்.

அதோ, இடது புறம் கிராமத்துப் பெண்களின் நடுவில் குனிந்த தலையுடன் வணக்கமாய் நின்றிருந்தாள் அவன் காதலி. பாவம், நல்ல பெண். அவள் ஆண்டவன் அடியை அடைவாளாக! எவ்விதக் கஷ்டங்களையெல்லாம் அவள் பொறுத்தாள்! வறுமையும் பிணியும் ஓயாத உழைப்பும் பெண்களுக்கு இயற்கையான இதர கஷ்டங்களும் அவளுடைய அழகைப் பறித்துக்கொண்டன. அவள்

கண்கள் ஒளி யிழந்துவிடும். இயற்கையான அமைதியை இழந்து உள்ளம் எதிர்பாராத இடையூறுகளை எண்ணி எண்ணித் துடிக்கும். இந்த நிலையில் அவனுக்கு இன்பம் எங்கே யிருக்கிறது? அவர்களுடைய அன்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாயிருந்த ஒரே மகனும் போராசைக் கிரையாய்விட்டான்........

அநாதைகளைக் கசக்கியதற்காக உள்ளம் வருந்தி மன்னிப்புக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்த தன் செல்வந்தனான எதிரியைக் கண்டான். தரையில் தலை மோதிக் கொண்டான். மிகேயிச்சினுடைய உள்ளம் கொதித்தது. அவன் முன் ஒளியிழந்த கற்சிலைகள் மனிதனுடைய துயரங்களையும் கொடுந் தன்மையையும் கண்டு கேலியாய் நகைத்துக் கொண்டிருந்தன.

அவ்வுலகம் சென்று போன உலகம். இன்றோ இருட்டில் ஏங்கி அழுது கொண்டிருந்த காற்றும் அக்காற்றில் அசைந்தாடிய கயிறும் மணி மேடையுமே அவனுலகமாய்த் தோன்றியது...........'கடவுள் என் நீதிபதியாகுக!' என்று தனக்குள் கூறிக் கொண்டு அக்கிழவன் குனிந்தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் முகத்தில் வழிந்தது.

'என்ன [illegible]' என்று கேட்டுக் கொண்டே மிகேயிச் எழுந்தான். 'ஆண்டவனே! நான் உண்மையில் தூங்கிப் போய் விட்டேனா? இதற்கு முன் இவ்வாறு ஏற்பட்டதேயில்லையே' என்றான் மேலும்.

அடித்துப் பழகிய கைகளால் மறுபடியும் விரைவில் கயிற்றைப் பிடித்தான். கீழே குடியானவர்களுடைய கூட்டம் எறும்புக் கூட்டம் போல் ஊர்ந்து சென்றது. வர்ணக் காகிதத்தால் செய்த கொடிகள் காற்றில் பறந்தன..............ஊர்வலம் மாதா கோயிலைச் சுற்றியது. 'இறந்தோர் மத்தியில் யேசு எழுந்தார்' என்ற இன்னிசை மிகேயிச்சின் காதில் ஒலித்தது.

கிழவனுடைய உள்ளத்தில் இக்குரல் எதிரொலித்தது. விளக்கு இன்னும் அதிகப் பிரகாசமாய் எரிவது போலவும் கூட்டம் ஆவேசம் கொண்டது போலவும் தோன்றியது. கொடிகள் உயிர் பெற்று விட்டன போல் தோன்றியது. இசையைத் தாங்கி வந்த காற்று மணியோசையையும் வாங்கிக்கொண்டு வெட்ட வெளியில் பரவியது.

இதற்கு முன் இவ்வளவு இனிமையுடன் மிகேயிச் மணி அடித்ததே யில்லை.

உயிரற்ற மணியில் கிழவனுடைய உள்ளமும் உணர்ச்சியும் கலந்து விட்டன போலும். அந்த மணி ஓசை பாடுவதும் அழுவதும் சிரிப்பதுமாய் ஓர் ஒப்பற்ற இசைக் கதம்பமாய் உயர்ந்து உயர்ந்து எண்ணற்ற விண்மீன்கள் எழில் சொரியும் விண்ணை அடைந்து மறுபடியும் நடுக்கத்துடன் மண்ணுலகில் சேர்ந்தது.

ஒரு வெண்கல மணி ஊக்கக் கத்தியது. இயேசு எழுந்து விட்டார். இதற்குள் இன்னும் இரண்டு இசை அலைகள் நடுங்கிக் கொண்டே இன்பக் குரலில் எடுத்துரைத்தன—'இயேசு நாதர் எழுந்து விட்டார்.'

தம் குரல் எங்கே கேட்காமல் போய் விடுமோ என்று பயந்து இசைக் கருவிகள் சிறு பிள்ளைகள் பாடுவது போல் ஆனந்தமாய் உற்சாகத்துடன் கிழவன் காதுகளில் பாடிற்று— 'இயேசு எழுந்து விட்டார்.'

துயரமும் கவலையும் நிறைந்த தன் வாழ்க்கையை மறந்து விட்டது அந்தப் பழுத்த உள்ளம். உணர்ச்சியற்ற மணி மேடையின் குறுகிய இடமே தன் வாழ்க்கையின் வீதி என்பதையும் மறந்தான் அக்கிழவன். புயலில் கிளையொடிந்து தனியாய் நிற்கும் தடி போல் தான் ஏகன் இவ்வுலகில் என்பதையும் அவன் மறந்து விட்டான்..........விண்ணையும் துயரத்திற்கிருப்பிடமான மண்ணையும் நோக்கி விரைந்து சென்ற அழுகுரலையும் கூக்குரலையும் நகைக் குரலையும் அக்கிழவன் செவியுற்றான். பிள்ளைகளும் பேரன்களும் தன்னைச் சூழ்ந்திருப்பதாகவும் அவர்களுடைய இன்பக் குரலைத் தான் கேட்பதாகவும் எண்ணிக் கொண்டான். தான் அனுபவித்தறியாத இன்பத்தைப் பற்றி முதியோரும் சிறியோரும் உல்லாசமாய்ப் பாடுவதாகவும் அவன் நினைத்தான். அவன் கயிற்றை இழுத்தான். கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது. இன்பமென்ற மாயையை எண்ணி அவன் உள்ளம் 'பட பட' வென்று அடித்துக் கொண்டது.

இவ்வளவு இனிமையாய் மிகேயிச் இதற்கு முன் மணி அடித்ததேயில்லை என்றார்கள் கேட்டவர்கள்.

பெரிய மணி திடீரென்று பதட்டத்துடன் ஒலித்து விட்டு மௌனமாயிற்று. பெரிய மணியின் ஓசை காற்றில் பரவுவதைக் கேட்டு வெட்கம் கொண்டனபோல் சிறிய மணிகளும் மௌனத்தில் ஆழ்ந்தன.

மணி அடிக்கும் கிழவன் முற்றிலும் களைத்துப்போய் 'பந்தி'யின் மேல் விழுந்தான். கடைசி முறையாய் கண்களிலிருந்து இருசொட்டுக் கண்ணீர் கன்னங்களில் வழிந்தது.

'யார் அங்கே? இன்னொருவனை அனுப்புங்கள்; மணியடிக்கும் கிழவன் தன் கடைசி மணி அடித்து விட்டான்.'

நான் வெற்றி பெற வேண்டுமென்பதில்லை. நான் சத்திய சந்தனாக இருக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். எனக்குச் சரியென்று படுகிற வழியிலேயே நான் செல்ல விரும்புகிறேன். சரியான பாதையில் போகிறவர்களுடன் போக விரும்புகிறேன். அவர்கள் தவறான வழியில் செல்கிற சமயத்தில், நான் அவர்களினின்று விலகிவிடுவேன்.

—அப்ரஹாம் லிங்கன்.

"ஜோதி"

அன்பர்களுக்கு ஓர் அரிய தருணம்

எட்டு சந்தாக்கள் சேர்த்துக் கொடுத்து

ஒரு வருஷ சந்தாதாரராய் ஆக வசதி

எப்படி?

1 எதிர்ப் பக்கமுள்ள எட்டு கூபன்களையும் எட்டு ஒரு வருஷ சந்தாக்களாகப் பூர்த்தி செய்து ஆபீசுக்கு அனுப்பவேண்டும்.

2 ஒவ்வொரு கூபனுக்கும் சந்தா சேர்ந்தவுடன் அந்தக் கூபனையும் சந்தாத் தொகையையும் மணியார்டர் கமிஷன் கழித்து உடனுக்குடன் ஆபீசுக்கு அனுப்ப வேண்டும்.

3 எட்டு கூபன்களும் அதற்குள்ள மணியார்டர் தொகையும் ஆபீசுக்கு வந்து சேர்ந்தவுடன் அவ்விதம் அனுப்பிய நண்பரின் 'ஜோதி' யின் ஒரு வருஷ சந்தாதாரராகச் சேர்த்துக் கொள்ளப்படும்.

4 எங்களது அச்சு கூபன்களை தவிர வேறு தனி கூபன்களை அனுப்பக்கூடாது.

மானேஜர்